ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

# குடி அரசு


| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | — ரூ. | 3—0 |
| 6-மாத சந்தா ,, | — ,, | 1—12 |
| வெளி நாட்டிற்கு ,, | — ,, | 5—0 |

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. ஈரோடு, ஆங்கிரஸ-ஹு வைகாசி-மீ 23-உ (5—6—1932) மலர் 6.



## பலமுள்ளவீரபுருடனாகை

குமரனாக, வாலிபத்தன்மையடைய, ஆண் பெண் மன மொத்துவாழ, இல்லற இன்பம் அனுபவிக்க, புத்திர பாக்கியம் பெற வழியில்லையேனா வருந்துபவர்கள்

## தங்கபஸ்பம்.

சாப்பிடுங்கள்.

அபாரதாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும் இல்வாழ்வில் அதிஅற்புத சுகந்தரும்.

48-நாள் பஸ்பம் விலை ரூ. 20. 21-நாளைக்கு ரூ. 10.

## மாதர்களுக்கு

இதுதான்வேண்டியது

கெர்ப்ப எண்ணெய்



மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். செர்ப்பாசயம் சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பம் உண்டாகும் மிக்க அநுபவமானது.

புட்டி 1-க்கு ரூ. 2.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி S. I.

தாது புஷ்டிக்கு

## "கெய்ரோடைன்"

சாப்பிடுங்கள்.

இந்தியா கவர்ன்மெண்டில் ரிஜிஸ்தர் செய்தது. நபும்சகர்களுக்கும் அளவு மீறிய தாதுபுஷ்டி தரும். உண்மையான நற்சாட்சிகளடங்கிய பெரிய புத்தகம் இனாமாக அனுப்புகிறோம். விலாசம்:

ஆர். எஸ். பதி அன்கோ (ரிஜிஸ்டர்டு) மதுரை.




பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது

## பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடம்:—"குடி அரசு" புத்தகாலயம் ஈரோடு,
இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

## அச்சாபீஸ்

## மிஷின் விற்பனை.

நமது ஆபீசுக்கு பெரிய மிஷின்கள் வரவழைத்து விட்டபடியால் தற்காலம் நல்ல கண்டிஷனில் மிக சுத்தமாக வேலை செய்து கொண்டிருக்கும் அடியில்கண்ட மிஷின்களை விற்று விடப்படும்.

டபுள் கிரவுன் சிலிண்டர் மிஷின் 1,
டிம்மி சிலிண்டர் மிஷின் 1.

உபயோகப் படுத்தப்பட்டு நல்ல நிலைமையிலுள்ள இங்கிலீஷ், தமிழ் போஸ்டர் டைப்கள்; பல ரகங்கள்.

நேரில் வந்து பார்த்து முடித்துக்கொள்ளலாம். மானேஜர்.

## குமரன் பிரஸ் காஞ்சீபுரம்.

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | இயற்கைமதம் ... | 0—8—0 |
| 2. | சிதம்பர ரகசியம் ... | 0—8—0 |
| 3. | சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | 0—4—0 |
| 4. | பகுத்தறிவேவிடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது) ... | 0—6—0 |
| 5. | மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | 0—8—0 |
| 6. | ஆராய்ச்சி அணிகலம் ... | 0—12—0 |
| 7. | சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... | 2—0—0 |
| 8. | மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... | 2—0—0 |
| | சுயராஜ்யம் யாருக்கு ... | 0—1—0 |
| | சாமிகளின் அடிமைகள் ... | 0—12—0 |

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ. 4—0—0 |
| ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் | ரூ. 4—0—0 |

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,**
ஈரோடு.

## சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

### 'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0
ஆசிரியர்: ஜி, அப்பாதுரையார்,
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P. O.
கோலார் தங்கவயல் (S. I.)

### முன்னேற்றம்.

வாரப்பதிப்பு.
சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 5—0—0
இந்தியாவுக்கு ரூ. 8—0—0
ஆசிரியர்:- கோ. சாரங்கபாணி.
விலாசம்:—
மானேஜர்: "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்.

### "சமதர்மம்"

சுயமரியாதை மாதப் பத்திரிகை.
ஆசிரியர்:— ஆர். ராஜகோபாலன்
வருடசந்தா உள்நாடு 1—0—0.
,, வெளிநாடு 1—8—0.
மானேஜர்,
சமதர்மம் ஆபீஸ்,
230-30வது வீதி ரெங்கூன்.

LEPROSY, LEUCODERMA PATCHES SYPHILITIC ERUPTIONS, ECZEMA, etc.

No Matter Hereditary or self-acquired. No risk of injection. Cured absolutely. For particulars please write with detailed descriptions of the disease in English.

Post Box No. 11413,
Calcutta.

## Read.
## *The 'Citizen'*

and become a True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.


For advertisement please apply to:—

The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.

## சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31 ந் தேதி "குடி அரசு"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும். மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.



## கோஷாயி பாதுஷா மாத்திரை.

விபசாரத்தினால் ஜெனித்த சர்வரோக சங்காரணி.

Dr. T. K. V. Chalam.

ஆண், பெண் உபயோகிக்க அனுபவத்தில் மேன்மை பொருந்தியது.

கிரந்தி, கள்ளிப்பூகிரந்தி, சொறுக்காய்கிரந்தி, அரிகிரந்தி, சொரிகிரந்தி, பெருங்கிரந்தி, யானைக்கிரந்தி, ஆமைக்கிரந்தி, அக்கரகிரந்தி, என்னும் 18 வித கிரந்திகள், முளிச்சூலை, முழங்கால் சூலை, கை, கால் பிடிப்புகள், வெள்ளை, வெட்டை, அரையாப்பு, மர்மஸ்தான இரணங்கள்; காது, கண், மூக்கு, புருவம், இவைகளை அரித்துக்கொண்டு போகும் இரணங்கள், புரையோடிய இரணங்கள், கொருக்கு முதலிய நோய்கள் ஜெனித்து தினத்திற்கு தினம் இரத்தத்தை முரித்து முகவசீகரத்தை தேய்வு பிறைபோல் குறைத்து வருவது. விசாரலீலையில் ஈடுபட்ட பக்தர்களுக்கும், அண்டிய நேயர்களுக்கும் அனுபவசித்தி.

மேற்கண்ட வியாதிகளுடன் ரேசித்துவரும் சகோதர சகோதரிகள் 7-நாள் 11-நேரம் கோஷாயி பாதுஷா மாத்திரையை சாப்பிட்டால் மேற்கூறிய ரோகங்கள் விலகி பூரண குணம் பெறக்கூடிய கோஷாயி பாதுஷா மாத்திரை 14 கொண்ட சீசா 1-க்கு ரூ. 3—0—0. உபயோகிக்கும் விதம் மருந்துடன். வி. பி. பாக்கிங் சார்ஜ் வேறு. சிலோன் முதலிய மலாய் வாசிகள் ஆர்டருடன் ரூபாய் 1—12—0 சேர்த்து முன்பணம் அனுப்பி வைக்கவும். அப்படி அனுப்பிவைக்காத ஆர்டர்களை அங்கீகரியா.

மேகரோக சந்ததியார்களுக்கு ஜெனித்த மேகம் 21, குஷ்டம் 13-க்கும் கோஷாயி மேக எண்ணையை உபயோகியுங்கள்.

உதவி டாக்டர்
T K V Chalam.

டாக்டர் B. A. எதிராஜ்,
[கால்ராபைரி]
கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

## இருக்க இடமின்றி ஏழைகள் தவிக்க மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் சாமிகளுக்கு ஏன்?

# கூட்டு.

## முன்னோர் அமைப்பு.

—:0:—

3-ம் பாகம்.

[கைவல்யம்]

என்னருமை அண்ணா! கடவுள் என்றால் யாவற்றையுங் கடந்து யாவற்றுள்ளும் கலந்து நிற்கும் ஒரு பெரும் பொருள் என்று சொல்லப்படுகிறது. உலகத்திலுள்ள மதங்களெல்லாம் பெரும்பாலும் அப்பொருளையே தலைமையாகக் கொண்டு நிற்கின்றன. அக்கடவுள் நிலைமையைத்தான் எல்லாச்சமய வாதிகளும் ஒன்றாகவே நிச்சயிக்கிறார்கள். அக்கடவுள் நிலைமையைப் பற்றியோ, அதன் அபார சக்திகளைப் பற்றியோ, சமய தர்க்கங்களைப்பற்றியோ, நான் உங்களிடம் வாதிக்கவில்லை. மற்றநாட்டுக் கடவுளைப் போல நமது நாட்டுக்கடவுளும் நமது ஊண், உடை, தொழில், கல்வி விவாக விவகாரங்களில் குறுக்கிடாமலிருந்தால் அந்தக்கடவுளைக்குற்றம் சொல்லுவதுமில்லை. கடவுள் சுகத்திற்காக ஆசைமிருந்து பக்திமேலிட்டு இவ்வுலக சுகத்தைவிட்டு கடவுளோடு கலந்துகொள்ளப்போகிறவர்களைத் தடுப்பதுமில்லை. அப்படியிருக்கக்கடவுளைக்குற்றம் சொல்லுகிறோம் என்றும் பொதுப்பட என் சொல்லுகிறீர்கள்.

அந்த கடவுளைப்பற்றி உங்களுக்கு எவ்வளவுதெரியுமோ அவ்வளவு எனக்குத்தெரியும். எவ்வளவு எனக்குத்தெரியாதோ அவ்வளவு உங்களுக்கும் தெரியாது. உள்ளம் கடந்து அப்பால் நிற்கும் கடவுளை உள்ளம் கடந்து அறிவால் கண்டு ஆனந்திக்கலாமென்றும், அதாவது இந்திரியங்கள் கலந்த இவ்வுலக சுகங்களிலுள்ள மனதை விட்டு அதற்கு அப்பாற்பட்ட சிந்தனா சக்தியென்னும் அறிவால் கடவுட்டன்மையைக்கண்டு அதோடுகூடிவாழ நினைப்பதே விசேடமென்று சொல்லப்படுவதை நீங்களும் படித்தும், கேட்டுமிருக்கிறீர்கள். நானும் அப்படியே தெரிந்திருக்கிறேன். இவ்வுலக விவகாரங்களைநான் எப்படிப்பற்றிக்கொண்டிருக்கிறேனோ அப்படியே நீங்களும் பற்றிக்கொண்டிருக்கிறீர்கள். இவ்வுலக சுக துக்கங்கள் நம்மிருவருக்கும் ஒன்றாகவேயிருக்கின்றன.

என்னருமை தம்பி! உண்மை தத்துவங்கள் உனக்கு விளங்கவில்லை. அந்தப்பெரும் கடவுளைத்தான் கோவில்களில்கொண்டு வந்து வைக்கப்பட்டிருக்கின்றன. கடவுள் பக்தியாலும், ஒழுக்கத்தாலும் நன்னடக்கை வருவதற்கே கோவில்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கடவுள் இல்லையென்றாலே ஒழுக்கம் கெட்டுப்போகும். பாவ கிருத்தியங்கள் அதிகமாய்விடும். சாஸ்திர அறிஞர்களான முன்னோர்களால் போடப்பட்ட வேலியெல்லாம் பாழடைந்துவிடும் ஆனதால் எந்தக்கடவுளையும், சாஸ்திரங்களையும்பெரியவர்களையும் குற்றம் சொல்லாமல் உங்களுடைய சீர்திருத்தங்களைச் செய்து கொள்ளுங்கள்.

என் அன்பிற்குரிய அண்ணா! இப்பொழுது சொன்னவைகளுக்கெல்லாம் எனது நண்பரில் பலர் குடி அரசு பத்திரிகையில் விரிவாக எழுதியிருக்கிறார்கள். நீங்களும் படித்திருப்பீர்கள். வியாபக அறிவில்லாதவர்களைப்போலவும், விவகாரத்தின் உண்மையை ஆலோசித்துப்பார்ப்பதற்குச் சக்தியற்றவர்களைப்போலவும் அல்லவே தாங்கள். வேதாந்த சித்தாந்தம் படித்தவர்களாயிற்றே. ஆங்கிலத்திலும் கலந்தவர்களல்லவோ. உலக அனுபோகமும் உங்களிடமுண்டே, அப்படிஇருந்தும் ஏன் விவகாரத்தின் உண்மையை உணரவில்லை என்றாலும், அதன் உண்மைகளை எங்களில் சிறியோனான நான் உங்களுக்கு விரித்துச்சொல்ல இந்த ஏட்டில் இடமில்லை என்றாலும், இடமுள்ளவரையிலும் சுருக்கிச்சொல்லுகிறேன்.

கடவுள் பேரைச்சொல்லி மனிதனை மனிதன் தாழ்த்துவதும், மோசம் செய்வதும், சமயத்தின் பேரைச் சொல்லி மனிதனை மனிதன் இழிவுபடுத்துவதும், சாஸ்திரமென்னும் பெயரைச்சொல்லி தன்னம்பிக்கையில்லாதகோழைகளாக்குவதும், ஜாதியின் பெயரைச்சொல்லி சமூகத்திற்கே துன்பத்தை விளைவிப்பதும், இத்தனையாலும் பெரியவர்கள் பேரைச்சொல்லி ஏமாற்றுவதுமான விஷயங்களிலேயே என் விவகாரங்களிருக்கின்றன என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். கடவுளுக்குச் சாதியில்லை, சமயமில்லை கடவுளை அடையப் போகிறவனுக்கு சாதியும் சமயமுமில்லை என்பதும் நீங்கள் உணர்ந்த விஷயம், நீங்களும் நானும் படித்த சாஸ்திரங்களும் அப்படியே சொல்லுகின்றன.

சைவர்களும், அவர்கள் ஆச்சாரிகளும் தங்கள் சாஸ்திரங்கள், புராணங்கள், திருமறைகள் முதலியவைகளிலெல்லாம் விஷ்ணுவை தேவனின் ஒருவனாகவே சொல்லியிருப்பதுமல்லாமல் இழிவுபடுத்திப்பாடியும் எழுதியும் வைத்திருக்கிறார்கள். அதுபோலவே வைணவ இதிகாச புராணங்களிலும், திருவாய் மொழிகளிலும் சிவபெருமானை ஒரு தேவனென்றே சொல்லியிருப்பதுமல்லாமல் இழிவுபடுத்தி எழுதியும் வைத்திருக்கிறார்கள். இதிலிருந்து சைவவைணவப் பண்டிதர்கள் மாறிமாறி இழிவுப்படுத்திப்பாடின பாட்டுகளோ அனந்தம். அந்தப்பாட்டைப்படித்து ஆடிப்பாடி பஜனை பண்ணும் பக்தர்களோ அநேகம். அந்தப்பாட்டைப் பதம்பதமாகப் பிரித்து இலக்கணப்பிழையில்லாமல் அர்த்தம் செய்யவந்த பண்டிதர்களோ இருகட்சியிலும் எத்தனையோ பேர். இந்தஇரண்டு தெய்வத்தையும்அறிவே தெய்வம், ஆன்மாவே கடவுள்; ஞானமே மோக்ஷம், பிரம்மமே உலகமென்னும் வேதாந்தி ஒத்துக்கொள்வதில்லை. அந்த வேதாந்தியை வைணவ சைவர்கள் பிரசன்ன பௌத்தனென்றும் மாயாவாதி என்றும் தள்ளியேவிட்டார்கள். இந்த மூன்றும் கூடித்தானே இந்துமதம்! இந்த மூன்று பேர்களாலும் தூஷணைக்கு உட்படாத ஒரு இந்து தெய்வமுண்டா? நாங்கள் அப்படித்தூஷிக்கவில்லை; அதற்காக வந்தவர்களுமன்று. பல கடவுளை சிருஷ்டித்து அதற்காக பல சமயங்கள், பல ஏற்பாடுகள், பல கொள்கைகள், பல ஜாதிகள் முதலியவைகளுமுண்டாக்கி ஏமாற்றி வருவதற்கு முதற்காரணமாகவிருக்கும் தெய்வங்களெல்லாம் சிறிது மறைந்துபோனால் நல்லதென்றே சொல்லுகிறோம்.

அதுவுமல்லாமல் கபிலர் விஷ்ணுவின் அவதாரமென்கிறார்கள். அவர் செய்த சாங்கிய மதத்தையும் கண்டிக்கிறார்கள். பதஞ்சலிக்குப்பரமசிவனால் யோக சாஸ்திரம் சொல்லப்பட்டது; அவர் ஆதிசேஷ அவதாரம், அவரால் சொல்லப்பட்ட யோகசாஸ்திரத்தையும் சங்கர பாஷியம் கண்டிக்கிறது. விஷ்ணுவின் தசாவதாரங்களில் ஒன்றான புத்தபகவானாலும், அம்சஅவதாரமான ரிஷபதேவராலும் உபதேசிக்கப்பட்ட பௌத்த சைன மதங்களை சங்கரர் அவதாரமான சங்கரரும், விஷ்ணு அம்சமான ராமானுஜரும், சுப்பிரமணிய அவதாரமான திருஞான சம்பந்தரும் கண்டித்தார்கள். இதையெல்லாம் கவனித்தால் இவர்களில் யார் பெரியவர்கள், இந்து சமயப்பிரிவுக்குள் எந்த சமயம் தள்ளப்படாதது, குற்றம் சொல்லி கண்டித்தவர்களும் கண்டிக்கப்பட்டவர்களும் பெரியவர்களாகச் சொல்லப்படுகிறவர்கள்தானே? இந்த சமயங்களின் தொல்லையானபாரம் எங்கள் தலையில் ஏறி கழுத்தை அப்படியும் இப்படியும் திருப்பவும் விடாமல் பிடித்துக் கொண்டிருக்கும் பிடிப்பைத்தளர்த்த வேண்டுமென்பதே எங்கள் விவகாரம்.

என்னண்ணா! இதை இன்னும் கருத்தோடு கவனியுங்கள்! சிவனுடைய இருதயமே விஷ்ணு, விஷ்ணுவின் இருதயமே சிவன், என்னிடத்தில் பக்தி செய்து சங்கரனைத்தூஷிப்பவனும், சங்கரனிடத்தில் பக்தி வைத்து என்னை தூஷிப்பவனும் சூரியன், சந்திரன் உள்ளவரையில் கோரமான நரகத்தையடைவார்கள்” என்று ஸ்ரீ கிருஷ்ணன் சொன்ன வார்த்தை மெய்யா? பொய்யா? பொய்யானால் எல்லாப்பெரியவர்கள் வார்த்தையும், பாகவதம், பாரதம், கீதை, பெருமாள் திருப்பதியிலிருந்து மதுரை கள்ள அழகர் வைகையாற்றில் இறங்கி மண்டபமண்டபமாக எழுந்தருளி துலுக்கனச்சியார் பள்ளியறை போய்ச்சேருகிறவரையிலும் பொய்யாகவே போகட்டும். அந்த ஸ்ரீ கிருஷ்ணன் வார்த்தை மெய்யானாலோ சைவசமய ஆச்சாரிகள் சந்தானகுரவர்கள், சமயக்குரவர்கள், அவர்களைச்சேர்ந்தவர்கள், சைவப் பண்டிதர்கள், சைவ பக்தர்கள் எல்லாம் இன்றைக்கும் என்றைக்கும் கோர நரகத்திலேயே கிடக்கவேண்டும். அதுபோலவே வைணவ ஆச்சாரிகள், ஆழ்வார்கள், ஜீயர்கள், பாகவதர்கள் இவர்களைச்சேர்ந்த பக்தர்களெல்லாம் என்றைக்கும் கோர நரகத்திலேயே கிடக்கவேண்டும்.

ஸ்ரீ கிருஷ்ணன் வார்த்தையை அநேகமாக இந்து சமயவாதிகளெல்லாம் மெய்யென்றே சொல்லுவார்கள். மெய்யானால் ஸ்ரீ கிருஷ்ணனுக்குப்பின் உண்டான சைவவைணவ சமயவாதிகளெல்லோரும் கோரமான நரகத்தில்தானிருக்கவேண்டும். இனியும் இப்பொழுதுள்ள சைவவைணவ கிரந்தங்களை ஆதாரமாகக்கொண்டு நடக்கிறவர்களும், இனியும் நடக்கப் போகிறவர்களும் ஸ்ரீ கிருஷ்ணன் வார்த்தைப்பிரகாரம் நரகத்திற்குத்தான் போகவேண்டும். அதுபோல எங்களுக்கு நரகமில்லை; ஏனெனில் இரண்டு தெய்வங்களால் சொல்லப்பட்டதாகச்சொல்லப்படும் சாஸ்திரங்களும், அவர்களைப்பற்றி எழுதப்பட்ட நூல்களும் நியாயத்திற்கும் மனித ஒழுங்கிற்கும் ஒத்துவராததும் ஒத்துக் கொள்ளப் படாததாகவுமிருப்பதால் நாங்கள் அதை நம்புவதில்லை. தில்லை என்று சொல்லப்படும் சிதம்பரத்துக்கு: இமயகிரியிலிருந்து கைபர் கணவாய் வழியாக மூவாயிரம் அந்தணர்களோடு சிவபெருமான் வந்து “அந்தணர்களுக்கு நான் அடிமை” என்று சீட்டெழுதிக்கொடுத்ததாகச் சொல்லப்படுவது உண்மையாகவிருக்குமா? அப்படித்தான் ஒருதெய்வமிருக்குமா? அதுதான் தெய்வத்திற்குவேலையா? நம் நாட்டைவிட அகண்டாகாரமாக வியாபித்து சுகபோக ஆனந்தங்களில் அமர்ந்திருக்கும் மற்றநாடுகளிலுள்ள எந்தத்தெய்வமாவது இவ்விதசீட்டு எழுதிக்கொடுத்ததா? இல்லையே, அதை நம்மவர்களையும் நம்பும்படியாகச் செய்தவர்களையும் நமது நாட்டை ஏமாற்றி தங்கள்கூட்டத்தார்களைச் சிறப்பித்துக்கொள்ளவந்தவர்களென்றே நினைக்கிறோம்.

(தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க)

# Do we still require caste?

# நமக்கு இன்னும் சாதி வேண்டுமா?

(திருமதி கே. ஆண்டாள் அம்மாள்)

(சென்ற வாரத்தொடர்ச்சி)

இனி வைணவ சமயத்துள்ளும் சாதி வேற்றுமையானது அவர்கள் கடவுளாகக் கொண்டுள்ள திருமாலின் திருவடிகளை அடைய வொட்டாமல் தடுக்கும் பெருந்தடையாதலைக் காட்டும் வரலாறுகள் பல இருக்கின்றன. அவற்றுட் சிலவற்றை இங்கே எடுத்துக் காட்டுகிறேன்.

திருமாலுக்குத் தொண்டு செய்து அவரைப் பாடிய ஆழ்வார்கள் பன்னிருவரில் ஒருவரான திருப்பாணாழ்வார் என்பவர் பறையரில் இசை பாடும் வகுப்பிற் சேர்ந்த பாணர் குடியிற் பிறந்தவராக இருந்தும் அவரை லோகசாரங்க முனிவரென்னும் அந்தணர் காலில் விழுந்து வணங்கி தமது தோளின்மேல் ஏற்றிக் கொண்டு போய் கோயிலில் விட்டதாகச் சொல்லப்பட்டு இருக்கிறதே! இதற்கு வைதீகர்கள் என்ன சொல்லுகிறார்கள்.

மிலேச்ச குலத்தில் பிறந்த திருமங்கையாழ்வாரை உயர்ந்தவராக ஏன் வைணவர்கள் பாராட்டுகிறார்கள்? அவர் குலம் மிலேச்சமென்று இவர்களுக்குத் தெரியாதா?

பொய்கை, பேய், பூதம், முதலிய ஆழ்வார்களின் குலங்கள் இன்னவை என்பது புலப்படாதிருந்தும் அம்மூவரையும் ஏனையெல்லாரினும் சிறந்தோராக ஏன் வைணவர்கள் கொண்டாடுகிறார்கள் என்பது தான் எங்களுக்குப் புலப்படவில்லை.

இன்னும் நம்மாழ்வார் எனச்சிறந்தெடுத்துக் கொண்டாடப்படும் சடகோபர் வேளாள குலத்திற் பிறந்தவராயிருந்தும், பார்ப்பன குலத்திற் பிறந்தவராகிய மதுரகவியாழ்வார் அவர்க்கு மாணாக்கராகி தொண்டு செய்ததாகச் சொல்லப் பட்டிருக்கிறதே இதற்கு என்ன செய்வது. நாங்களா மதுரகவியாழ்வாரை சாதி வேற்றுமை இல்லாமல் இருக்கும்படி சொல்லிக் கொடுத்தோம்.

இவ்வாறு வைணவர்கள் பெரியவர்களாகவும், மதக்குருக்களாகவும், கடவுளை அடைந்ததாகவும் சொல்லப் பட்ட அடியவர்கள் யாவரும் சாதிவேற்றுமை இல்லாது இருந்திருக்கும் பொழுது, அவரைப் பின்பற்றுகிற இவர்கள் சாதியைக் குரங்குப் பிடியாகப் பிடிப்பது ஏனோ தெரியவில்லை.

இது காறும் வைதீகர்கள் கூறுகிறபடி அவர்கள் மத நூல்களிலும் சாதி வேற்றுமை சொல்லப்பட வில்லை என்றும், வைதீகர்கள் தங்களால் பெரியோர்களாகக் கொண்டாடப் பட்டவர்கள் சாதி வேற்றுமை இல்லாது இருந்திருக்கிறார்களென்றும் எனக்குத் தெரிந்த மட்டில் எடுத்துக்காட்டினேன். இவ்வளவையும் வைத்துக் கொண்டு நல்லதை எடுத்துக் கொள்ளாமல் கெட்டதை விடாமல் பிடித்துக் கொண்டு, எங்கள் மதம் போச்சு; ஜாதி போச்சு, என்று ஓலமிடுபவர்களின் பொய்க்கூற்றைப் பகுத்தறிவுடைய பெரியோர் நகைக்காமல் விடுவரோ என்று வாசகர்கள் உணரவும்.

இறக இனி சாதி வேற்றுமை பழமையாக உள்ள தென்றே கொண்டாலும் அதனைத் தழுவி யொழுகல் வேண்டு மென்பது பகுத்தறிவில்லார் கூற்றும்.

கடந்தனயாவும் நல்லன வென்று கொள்வதற்கில்லை. புதியன வெல்லாம் தீயன வென்று கொள்வதும் அறிவுடைமையாகா. கடந்தன வற்றில் தீயனவும் உண்டு, புதியனவற்றில் நல்லனவும் உண்டு.

இக்காலத்திலுள்ள பல்வகை மக்கட் பிரிவினரும் தத்தமக்குப் பண்டு தொட்டே உரிய கடமைகளிலாவது பிறழாமல் வாழ்கின்றனரோ வென்றால் அதுவுமில்லையே, அப்படி வாழ்வதும் முடியாத காரியமே. காலம் மாறிக் கொண்டே வருகிறது. அதற்குத் தக்கவாறு, எண்ணங்களும் வேறு பாடு அடைகிறது.

பார்ப்பனரிற் பெரும்பாலார் தமக்குரிய நூல் ஓதுதல் வேள்வி வேட்டல், முதலான தொழில்களை அறவே கைவிட்டு ஆங்கில நூல்களைக் கற்று தம்மால் மிலேச்சராகக் கருதப்பட்ட வெள்ளைக்காரரின் கீழ் வேலைகளில் அமர்ந்து அவர்கள் ஏவிய பற்பல தொழில்களையும் செய்து வருகிறார்கள் அல்லரோ?

இங்கனமாக தமக்குரிய தொழில்களைக் கைவிட்டு அரசரின் கீழ் அலுவல் பார்ப்போர் பார்ப்பனர் ஆகமாட்டார் என்று மனுமிருதி கூறியும், அரசரின் கீழ் ஊழியம் செய்வதே இப்போது அவர்கட்கு இயற்கையாய் விட்டதன்றோ. கடல் கடந்து வேறு நாடுகளுக்குப் போதல் பார்ப்பனர்களுக்கு மனுமிருதியில் விலக்கப்பட்டிருந்தும், அவர்களிற் பலர் கடல் கடந்து தேடித்திரும்பி வந்து தம்மினத்தவரோடு உறவு கலந்து பார்ப்பனரிற் சிறந்தோராகக் கருதப்படுதலை நாம் காண்கின்றனம் அல்லமோ!

"உணவு சிற்றுண்டி முதலிய விற்றலாலும், இசை பாடுதலாலும், சோதிடஞ் சொல்லுதலாலும், சம்பளம் பெற்றுக் கொண்டு பிறர்க்குக் கல்வி கற்பித்தலாலும், உயிர்பிழைப்போர் பார்ப்பனர் ஆகமாட்டார். அவர் மிக இழிந்தோரே யாவர்" என்று மனு மிருதி சொல்லியும் இப்போது இத்தகைய தொழில்களைச் செய்து வயிறு வளர்த்தலே அவர்கட்கு இயற்கையாய் வந்து விட்டதன்றோ.

இவ்வாறு பார்ப்பனர்கள் தமக்கு உரிய வழக்கங்களை கைவிட்டு இக்காலத்துக்கு ஏற்றபடி வாழ்தல் போலவே மற்றை வகுப்பினருந் தத்தமக்குரிய பழைய தொழில்களையும் முறைகளையும் கைவிட்டு இப்புதிய தொழில்களையும் முறைகளையும் கைப்பற்றி நடந்து வருகிறார்கள் மேலும் இந்நாட்டவர்களுள், ஆண்பாலார் தமக்கு வழக்கமாயுள்ளபடியே உடையுடுத்தாது, மேல் நாட்டவரைப் போற், காற்சட்டை மேற்சட்டையிட்டும், தலையிற் குல்லா தொப்பி கவிழ்த்தும் தமது பழைய முறையை மாற்றி வருகின்றனரல்லரோ?

பத்தாண்டுகளுக்கு முன் காலையிற் பழைய சோறும் மோரும் உண்டு நன்கு வளர்ந்தவர்களெல்லாம், இப்போது விடியும் நேரத்திலேயே காப்பித் தண்ணீரும் ரொட்டியும் உண்ணக் கற்றுக் கொண்டனரே. இவ்வாறு மக்களுடைய நாகரிக வளர்ச்சிக்கும் அறிவின் மேன்மைக்கும் ஏற்ப காலந்தோறும் பழைய ஏற்பாடுகள் அழிந்து போதலும் புதிய ஏற்பாடுகள் புகுந்து பொருந்துதலும் இயற்கையாம்.

ஆகவே சாதி வேற்றுமை பழமையானதாக இருந்தாலும் தீமை பயப்பதால் அதை கைப்பற்ற வேண்டுமென்பது சிறிதும் பொருந்தாது என்றறியவும்.

இனி சாதிக் கட்டுப் பாட்டால் விளைந்திருக்கும் தீமைகளை ஆராய்வாம்.

அளவிறந்த சாதிக்கட்டுப் பாட்டால் நம்மனோர் பெற்ற பயன் ஏதேனும் உண்டா? ஏதுமே இல்லை. அவற்றால் உயர்ந்த பயன்கள் உண்டாகாவிடினும் விடுக, தீமைகளேனும் விளையாம லிருக்கின்றனவாவென்றால் அப்படியுமில்லை, அவை நன்மையைத் தராதமட்டில் அமையாமல் அடுத்தடுத்துப் பல தீமைகளையும் விளைவிக்கின்றன.

தம்மை உயர்ந்த சாதியாராக நினைப்பவர்கள் தம்மோடொத்த மக்களை எவ்வளவு இழிவாக நினைத்து இறுமாக்கின்றார்கள். இழிந்தோராக ஒதுக்கப்பட்டவர்கள் எவ்வளவு துன்பத்தை அடைந்தாலும் அவர்களை உயர்ந்த சாதியார் என்போர் கண்ணெடுத்தும் பார்க்கின்றார்களில்லையே. தாழ்ந்த சாதியாரிடத்தில் எல்லா வகையான ஏவற்றொழிலையும் வாங்கிக் கொண்டு அவற்றால் மிக்க செல்வமுடையராய் வாழ்கின்றவர்கள் அவ்வேழை ஏவலர், ஒரு நாளைக்கு ஒரு வேளை கூழ் உணவு கூடக்கிடையாமற் களைத்துக்கிடக்க அவர்கட்கு ஒரு பிடி சோறாவது கொடுக்கிறார்களா? இல்லையே.

இழிந்த சாதியார் சுடு வெயிலில் நாள் முழுதும் நின்று கை எரிய கால் ஓய, முதுகு நோவ வெட்டி எடுத்துத் தந்த கிணற்று நீரைத் தமது வீட்டு நிழலிலிருந்து வெட்டிவேர் இட்டு மணம் ஊட்டிப் பருகுகின்ற மேற்சாதியார், அக்கீழ்ச்சாதியார்கள் வெயிலால் நாவறண்டு, உடல் தளர்ந்து ஒரு குடங்கை நீராவது முகந்து குடிக்கலாம் என்று அக்கிணற்றண்டை வந்தால் அவர்களை எவ்வளவு வன்னெஞ்சத்தோடு துரத்துகின்றனர்.

தீண்டாமை நோய் எல்லாரிடத்தும் பரவி நிலைத்து இருக்கிறது. மனித வகுப்பை, மற்றொரு மனித வகுப்பு தீண்டக்கூடாதாம், இது என்ன அநீதி, கொடுமையிலும் கொடுமை நெருப்பைத் தீண்டினால் சுடும், பாம்பை தீண்டினால் கடிக்கும் அப்படி இருக்க மனிதனை மனிதன் தீண்டினால் என்ன ஆபத்து வரும்.

'பார்ப்பானுக்கு மூத்தோன் பறையன், கேட்பாரில்லாமல் கீழ் சாதியானான்' என்றபடி பறையர், ஒதுக்கப் பட்டவர்கள் என்று பொய் உரை கூறி நமது சகோதர சகோதரிகளான 7 கோடி மக்களை அதிக துன்பத்திற்கு உள்ளாக்கி வருகிறார்கள்.

பறையரை கோயிற் கோபுர வாயில்களிலும் நெருங்க விடாத போலி உயர்ந்த சாதிக்காரர்கள் மற்ற சமயத்தினராய், எல்லா வகையான ஊனும் உண்ணும், கிருஸ்த்துவ, மகமதிய, வெள்ளைக்கார அதிகாரிகள் வந்தால் அவர்கள் முன்பல்லை இளித்துக்காட்டி அவர்களைக் கோயினுள்ளே அழைத்துச் செல்வது ஏன் என்று தான் கேட்கிறோம்.

நமது சகோதர சகோதரிகளான ஆதிதிராவிட மக்கள் படும் துன்பம் அனந்தம். அவர்கள் முன்னேற்றம் அடையாதபடி உயர்ந்த சாதி இந்துக்கள் செய்து வரும் கொடுமை அனந்தம்.

பறையர்கள் பள்ளிக்கூடம் தெருவில் இருக்கக்கூடாதாம். அவர்கள் படிக்கக்கூடாதாம், கிராப்பு வைக்கக் கூடாதாம், வெள்ளை வேஷ்டி கட்டக்கூடாதாம். அழுக்கு வேஷ்டி இருந்தால் அதை முழங்காலுக்கு மேல் கட்டவேண்டுமாம். பெண்கள் மேல் ஆடை போடக்கூடாதாம், மீறிப் போட்டால் மாரை அறுத்து விடுவதாம். அவர்கள் நாகரிகமான நகைகள் போடக்கூடாதாம், குடைகள் பிடிக்கக்கூடாதாம். புஸ்தகம், பெட்டி முதலியவைகளைக் கையில் பிடிக்கக்கூடாதாம். இப்படியெல்லாம் உயர்ந்த சாதி இந்துக்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிபந்தனைகள் ஏற்படுத்தி இருப்பதாக நாம் அடிக்கடி பத்திரிகையில் படிக்கிறோம்.

இந்தக்கொடுமைகளை எந்த பகுத்

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க

# மதமென்பதென்ன?

அமெரிக்க ஆசிரியர், இங்கர்சால்

பாஸ்டன் நகரத்தில் 1899ம் வருஷத்தில் அமெரிக்க மதச்சுதந்திர சங்கத்தில் செய்த சொற்பொழிவு.

எல்லாம் வல்ல எங்கும் நிறைந்த ஒரு கடவுள் யாவற்றையும் படைத்து, அவற்றை ஆண்டு நடத்தி வருவதாயும், சிருஷ்டிப் பொருள்களெல்லாம் அக்கர்த்தாவிற்கு அடங்கியும், வணங்கியுமிருக்க வேண்டுமென்றும்; இன்னும் இக்கடவுள் தரும் கட்டளைகளைப் பணிவுடன் ஆற்றுபவனே சமயநெறி கடவாதொழுகுபவனென்றும் சொல்லப்படுகிறது, இத்தகைய ஒரு மதமே பிரபஞ்சத்தில் பொதுப் படையாக பெரும்பாலாராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

பல நூற்றாண்டுகளாக இக்கடவுள் பலிகளை விரும்புவதாயும், தாய் தந்தையர் தம் குழந்தைகளது இரத்தத்தைச் சிந்துவதனால் இக்கடவுள் திருப்தியும்மகிழ்ச்சியுமடைவதாகவும் பல மக்களாலும் நம்பப்பட்டு வந்தது பின்னால் இவர்கள் ஆடுமாடுகள்கோழி சேவல் முதலியவற்றின் இரத்தப் பலிகளினால் திருப்தியடைவதாகவும் மெய்யடியார் செய்யும் இத்தகைய பலி, தியாகம், யாகாதி வகைகளுக்கு பதிலாக இவர் வான மழையையும், வையகச் செழிப்பையும், தான்ய விளைவுகளையும் மக்களுக்குதவுவதாகவும் கருதப்பட்டது. இத்தகைய யாகங்களையும், தியாகங்களையும் செய்யா விட்டால் இக்கடவுள் பஞ்சத்தையும், நோயையும் பூமிஅதிர்ச்சியையும் வெள்ளத்தையும் அனுப்புவாரென்றும் மக்கள் நம்பினர்.

கிறிஸ்தவ மதத்தின் பிரகாரம் இந்த நம்பிக்கைகடைசியாகக்கடவுள் தனது குமாரன் கொலையுண்டதின் காரணமாய் அவரது இரத்த பலியை ஏற்றுக் கொண்டு திருப்தியடைந்து அதன் பின்னர் வேறு இரத்த பலிகளை விரும்புவதில்லையென்ற கொள்கையில் வந்து முடிந்திருக்கிறது. (இந்துக்கள் இன்னும் பல விதமானஇரத்தபலிகளில் நம்பிக்கையுடன்உயிர்க்கொலைகள் செய்து வருவது சர்வசாதாரணமாக விருக்கிறது)

இவ்வநேகவாயிர வருஷங்களாய் மக்கள், இக்கடவுள் தியானங்களைக் கேட்டு வரமருளியதாகவும், பாவங்களைமன்னித்துபக்தர் தம் ஆத்மாக்களுக்கு முக்தியளிப்பதாகவும், நம்பி வந்தனர். பொதுவாக இந்நம்பிக்கைகளையே மதமென்னலாம்.

இவற்றினின்றும் பின்வரும் கேள்விகள் எழுகின்றன:—

நமக்குத் தெரிந்த அல்லது நாமறிந்த எந்த சம்பவத்தையாவது அல்லது உண்மையையாவது மதம் அடிப்படையாகவுடையதா? கடவுள் என்ற ஒருவர் இருக்கிறாரா? அவர் உங்களையும் என்னையும் படைத்தவரா? எப்பொழுதாவது வரம் கொடுத்ததுண்டா? எந்த நரபலியாவது அல்லது மிருக பலிகளாவது காண முடியாத இக்கடவுளது சகாயத்தைச்சம்பாதித்ததுண்டா? முதலாவதாக எல்லாம் வல்ல இறைவன் மக்களையும், அவர் தம் சந்ததிகளையும் படைத்தாரா? அறிவிலாதல்லலுறும் மாந்தரை ஏன் படைத்தார்? கடவுள் குருடுகளையும், திக்கற்றவர்களையும் என் சிருஷ்டித்தார்? பாவிகளையும் பயித்தியகாரர்களையும் படைத்ததேனோ? சர்வஞானியும், சர்வாதிகாரியுமான ஒரு கடவுள் இத்தகைய சிறுமைகளையும், குறைகளையும் படைத்ததற்கு ஏதேனும் முகாந்தரம் காட்ட முடியுமோ? பிறப்பினால் இத்தகைய சிறுமையடைந்தாரும் தம்மை இங்கனம்படைத்தவனிடம் கடமைப்பட்டுளரோ? இரண்டாவதாக ஒருசர்வல்லமையுள்ள கடவுள் இந்த உலகத்தை ஆண்டு அதை நடத்துகிறாரா?

எல்லாத்தலைவர்களுக்கும், அரசர்களுக்கும் சக்கரவர்த்திகளுக்கும்இன்னும் அரசிகளுக்கும் அவர்தாம் காரணமா? நடந்த யுத்தங்களுக்கெல்லாம், அதில் ஆறாய்ப்பெருகியோடிய ரத்தத்திற்கெல்லாம் அவர்தான் பொறுப்பாளியா?

பல நூற்றாண்டுகளாயிருந்த அடிமை வியாபாரத்திற்கும்; ஓயாத சவுக்கடியினால் தீராத துன்புறுமுழுதுகினர்களுக்கும்; பால் மணம் மாறாக் குழந்தைகளைப் பிரித்து கொடிய மாந்தர் விற்பனை செய்ததற்கும்; குடும்பங்களைப் பிரித்து சின்னாபின்னப் படுத்தியதற்கும்; அவர் தான் பொறுப்பா? மதத்தின் பெயரால் செய்த கொடூரங்கள் அத்தனைக்கும் மக்களைக்கழுவேற்றியதற்கும், தீயிலிட்டெரித்ததற்கும்; வெஞ்சிறையில் குட்டையிலிட்டுத் துன்புறுத்தியதற்கும்; அவர்தான் பொறுப்பா? கொடியர்களும் துன்மார்க்கர்களும் வீரர்களையும், சன்மார்க்கர்களையும் அழித்திடுதல் கண்டும் சோம்பியிருந்தாரா? கொடுங்கோலரக்கர் குணமிகு தேசாபிமானிகளைக் கொலை செய்திடுதல் கண்டும் சும்மா கிடந்தாரா? வெஞ்செயலரக்கர்பக்தர்களைத் துன்புறுத்தி ஆவிவேக எரித்திடுங்காலும் அஞ்சிக்கிடந்தாரா? இத்தகைய கடவுளை மதிப்பதெங்கனம்? தனது நண்பர்களைப் பகைவர்கள் துன்புறுத்தி எரித்திடுங்கால் அதைத்தடுத்திடும் சக்தியுடைய ஒரு சாதாரண மனிதனும் அதைப்பார்த்து வாளாவிருப்பானா? நண்பரினும் பகைவரைப் பேணும் இழிதன்மையுடைய பேயையும் காணுதலரிதன்றோ?

சர்வ வியாபகமாய் சர்வவல்லமையும் நற்குணமும் படைத்த ஒரு கடவுள் இவ்வுலகையாள்வதுண்மையாயின் பெரும் சண்டமாருதப் புயற்காற்றுகளுக்கும், பூமி திடுக்கிடக்கலக்குமதிர்ச்சிகளுக்கும், பஞ்சங்களுக்கும், நோய்களுக்கும் நாமென்ன சொல்லக்கூடும்: சிசுக்களை வருத்தும் பல வகைப்பட்ட புண்களுக்கும், சிறிய கிருமிகளுக்கும், பெரிய ரோகங்களுக்கும், ஆயிரக்கணக்கான நோய்களுக்கும் வழி சொல்வதெங்ஙனம்? கூற்றுவனெனத் திரியும் கொடிய மிருகங்களுக்கும், நெடியவிட சர்ப்பங்களுக்கும் வகையிடுவதெவ்வாறு? உயிரே உயிரைத்தின்றழிக்கும் உலகினுக்கென்னுரைப்பது? அளவிலா அருட்சோதிக்கடவுள், படைத்தருளுவது நெடிய மூக்குகளும், கொடிய நகங்களும், கூரியபற்களும், தேறிய விடமும் தானா? பாதவித்துப் பறந்தோடும் புள்ளினங்களைப் பிடித்துப்பகுப்பதற்காவோ பரந்த இறகுகளைப் பருந்துகளுக்கருளியது? எண்ணிறந்த உபயோகமில்லாத உயிர்களை உள்ளே பெருகி, உயரிய இனங்களின் உடம்புகளைத் தின்னுவதற்காகவா படைத்தருளினான்? நுணுகிய கண்ணின் நரம்புகளை அரிப்பதற்காகவா அணுப்போன்ற பூச்சிகளை ஆக்கினான்?

அணுவினுஞ் சிறிய ஒரு பூச்சியின் பசியைத் தணிப்பதற்கு ஒரு மனிதனைக் குருடாக்குதல், உயிர்கள் உயிர்களைத் தின்றுவாழுதல், கொடுமையென்னும் குன்றின் சிகரத்தினின்று சிதறும் குருதி வீழ்ச்சியின் பெருக்கு, இவற்றைச் சிறிது சிந்தியுங்கள். மடிபவர் எண் மதிக்கற்பாலதோ? என்னே இவர்தம் தயை, அருள்? இவ்வுண்மை நிகழ்ச்சிகளினின்று நோக்குழிமதமென்பதுதான் என்னவாயிருக்கக்கூடும்?

மதமே! உன் பெயர்—பயமே?

பயமே பீடம் கட்டுகிறது—பலியும் கொடுக்கிறது. பயமே ஆலயம் நிறுவி, மனிதர் தம் தலை வணங்கச் செய்கிறது. பயமே கால்களை முடக்கி தியானம் செய்யச்செய்கிறது. பயமே அன்பு போல் பாசாங்கு செய்கிறது. மதம் அடிமை நலங்களான கீழ்ப்படிதல், அடக்கம், தன்னை வெறுத்தல், துன்பங்களை மறத்தல், எதிர்க்காமை ஆன இவற்றைப்போதிக்கின்றது.

மதமும் பயமும் தூண்டுகின்ற உதடுகள்.

“அவன் என்னைக்கொன்றாலும் நான் அவனை நம்புவேன்” என்னும் வாக்கியத்தை உச்சரிக்கின்றன. இதனினும் கீழாய பாதாளம் வேறு வேண்டா. மதம் தன்மதிப்பையும், சுதந்திரத்தையும், மனிதத் தன்மையும், வீரத்தையும், தற்பாதுகாப்பையும் போதிப்பதில்லை. மதம் கடவுளை எஜமானனாக்கி, மனிதனை ஏவலாள் ஆக்குகின்றது. ஆனால் அடிமைத்தனத்தை இன்பமாக்குவதற்குப் போதிய ஆற்றலும், சக்தியும் படைத்தவராக எஜமானன் இருக்க முடியாது.

இத்தகைய ஒரு தெய்வம் உளதேல் அது நன்மை பயப்பதெனத் தெளிதல் கூடுமா? அது அருட்கண்ணுடையதென்றும், மனிதவர்க்கத்தைப் பேணுவதென்றும் எப்படிக் காண்பிக்கக்கூடும்? இக்கடவுள் இருப்பாரேயாகில் கோடிக்கணக்கான மக்கள் நிலத்தைப் பண்படுத்தி உழுது விதைத்துப் பயிரிடப்பார்க்கிறார்—தமது வாழ்க்கைக்கு எதிர்பார்க்கும் விளைவினையே ஆதாரமாக நம்பியிருப்பதையும் அறிந்தேயிருக்கிறார்—எனினும் இத்தேரிய தெய்வம், இவ்வருள் கடவுள் வானமழை இல்லையென்றார். கதிரவனெழுந்து தனது கதிர்களைப்பரப்பி நிலத்திலுள்ள ஈரமெல்லாம் உறிஞ்சிவிடச் செய்கிறார் எனினும் வானமழை இல்லையென்றார்! மக்கள் ஊன்றிய விதைகளெல்லாம் வெம்பி மடிவதைக்காணுகின்றார்—எனினும் வானமழை இல்லை என்கிறார்! மக்கள் பாழான நிலங்களைப்பார்த்து கருத்தழிவதைக்கண்டும் வானமழை இல்லை யென்கிறார்! அவர்கள் மீதமாக வைத்திருந்ததைக் கொஞ்சம் கொஞ்சமாக உண்பதையும், பசிப்பிணியால் மெலிந்து போகும் நாட்கள் கிட்டியதையும், அவர்கள் சிறிது சிறிதாக நலிந்து போவதையும், அவர்களது ஆளை விழுங்கும் குழிவிழுந்த கண்களையும்—பார்க்கிறார்—அவர்கள் தன்னைக் கூவி அழைத்துத் துதிப்பதையும் கேட்கிறார்—தங்களிடமிருந்த ஆடு மாடு கோழிகளை வதைத்துத்தின்றும் பின்னும் பசியின் கொடுமை தாக்க பைத்தியமுற்று எலும்பும், தோலுமாயிருக்கும் குழந்தைகளையும் கூடக்கொன்று தின்னுவதையும் பார்க்கிறார். வானம் வெஞ்சிலை பிடித்த மாரனையொக்கும்—வையகம் நெஞ்சு துடிக்கும் காமுகனை யொக்கும்—எனினும் வெதுப்பினை ஒழிக்கும் தண்ணிய காதலை யொக்கும். மழை ஒளிந்து கொள்ளச் செய்தார். இத்தகைய தெய்வத்தின் பால் அருளென்னும் கனிவுறு நெஞ்சக மலர் பூக்குமோ? அவர் மனிதவர்க்கத்தைக் காப்பதாகவும், அவரது அருள் அழியாது மிளிருவதாகவும் சொலுவதற்கியலுமோ?

அவர் கிராமங்களை அழித்திடும் பெரும் சுழிக்காற்றுகளையனுப்பி நிலப்பரப்புக்களைத் தாய் தந்தையர் குழந்தைகளுடைய நைந்த தேகங்களால் நிரப்புவதைக் கொண்டோ அவரது நற்குணத்தை நாம் நிலை நாட்டுவது? எரிமலையின் நெருப்புக் குழம்புகள் ஆற்றுப்பெருக்கெடுத்து சுற்றியிருக்கும் நாடு நகரங்களை அழித்திடுதல் கண்டு நாம் அவரது மேன்மையைக் காட்டுவதா? இத்தகைய நாமறிந்த காட்சிகளைக் கொண்டு நாமவரது

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.

# ஆராய்ச்சி முரசு.

## அன்னதானம் அவசியமா?

(தமிழ் மகன்)

‘இந்துமத’ சாத்திர ஆகம புராண, இதிகாசங்களில் முப்பத்திரண்டு அறங்களைப் பற்றி வெகு விஸ்தாரமாகக் கூறப்பட்டிருக்கின்றன. மக்கள் செய்ய வேண்டிய தர்மங்கள் முப்பானிரண்டென்றும், அவற்றுள் முதன்மையானதும், முக்கியமானதுமான தர்மம் அன்னதானம் என்றும் கூறப்படுகிறது. ஒவ்வொரு தர்மத்தைப் பற்றியும் விரிவாகப் பிரஸ்தாபித்து, ஒவ்வொரு தர்மத்தாலும் உண்டாகும் நன்மைகளைப் பற்றிக்குறிப்பிடுகிறது. நாம் இன்று முப்பத்திரண்டு தானங்களும் முதன்மையானதாகக் கருதப்பட்டு வரும் அன்னதானத்தைப் பற்றி ஆராய எடுத்துக் கொள்வோம்.

அன்னதானம் செய்ய வேண்டியது மனிதர் ஒவ்வொருவரதும் முக்கிய கடமைகளில் ஒன்றாகும், என்றும், அப்படிச் செய்வதன் மூலமாக ‘பாவ’ங்கள் எல்லாம் விலகுவதாயும், அன்னதானம் செய்யாதவர் கொடிய ‘நரக’த்தில் வீழ்வாரென்றும் கூறப்படுகிறது. இதைப் பெரும்பாலான மக்கள் உண்மையென நம்பி, அன்னசத்திரங்களைக் கட்டியும், மடங்கள் உண்டாக்கியும், சத்திரம் சாவடிகள் ஏற்படுத்தியும் வந்திருக்கிறார்கள்; வருகிறார்கள். சென்னை, திருப்பதி, ராமேஸ்வரம். மதுரை, சிதம்பரம் முதலிய பல விடங்களிலும் தற்போது அன்னதான சமாஜம் என்பதன் பேரால் அன்னசாலைகள் ஏற்படுத்தி நாடோறும் பலருக்கு அன்னமிட்டுவருவதைஎல்லோருமறிந்திருக்கக்கூடும். அன்னதானம்செய்யவேண்டியது அவசியமா? அதனால் உண்மையில் எவருக்கேனும் நன்மை உண்டாகிறதா? அல்லவா? என்பதைப் பற்றி ஆராய்வோம்.

எவர் என்ன நினைத்துக் கொண்டாலுஞ்சரி; என்ன கூறினுஞ்சரி; நான் கூறுகிறேன். அன்னதானம் செய்வதால் செய்கிறவர்களும் பாதகமடைந்து, ஏற்றவர்களும் பிரதிகூலத்தை யடைந்து வருகிறார்கள் என்பது எனது அபிப்பிராயமாகும். அன்னதானம் செய்வதன் பலனாக ஏதேதோ நன்மைகளும், புண்ணியங்களும் ஏற்படுவதாகச் சொல்லப்படுவது அறியாமையே யன்றிப் பிறிதன்று. தஞ்சையை யாண்ட அரசர்களையும், இன்னும் முற்காலத்தில் அன்னதானம் செய்து வந்திருப்பவர்களையும் எடுத்துக் கொள்ளுங்கள். அவர்கள் செய்து வந்திருப்பது போன்று வேறொருவரும் அவ்வளவு அதிகமாக அன்னதானம் செய்திருக்க மாட்டார்கள். பெரும்பாலான பொருளை அன்னதானம் முதலிய முப்பத்திரண்டு அறங்களிலும் செலவிட்டார்கள். அவ்வாறு அவர்கள் திரிகரண சுத்தியுடன் தானங்கள் செய்து வந்தும் அவர்கள் எவ்வித நன்மையையும் அடையாமல் போனதோடு, அதற்கு மாறாக பாப்பர், நிலைமையையடைந்து பெருந்துன்பத்தையே அடைந்திருக்கிறார்கள். அவர்கள் இறந்த பின் “மேல் உலகத்தில்” போக போக்கியங்களை அடைந்திருப்பார்கள் என்று சில வைதீகர்கள் கூறலாம். இதைப் பகுத்தறிவுடையார் அங்கீகரியார். வீண் மனப்பிராப்தியே மேலுலகில் சுகமெய்தலாம் என்பது. நகத்தில் அழுக்குப்படாமல் சோம்பேறி வாழ்க்கையை நடத்த விரும்பும் சுயநலமிகள், தம் சுய நன்மையைக் கோரி, மேல் உலகம், புண்ணியம் சொற்கம் என்ற ஆசை வார்த்தைகளைக் கற்பித்து அதன் மூலம் ஏமாந்தசோணகிரிகளிடத்திலிருந்து தானம் என்ற பெயரால் பிச்சை எடுத்து வாழ்வதற்காகவே மயக்குரைகளை வெளியிட்டிருக்கிறார்கள். இதை, இந்தச் சூட்சியை உணர்ந்து கொள்ளும் சக்தியில்லாமல் வீணாக தானம் ஈய்ந்து நம்மவர் தட்டுக்கெட்டு வந்து கொண்டிருக்கிறார்கள். மற்ற தர்மங்களிலேனும் ஓரளவுக்கு நன்மையிருக்கின்றன வென்று கூறலாம். ஆனால் அன்னதானத்தில் கடுகளவு நன்மையுமில்லை என்றே நான் தவக்கமின்றிக் கூறுவேன்.

பிறநாடுகளை விட நம் நாடு அறியாமையிலும், வறுமையிலும் பின்னேறிக் கொண்டு வருவதற்கு அன்னதானமும் ஒன்று என்றே எனக்குப்படுகிறது. நாடெங்கும் பிச்சைக்காரர்கள் பெருகிக் கொண்டு வருவதற்கு முக்கிய காரணம் அன்னதானமே என்று நான் கூறுவேன். அன்னசாலைகள் எங்கு அதிகமோ, அங்கு பிச்சைக்காரர்களும் அதிகம் என்பது சரியான வாக்காகும். அன்னசாலைகள் இருப்பதாலேயே பிச்சைக்காரர்களுமிருக்க இடமேற்படுகிறது. அன்னசாலைகளின்றேல் பிச்சைக்காரர்களும் உண்டாகவோ, இருக்கவோ பெரிதும் இடமேற்படாது.

அன்னசாலைகள் உண்டாக்கியிருப்பவரின் உத்தேசம் ஏழைகளையும், பிச்சைக்காரர்களையும் காப்பாற்றுவதற்கேயாகும். இந்த உத்தேசம் சரியாக நிறைவேறுகிறதா என்பதை அன்னசாலைக் கர்த்தாக்கள் உணர்ந்திருப்பதாக நான் நினைக்கவில்லை. ஏனென்றால், ஒரு நாளைக்கு அன்னம் பெறுவோருக்கு மறுதினம் அன்னம் அளிப்பதில்லை. எனவே, முதல் நாள் திருப்தியாக உண்டவரின் நிலை மறுதினத்தில் இல்லாமற் போய் விடுகிறது. ஆகவே, அன்னதானம் பெறுகிறவர்களின் நித்திய வாழ்வுக்கு எந்த அன்னசாலையும் சாதகம் அளியாது விட்டு விடுவதால் இருவருக்கும் அன்னதானத்தால் எவ்வித நற்பயனும் அடையாமல் போய் விடுகிறது. எனவே, அன்னசாலைகளிருந்தும் இராத நிலையிலேயே இருக்கும்படியாகிறது. இந்த உண்மையை நமது அன்னதானசமாஜத்தார்களும்அன்னமிடுவோரும் கூர்ந்து கவனிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அன்னசாலைகளால் ஒரு குறிப்பிட்டவர்களுக்கு அவர்கள் ஜீவிய பரியந்தம் காப்பாற்ற முடிவதாகவே வைத்துக் கொள்வோம். இப்படிச் செய்வதும் தவறு என்பதே எனது அபிப்பிராயம். ஏனென்றால், பிழைக்கப் பயந்தவர்களையும், உடலால் உழைக்க விரும்பாதவர்களையும் இந்த முறை வளர்க்கும்படி செய்யும். எங்கணும் பிச்சைக்காரரே மயமாக ஆகும்படி செய்து விடும். அதன் மூலமாக நாடு கேடுறுவதுடன், பிறநாட்டாரால் “பிச்சைக்காரர் தேசம்” என்று இகழப்படுவதற்கும் காரணமாய்விடும். ஆகவே எந்த முறையிலும் அன்ன சாலைகள் வைப்பது தப்பிதமாகும் என்றே நான் கூறுவேன். சோம்பேறிகளையும், முட்டாள்களையும் நாட்டில் இல்லாமற் செய்ய வேண்டுமானால் அவசியமாயும், அவசரமாயும் அன்ன சாலைகளையும்,அன்னச்சத்திரங்களையும், மடங்களையும், அன்ன சமாஜங்களையும் எடுத்தே தீர வேண்டும்- இவையிருக்கும்வரை பிச்சைக் காரர்களும் இருந்தே தீருவார்கள்.

இன்று சென்னையில் அன்னதான சமாஜத்தில் நமக்குச சாப்பாடுகிடைக்கும்; நாளை செங்கற்பட்டுச் சத்திரத்தில் அன்னங் கிடைக்கும் என்ற தைரிய மிருப்பதால்தான் பிழைத்து சீவிக்க விரும்பாதவரெல்லாம் பிச்சையெடுக்க முன் வருகிறார்கள். இன்றைக்குச் சாப்பாட்டிற்கு வழியில்லையே என்ற கவலை இருப்பின் கல் உடைத்தோ, மண் வெட்டியோ, வேறு கஷ்ட வேலைகள் செய்தோ சாப்பிடத்தான் மனம் ஓடும். இது இயல்பாகும்.

கால் கையில்லாதவர்களையும், குருடர்களையும், வேறு அங்க ஈனமுடையவர்களையும் காப்பாற்றுவதற்காகவேனும் அன்னசாலைகள் வேண்டாமா என்று சிலர் கேட்கலாம். இதை நாம் ஒரு போதும்- மறுக்கவில்லை. பிழைக்கச் சக்தியில்லாதவர்களை மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும் காப்பாற்ற வேண்டியது அவசியந்தான். ஆனால், அவர்களுக்கென கண்ட கண்ட விடங்களிலெல்லாம் அன்ன சத்திரங்கள் ஏற்படுத்தி காப்பதைக் காட்டிலும் நாட்டிலுள்ள எல்லாப் பிழைக்க வழியில்லாதவர்களையும் ஒரே யிடத்தில் சேர்த்து ஒரே அன்னசாலையின் மூலம் காப்பாற்றுவதே சரியாகும் என நான் யோசனை கூறுகிறேன்.

அன்னதானம் செய்வதை விட கல்வி, கைதொழில், வைத்தியம் முதலிய தர்மங்கள் செய்வதே மிக மிக மேலானதாகும். அன்னசாலைகளுக்கு நாடோறும் பொருள் உதவி வரும் தர்மவான்கள் இதை முக்கியமாய்க் கவனிக்க வேண்டும். அன்னசாலைகளுக்குப் பொருளீய்ந்து வரும் அன்பர்கள் அந்தப் பொருளை ஒன்று சேர்த்து கைத்தொழிற்சாலைகளை நிறுவினால் அதன் மூலமாகச் செயத வரும் லாபமடைந்து, பெற்றவரும் நலமடைந்து இன்புறலாம் எல்லா இடங்களிலும் அன்னதானமிடுவோரின் பொருளைச் சேர்த்தால் மாதத்திற் கொரு பள்ளிக்கூடமாகவும், மாதத்திற்கொரு கைத்தொழிற்சாலையாகவும், மாதத்திற் கொரு வைத்திய சாலையாகவும் செய்து விடல் மிக எளிதாகும். இப்படிச் செய்வதன் மூலம் நாட்டில் வறுமையை விரட்டியடித்து பிச்சைக்காரத்தனத்தையும் இருந்த விடம் தெரியாமல் மறைந்து போகும்படி செய்து விடலாம்.

இன்னொரு யோசனையும் கவனிக்கத் தக்கது. அதாவது தினந்தோறும் அன்னதானம் செய்கிற பொருளைச் சேர்த்தால் குறைந்தது ஆயிரம் ரூபாய்களாவது (அதிகமாக விருக்கலாமென்றே கூறலாம்.) சேரலாம். அந்த ரூபாய்களை ஒருவருக்குக் கொடுத்து அதைக் கொண்டு வியாபாரமோ, வேறு தொழிலோ செய்யும்படி செய்தால் ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவராக பிச்சைக்காரத்தனத்திலிருந்து விடுபடும்படி செய்யலாம். வருடத்தில் 365 பிச்சைக்காரர்களை, வறுமையிலிருந்து ஈடேற்றி விடக் கூடும். இப்படியே செய்து வரின் சில ஆண்டுகளில் பிச்சைக் காரர்களே எங்குமில்லாதவாறு செய்து விடலாம். ஒரு பிரதிநிதித்துவம் வாய்ந்த சபையொன்றை ஏற்படுத்தி இந்த முறையை மிகவும் ஒழுங்காகச் செய்துவிட முடியும். எனவே, இதையும் அன்பர்கள் ஆராய்வார்களாக.

ஆகவே அன்னதனம் செய்கிற அறிஞர் நமது யோசனைகளை நன்ருய்ச் சிந்தித்து ஒரு முடிவிக்கு வருமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். அன்னதானத்தால் ஒருவித நன்மை

(தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க)

ரோஜா முத்தையா

# வைதீகர்களே!

## வெளியில் வாருங்கள்; வாதம்புரிவோம்.

(அ. இரத்தினசபாபதி)

"வைதீகர்" எனப்படுவோரே! உங்களுடைய சாத்திரங்களும், மூடக்கட்டுப்பாடுகளும், கண்மூடித்தனமான சட்டதிட்டங்களும், இந்நாட்டில் ஆதிக்கம் வகித்து அரசு செலுத்தியகாலம் ஒன்றிருந்தது என்பது உண்மைதான். ஆனால் அது 'அந்தக்காலம்!' அக்காலம் மலையேறி நீண்ட நாட்களாகிவிட்டன! உங்கள் வைதீகம் அக்காலத்தில் ஆதிக்கஞ் செலுத்தியதில் வியப்பின்று. ஏனெனில் 'அது' மனிதனது பகுத்தறிவிற்கு விலைவையாத காலம்; அத்துடன் ஏமாந்த சோணகிரிகளாகிய 'கூன்பாண்டியன்' போன்ற மண்டுகங்கள் அரசர்களெனப்பட்டஞ்சூட்டிக்கொண்டு நாட்டைக்குட்டிச்சுவராக்கிய காலம்! எடுத்ததற்கெல்லாம் "கடவுள் சாத்திரம்" எனக்கூறி அப்பைத்தியங்களிலேயே மக்களின் அறிவு மூழ்கடிக்கப்பட்டிருந்த காலம்! எனவே அக்காலத்தில் வைதீக வெறியர்களின் மௌட்டீகச்செயல்களில்—அதாவது இக்காலத்து நடவடிக்கைகளின்படி பச்சைத் தமிழில் கூறினால், எத்தகைய துராக்கிருதங்களுக்குமஞ்சாத வஞ்சகச்சுயநல விஷப்பூண்டுகளின் முட்டாள்தனமான கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தும், அவர்கள் விரித்த வஞ்சக வலையில் சிக்கியும் பாமரமக்கள் தம்மதி இழந்திருந்ததில் என்ன வியப்பிருக்கிறது.

ஆனால் "இக்காலமோ?— "அறிவது முன்னே (அறிவு அது) மற்றது பின்னே" என எதற்கும் அறிவையே பிரதானமாகக்கொண்டு நிதானிக்கும்பான்மைவாய்ந்த "அறிவியல் வாதிகள்" உலக மாய்த்திகழும் காலம். மனிதனின் இன்பவாழ்க்கைக்கு இடையூறாய் எதிர் நிற்பவை எவையெவையோ, அவையனைத்தையும் தகர்த்தெறிந்து மேற் செல்லத்தக்க வீரத்தின் எழுச்சிமிக்க இளைஞர்பலரைக்கொண்ட காலம். எனவே அக்காலத்துக் கசுமாலங்களெல்லாம் இஞ்ஞான்று மக்களிடையில் செல்லாக்காசாக இருப்பது இயற்கையேயாம்.

'வைதீகர்' எனப்படுவோரே! 'பழையன கழிதலும், புதியன புகுதலும், வழுவலவேகாலவகை' எனும் நியதிக்கு என்ன நியாயம் கூறுகின்றீர்கள்? இப்பொன்மொழியின் பொருள் உங்களுக்கு விளங்கவில்லையா? அல்லது சுயமரியாதையினராகிய நாங்கள் இதற்குக்கூறும் பொருள் பொருந்தாதெனக்கூறி அரட்டையடிக்கப் போகிறீர்களா? கவிகள் பலவற்றில் மறைபொருள்களிருப்பதை யாமறிவோம் எனினும் இவ்வாக்கியத்தினை நீங்கள் அகக்கண், புறக்கண், முகக்கண்முதலிய எக்கண்களைக்கொண்டு துருவித்துருவி ஆராய்ந்த போதினும், நாங்கள் இதற்குக்கூறும் பொருளைத்தவிர வேறு, அர்த்தமோ, அந்தரார்த்தமோ காணப்போவதில்லை என்பது திண்ணம். மற்றும் கூறினால் அதனால் நீங்கள் அடையும்பயன் அநர்த்தமேயாம்!

'கறைக்கழுத்திறைப் பிறைத்தளிர்ச்சடைப்பெருந்தகைப்பெருமானின்' அடிமைகளெனக்கூறிக்கொள்ளும் சைவப் பழங்களே! ஓரடியில் உலகளந்த மாயனாய 'விஷ்ணு'வின்தாசர்களெனக்கூறிக் கொள்ளும் வைணவ சிகாமணிகளே! உங்கள் வார்த்தைகளும், கட்டுதிட்டங்களும், சாத்திர கோத்திரங்களும் இந்நாட்டு மக்களிடைச் செல்வாக்குப்பெற்றிருந்த காலத்தில் மக்கள் உண்ண உணவும், உடுக்கத்துணியும் போதுமானபடி பெற்றிருந்த காலத்தில் நீங்கள் பல கதா காலட்சேபங்களையும், புராணப்பிரசங்கங்களையும், தலம், தீர்த்தம், லிங்கம் முதலியவற்றின் மகிமைப்பிரதாபங்களையும் எடுத்தோதி நால்வரின் தேவார திருவாசகங்களையும், ஆழ்வார் பிரபந்தங்களையும்பண்ணிசைத்துப்பாடி ஆடிமகிழ்ந்தது சரியென ஒருக்கால் கொள்ளப்பட்டிருந்திருக்கலாம். ஆனால் இந்நாளிலோ? கோடிக்கணக்கான மக்கள், ஒருவேளை உணவிற்கும், ஒரு முழ ஆடைக்கும் வகையற்று வாடித்தவித்து நிற்கிறார்கள்; எங்கு நோக்கினும் 'ஐயோ! பசி, ஐயோ மரணம்' எனும் கூக்குரலே காதைப்பிய்த்துக்கொண்டு போகிறது. பச்சைக்குழந்தையோபாலின்றி வாடுகிறது; அதற்குப்பாலூட்டத்தன்னிடம் பாலுமின்றி அன்னப்பால் வைத்தூட்டவும் கையில் பைசாவின்றித்தாய் பரிதவிக்கின்றாள்; வெளியிற் சென்ற கணவன் வேலையின்றி தெருத்தெருவாயலைந்து அலுத்து வீட்டிற்கு வந்து வெறுங்கையை விரிக்கிறான். குடும்பம் வறுமைப்பிணியால் வாடிவதங்கிச் சாகிறது. இதுகால பரியந்தம் பெரியபெரியகோவில்களிலமர்ந்து மூன்றுகாலம், ஆறுகாலம், பன்னிரண்டுகாலம் பூசை நைவேத்தியங்களும் பஞ்சாமிர்த பாலாபிஷேகங்களும் பள்ளியறை இன்பங்களும் அனுபவித்து வந்த ஒண்டிக்கணக்கான ஆண், பெண், அலித்தெய்வங்கள் எல்லாம் இந்த ஏழை மக்களின் கன்றுயியை ஏறெடுத்துப்பார்க்கவில்லை!

இவற்றுடன் உங்களின் சட்டதிட்டங்களும், புண்ணிய பாவங்களும், சொர்க்க நரகங்களும், இவற்றிற்குச்சான்றுதரும் வேத, ஆகம, புராண இதிகாச குப்பைகளும், அவற்றை ஆக்கியோராய ரிஷீஸ்வரர்களும், ஆதிகர்த்தாக்களாகிய அகிலாண்டகோடி, பிரமாண்ட நாயகர்களும், அவர்களின் தாலி, கூலி, மனைவிகளும் இவர்களின் ஊழியர்களாய முன்னோடி, பின்னோடி முதலிய குட்டிதெய்வங்களும், இன்னும் வீரப்பிரதாபர்களெனக் கூறப்படும் காளி, கூளி, கருப்பன், சாமுண்டி, மாயாண்டி, முனியாண்டி, பனையடியான், நோடியான், வீட்டடியான், காட்டடியான், சுடலைமாடன், உதிரமாடன், காட்டேரி மோகினி, டாகினி, சக்கம்மாள், ஒன்பது கம்பளத்தாள், மாமாயி, மாமாரி, இசக்கியம்மன், பச்சையாற்றுக்கருப்பன், பனையடிக்கருப்பன், பதினெட்டாம்படி கருப்பன், மச்சுவீட்டம்மன், குச்சுவீட்டம்மன், முதலிய இந்த ஆண் பெண் தெய்வ டிபார்ட்மெண்டுகளும் தங்கள் தங்கள் அறைகளிலிருந்து அம்பலத்திற்கு அடிமடியில் கையிட்டு இழுத்துக்கொணரப்பட்டு, அடிபட்டு, மிதிபட்டு, இடிபட்டு இடுப்பொடிந்து வாயில் புகுந்த ஈத்தெரியாமல் ஒன்றையொன்று கட்டிக்கொண்டு 'உன்னாலே நான் கெட்டேன், என்னாலே நீ கெட்டாய்' என ஒப்பாரி வைத்து ஓலமிட்டழுது அரற்றி அங்கலாய்த்து முட்டி முனங்கி, உட்கார்ந்து உருளுகின்றன.

அஞ்ஞான்று "தறிங்கிணத்தோம்' எனத்தாளம் போட்டு மன்றுளாடியவனெனவும் திரிபுரமெரித்தவிரிசடைப் பெருமானெனவும், நீங்கள் ஒற்றிப்போற்றும் 'சிவன்' இன்று உணர்ச்சிமிக்க சுயமரியாதை இளைஞர்களின் கைகளிலும் அன்னாரின் பத்திரிகைகளிலும் அகப்பட்டுக்கொண்டு உண்மையிலேயே 'தறிங்கிணத்தோம்' தத்திமித்தோம்!! இனித்தொலைந்தோம்!!! எனத்தாளம் போட்டுத் தாண்டவமாடுகிறார்! பாவம்!! இவ்வாறாக உங்கள் திரிமூர்த்திகளின் மானமுங்கெட்டு, உங்கள் மானமும் காற்றமெடுத்து சந்தி சிரிக்கும் இக்காலத்தில் கூடவா விபூதி பூத்த மரமாயும், நேப்பாளத்து உத்திராக்க மரமாயும் விளங்கி மடங்களிலமர்ந்து "தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும்" என்ற பாடல்களைப் பாடி மகிழவேண்டும்? இக்காலத்தில் கூடவா நீங்கள் வர்ணாச்சிரம மகாநாடுகள் கூட்ட முயலவேண்டும்? இக்காலத்தில் கூடவா நீங்கள் சைவப் பெரியார்கள், சைவசிகாமணிகள் எனக்கூறிக் கொண்டு வெளிப்புறப்பட வேண்டும்? இக்காலத்தில் கூடவா நீங்கள், முருகப் பெருமான் தினைப்புனத்தில் வள்ளியை ஏமாற்றிப் புணர்ந்த திருக்கதையை(?)க் கூறிக் கதா காலட்சேபம் செய்து வயிறு வளர்க்க வேண்டும்? சை! சை!! வெட்கம்! வெட்கம்!!

கடைசியாக, "வைதீகரெனப் படுவோரே! உங்களுக்கு ஒன்று கூறுகிறோம். காலமோ கெட்டுப் போய்விட்டது. (அதாவது உங்கள் புத்திக்கு) சுயமரியாதைக் காரர்களோடு! உங்கள் கண்ட வாளங்களையெல்லாம் வெளிப்படுத்தித் திட்டிப் பெட்டியில் வாருகிறார்கள்? எல்லோருடைய மானமும் கெடுவதாயிருக்கிறது. இச்சமயத்தில் நீங்கள் செய்ய வேண்டியது 'இரண்டிலொன்று' தான்! அதாவது மறுவார்த்தை பேசாது 'ஆஸ்திகத்திற்கு ஐ. பீ.' கொடுத்து விட்டு அறிவியல் வாதி (Rationalists)களுடன் சேர்ந்து உலக நன்மைக்குழைக்க வேண்டும் அல்லாது பேசாமல் மூலையில் அமர்ந்து உறுமிக் கொண்டிருப்பதை விட்டு, பகிரங்கமாக வெளியில் வந்து உங்கள் கொள்கையை வாதிட்டு நிலை நாட்ட வேண்டும். இவ்விரண்டில் எது செய்ய முன் வருகிறீர்களென்று தான் உங்களைக் கேட்கிறோம். முன்னையதில் விருப்பமாயின் உங்களுக்குக் கைகொடுத்தாதரிக்க எமது சுயமரியாதை இயக்கம் தயாராயிருக்கிறது.

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

# கோலார் தங்கவயலில் மூன்று மகா நாடுகள்.

## தலைவர்களின் வீர உரைகள்.

### எதிரிகளின் வாயடைப்பு.

கோலார் தங்க வயலில் சென்ற மாதம் 21, 22, 23, தேதிகளில் பௌத்த, சுயமரியாதை, ஆதித்திராவிட மகாநாடுகள் சாம்பியன் ரீப்ஸ் பௌத்த சங்க முகப்பில் அமைத்திருந்த பந்தலின் கண் கூடிற்று.

**பௌத்தர் மகாநாடு.**

21—5—32 சனியன்று சென்னை தோழர் பி. லக்ஷிமிநரசு பி. ஏ. அவர்களின் தலைமையின் கீழ்காலையில்விஷயாலோசனைக் கூட்டம் முடிந்தது. மாலை 3-30 மணி முதல் இரவு 8-30 மணி வரையில் பௌத்தர்கள் மகாநாடு நடந்தது. வரவேற்புக் கழகத் தலைவர் 'தமிழன்' ஆசிரியர் ஜி. அப்பாதுரையார் பிரதிநிதிகளையும், மற்றுமுள்ள தோழர்களையும் குதூகலத்தோடு வரவேற்று இந்தியாவில் பௌத்தம் நிலையுற்ற காலத்தின் நன்மையையும், ஆரியர்களின் சூட்சியால் அதன் க்ஷீணிப்பையும், கௌதம புத்தரின் சீரிய நெறிகளையும் பற்றி எடுத்துக் கூறி தமது வரவேற்புப் பிரசங்கத்தைச் செய்தார். அதன் பின் தலைவர் பி. எல். நரசு அவர்கள் பௌத்த தன்மத்தைப் பற்றியும், பௌத்தமும், சுயமரியாதையும் (தற்போதுள்ள பிக்குகளின் ஊழல்களைத் தவிர்த்து) ஒன்றுக்கொன்று சம்பந்தப் பட்டதென்றும், லிங்க உற்பத்தி முதலியவைகளின் ஆபாசங்களைப்பற்றியும் முன்னுரையாக ஆங்கிலத்தில் சொன் மாரி பொழிந்தார். அதன் பின் வி. இரத்தினம், சென்னை வி. பி. எஸ். மணியர், அவர்கள் பௌத்த தன்மத்தைப் பற்றித் தமிழிலும், தோழர் எஸ். குருசாமி பி. ஏ. அவர்கள் ஆங்கிலத்தில் "மனிதனின் மத சரித்திரம்" என்பதை தமிழிலும் பேசி முடித்தார்கள். அதன் பின்னர் தோழர் ஜி. குஞ்சிதம் அம்மையார் பி. ஏ; எல். டி. அவர்கள் இந்தியரின் தேசீயமும், ஜாதியும் என்பதைப் பற்றி கூறுங்கால் ஆரியப் பார்ப்பனர் தேசீயத்தின் பெயரால் செய்யும் அட்டூழியங்களைப் பற்றியும், புராண ஆபாசத்தைப் பற்றியும், மற்றை தேர் திருவிழாக்களின் பொய்யைப் பற்றியும் ஆங்கிலத்தில் எளிய நடையில் கூறியமர்ந்தார். அதைத்தோழர்எஸ். குருசாமியவர்கள் தமிழில் மொழிபெயர்த்துக் கூறினர் Captian H. M. Ray, அவர்கள் சுயமரியாதையைப் பற்றியும், பௌத்த தன்மத்தைப் பற்றியும் திருமதி குஞ்சிதம் அம்மையார் ஆங்கில சொற்பொழிவைப் பற்றியும், பாராட்டிப் பேசியமர்ந்ததும் தலைவர் முடிவுரைக்குப் பின் வி. இரத்தினம் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு மகாநாடு இனிது முடிவுற்றது.

**சுயமரியாதை மகாநாடு.**

22—5—32ல் ஞாயிறு தினம் மாலை 3-30 மணிமுதல் இரவு 9-மணிவரை தோழர் எஸ். குருசாமி பி. ஏ. அவர்களின் தலைமையின்கீழ் சுயமரியாதைமகாநாடுநடைபெற்றது. வரவேற்புகழகத்தலைவர்தோழர் எஸ். முனிசாமி அவர்கள் தமது வரவேற்பு பிரசங்கத்தை (கடந்த வாரம் வெளியானது) வாசித்த பின்பு தோழர் எஸ். குருசாமிஅவர்களை தலைமை வகிக்குமாறு தோழர் வி. எம். முனிசாமியாரால் பிரரேபிக்கப்பட்டுமுறையே சகோதரி சமதர்ம சேவகி ஆர். அன்னபூரணி அம்மையாராலும், எம். இரத்தினம் அவர்களாலும் ஆதரிக்கப்பட்டு தலைவரவர்கள் தமது தலைமையுரையை நகைச்சுவை, பொருட்சுவை பொருந்த 3.மணி நேரம் கூறியமர்ந்தார் அதன் பின்னர் திரு எஸ். குஞ்சிதம், வி. பி. எஸ். மணியர் 'தமிழன்' ஆசிரியர் ஜி. அப்பாதுரையார், ஏ. பி. பெரியசாமி புலவர், ஜோலார்ப் பேட்டை தோழர் வி. பார்த்தசாரதியார், பி. எல். நரஸு முதலியவர்கள் சுயமரியாதைதத்துவங்களை வெகு அழகாக சொன்மாரியாற்றியமர்ந்தனர்.

பின்னர் தலைவரவர்கள் தனது முடிவுரைக்குப் பின்னர் "இம்மகாநாடு செங்கல்பட்டு, ஈரோடு, விருதுநகர், முதலியமாகாண சுயமரியாதை மகாநாடுகளில்நிறைவேறியதீர்மானங்களை முழுமனதோடு ஆதரிப்பதாக" கொண்டு வந்த தீர்மானத்தை எல்லோரும்முழுமனதோடு ஆதரித்தனர் தலைவர் முடிவுரை கூறியபின் மகாநாடு இனிது முடிவுற்றது.

**ஆதித்திராவிட மகாநாடு.**

23—5—32ல் ஆதிதிராவிட மகாநாடு தோழர் வி. இரத்தினம் அவர்களால் பிரரேபிக்கப்பட்டு தோழர்கள் ஜி. டி. இராஜன், ஜி. அப்பாதுரையார் அவர்களால் முறையே ஆதரிக்கப்பட்டு தாலூக்கா போர்ட் மெம்பர் தோழர் ஏ. பி. பெரியசாமி புலவரவர்கள் தலைமை வகித்து தோழர் ஆர். சுப்பிரமணியரவர்கள் தமது வரவேற்புப்பிரசங்கம் செய்த பிறகு தலைவர் தனது முகவுரைப்பிரசங்கத்தைச் செய்தார் அதன் பின்னர் தோழர் அ. அன்னபூரணியம்மையார், வி. பி. எஸ். மணியர், தமிழன் ஆசிரியர் ஜி. அப்பாதுரையார் எம். இராமசாமி, பி. என். வீராசாமி, ஒ. வி. இராஜகோபால் எம், எல். சி. வி. வி. டேவிட்பெருமாள், முதலியவர்கள் குல முன்னேற்ற விஷயமாக அரும்பெருஞ் சொற்பொழிவுகள்ஆற்றினார்கள். தனித்தொகுதியை யாதரித்தும், டாக்டர். பி. ஆர். அம்பேட்கார், ஆர். ஸ்ரீனிவாசன் முதலிய இருவர்களைப் பாராட்டியும், ராஜா—மூஞ்சே ஒப்பந்தத்தை பலமாகக் கண்டித்தும் லண்டன் சர்வகக்ஷி மகாநாட்டு சிறுபான்மையோர் உடன்படிக்கைகளை ஆதரித்தும் பல்வேறு முக்கிய தீர்மானங்களும் முழு மனதோடு எல்லோராலும் ஆதரிக்கப்பட்டது. அதன் பின்னர் புலவரவர்கள் தமது முகவுரையைக்கூறிய பின் மகாநாடு இனிது முடிவு பெற்றது.

---

# இலங்கை இந்தியர் சுயமரியாதைச் சங்கம்

## முதலாவது ஆண்டுவிழா

### முன்னேற்றமான தீர்மானங்கள்.

ஷை ஆண்டுவிழாவானது, கொள்பெட்டிபொள்வத்தை பௌத்த மத பாடசாலையில் தோழர் வி. கே. குஞ்சிராமன் பி. ஏ. அவர்களின் அவைத் தலைமையின் கீழ்நடை பெற்றது. தலைவர் தமது பிரசங்கத்தை ஆங்கிலத்தில் செய்ய தோழர். என். எல். எம். ஆறுமுகம் அவர்கள் தமிழில் மொழிபெயர்த்தார் அதன் சாராம்ஸமாவது:—

நமது தேசமும், நாம் அதிலிருந்து அடையும் சுயஆட்சியும், திரு ஈ. வெ. ராமசாமி அவர்கள் காங்கிரசிலிருந்து நீங்கி சுயயரியாதைச்சங்கத்தை ஏற்படுத்தியும், ஜாதிமத, பேதத்தை அறவே யொழிக்க வேண்டியதையும் பிராமணர்கள் தங்களையே இவ்வுலகில்உயர்பெனப்புகழ்வதையும், நமது தேசத்துக்கு வேண்டிய ஆட்சியையும் கல்வியின் மேண்மையையும் குடியினால் கீழாய்ப்போவதையும், விளக்கிப் பேசியபின் தமது ஆசனத்தில் அமர்ந்தார்.

அதன்பின் இச்சங்கத்தின் கௌரவக்காரியதரிசி மதுரம் சந்தோஷம் அவர்களால் கடந்த வருஷத்தின் வர்த்தமானங்கள் வாசிக்கப்பட்டு கூட்டத்தினர்களால் ஏகமனதாய் அங்கிகரிக்கப்பட்டது.

அதன்பின் தோழர். எஸ். பெரியசாமி அவர்கள் சமூகசீர்திருத்தவிஷயத்தில், நாம் சுயமரியாதை இயக்கத்தை ஆதரிக்கவும், கல்விப்பொருள். செல்வப்பொருள் ஆகிய வற்றைப் பேணவும், வீண்ச்சேலவைசுருக்கவும் வேண்டுமென்பது பற்றிப்பிரசங்கம் செய்தார்.

பிறகு தோழர் எம். எஸ். சதாசிவம் அவர்கள், சுயமரியாதை இயக்கம் சொல்வதென்னவென்பது பற்றிப் போசும்போது மதஸ்த்தர் திகிலடையும் படியும். அன்பர்கள் விழிப்படையும்படியும் பல காரணங்களைஎடுத்தோதி, சுயமரியாதை இயக்கமே விலைமதியாத நவரத்தினங்களுக்கு ஒப்பானதென விளக்கிகாண்பித்தார். பிறகு கீழ்கண்ட தீர்மானங்கள் நிறை வேறின.

இச்சங்கம் விருதுநகர் மகாணசுயமரியாதை மகாநாட்டுத்தீர்மானத்தை மனப்பூர்வமாய் ஆதரிக்கிறது.

இந்தியர் சுயமரியாதைச்சங்கம் என்றிருப்பது, இந்தியர் என்ற சொல்லானது ஒருதேசத்தினர்களை மாத்திரம் வேறுபிரித்துக்காண்பிக்கிறபடியால், பிற தேசத்தவர்களும், பொதுவாக இலங்கையிலுள்ளவர்களும் இச்சங்கத்தில் கலந்துகொள்வதற்குச் சந்தேகிக்கிறபடியால், இந்தியரென்ற சொல்லை விடுத்து. சுயமரியாதைச்சங்கமென்று அழைக்குமாறு, தோழர். எம். எஸ். சதாசிவம் அவர்கள் கொண்டுவந்த பிரரேபணையை, தோழர். எஸ். எம. சாமுவேல் அவர்களால் ஆமோதிக்க சபையினர்களால் ஏகமனதாய் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சுயமரியாதைச்சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு, சுயமரியாதை அல்லாதார்களினால் ஏற்படும் இன்னல்களுக்கும் மற்றும், நன்மை தின்மைகளுக்கும் இச்சங்கத்தின் மூலியமாக ஓர் க்ஷேம நிதியைஏற்படுத்தும்படியும், இந்தியாவிலுள்ள மகானசுயமரியாதைச் சங்கங்களும் ஆதரவளிக்கும் படிகேட்டுக் கொள்ளுகிறதென்னும் தீர்மானத்தை, தோழர், ஜே. எம். அருமை நாயகம் அவர்களால் பிரரேபித்து தோழர். பி. கே. சின்னையா அவர்களால் ஆமோதிக்கப் பட்டது.

சர்க்காரால் உபகாரச்சம்பளம் பெறும் கல்லூரிகளில், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்குக் கல்வி வசதியோ, அல்லது இடவசதியோ அளிக்காதிருக்கும் பாடசாலைகளில் அன்னவர்களுக்குச் சகலவசதியும் சர்க்காரால் ஏற்படுத்தும்படி கேட்டுக் கொள்வதுடன், அப்படி வசதியளிக்காதபள்ளிக்கூடங்களுக்குச் சர்க்கார் கொடுக்கும் உபகாரச்சம்பளத்தை அறவே நிறுத்தும்படி காருண்யகவர்மெண்டாருக்கு மனுச்செய்துகொள்வதென்னும் தீர்மானத்தை தோழர் என். எஸ். எம். ஆறுமுகம் அவர்களால் பிரரேபிக்கப்பட்டதைதோழர் பி. என். சுப்பையா அவர்களால் ஆமோதிக்கப்பட்டது.

கூட்டத்தில் புதியஉத்தியோகஸ்த்தர்களின் பெயர்களை வாசித்துக் காண்பிக்கப்பட்டது.

அதன்பின், மெம்பர்கள், தலைவர், முக்கியஸ்தர்கள் உள்பட புகைப்படம் எடுக்கப்பட்டது. இறுதியாக

தஞ்சை ஜில்லா

## 2வது சுயமரியாதை மகாநாடு.

நாளது ஜூன் 18-19-தேதிகளில் மன்னார்குடியில் நடைபெறும்.

29-5-32-ல் மன்னார்குடி சுயமரியாதைச் சங்கக் கட்டிடத்தில் மாலை 6 மணிக்குவரவேற்புக்கழக கூட்டம் நடைபெற்றது. சகல வரவேற்புக்கழக அங்கத்தினர்களும், முக்கிய பிரபலஸ்தர்களும் வெளியூரிலிருந்து நாகை என். பி. காளியப்பன், பட்டுக்கோட்டை கே. வி. அழகர்சாமி, மாயவரம் ராமய்யா, எஸ். வி. லிங்கம் முதலியவர்களும் வந்திருந்தார்கள்,

அடியிற்கண்ட விஷயங்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு ஏகமனதாக நிறைவேறின.

1 சுயமரியாதை இயக்கத்தலைவர் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் படத்திறப்பு விழாவை நடத்தி வைக்குமாறு "திராவிடன்" ஆசிரியர் தோழர் டி. வி. சுப்பிரமணியம் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறது.

2 சுயமரியாதை மகாநாட்டுத் தலைவராக தோழர் முத்துசாமி வல்லத்தரசு, பி ஏ பி எல் அவர்களையும், திறப்பாளராக தோழர் என். சிவராஜ் எம். ல். சி. அவர்களையும், தொண்டர் மகாநாட்டுத் தலைவராக திருச்சி தோழர் டி. வி. சோமசுந்தரம் பி ஏ பி எல் (சிட்டிசன் ஆசிரியர்) அவர்களையும், திறப்பாளராக ஜோலார் பேட்டை வி. பார்த்தசாரதி அவர்களையும் தெரிந்தெடுக்கிறது.

3. ஜூன் மாதம் 18-19-தேதி சனி ஞாயிறுகளில் மகாநாட்டை நடத்த முடிவு செய்கிறது.

4 தோழர் டபிள்யு. பி. ஏ. சௌந்திரபாண்டியன் முதலியவர்களை இந்த மகாநாட்டுக்கு விஜயம் செய்யுமாறு இவ்வரவேற்புக்கமிட்டியார் கேட்டுக் கொள்ளுகிறார்கள்.

5 வரவேற்புக்கழக அங்கத்தினர் கட்டணம் ரூ. 3 பிரதிநிதி கட்டணம் ரூ. 1 என்று முடிவு செய்கிறது.

பி, சேங்கண்ணு சர்வாதிகாரி.

ஏ. ஆறுமுகம்

வரவேற்புத்தலைவர்.

---

தோழர், வி. கே. குஞ்சிராமன். பி. ஏ. அவர்கள் இச்சங்கம்தம்மை வரவேற்று உபசரித்து ஏற்றுக்கொண்டதற்கு நன்றி கூறியதுடன்இவ்வியக்கத்தாருக்கு எப்பொழுதும் உதவிசெய்ய ஆயத்தமாக இருப்பதாகவும். ஜாதி, மத, பேதமற்று வாழ வேண்டுமென்றும் இனிய சொற்பொழிவாற்றி தனது முடிவுரையைக் கூறிமுடித்தார். கூட்டம் மங்களமாக இனிதுகலைந்ததுஎன கௌரவகாரியதரிசி தெரிவிக்கின்றார்.

---

லால்குடி தாலுக்கா 4வது

## சுயமரியாதை மகாநாடு.

மேற்படி மகாநாட்டின் வரவேற்பு கமிட்டிகூட்டம் 21-5-32ல் சிறுதையூர் திரு. தி. ஆ. பூமிநாதன் அவர்கள் இல்லத்தில், திரு. என். சதாசிவம் அவர்கள் தலைமையில் கூடியது. அதுபோது லால்குடி தாலுக்கா 4வது சுயமரியாதை மகாநாட்டை லால்குடியில் 26-6-32ல் ஜில்லா போர்டு ஸ்கூல் கட்டிடத்தில் நடத்துவதென்றும், கட்டிடத்திற்காக ஜில்லாபோர்டு தலைவரைக் கேட்டுக் கொள்வதென்றும், தோழர். எம்.சிங்காரவேலு அவர்களைத் தலைமை வகிக்கவும், ஆர். அன்னபூரணி அவர்களை மகாநாட்டைத் திறந்து வைக்கவும் கேட்டுக் கொள்வதென்றும் தீர்மானித்ததுடன் மற்றுஞ் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டபின் கூட்டம் கலைந்தது. (ஒரு நிருபர்)

---

## சமூக சீர்திருத்தப் பொதுக் கூட்டம்.

ஷை கூட்டம் ஒன்று பள்ளிக்கொண்டாவில் 18-5-32ல் திரு. எம். மூர்த்தி அவர்களின் தலைமையில் கூடியது. அவ்வமயம் திரு. எம். ஆதிமூலம், எ. சி. ரத்தினசாமி, இ. எஸ். மணி, சி. எஸ். உத்தீரகம், எம். சி. ரத்தினம், யாவரும் முறையே, கடவுள், மதம், ஜாதித்திமிர், தாழ்த்தப்பட்டவர்களின் நிலையும், தனித் தொகுதியும், என்பதைப்பற்றி பேசினார்கள். தலைவர் முடிவுரை கூறிய பின், கே. கிருஷ்ணசாமி அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

### தன்னூற்று.

18-5-32 ந்தேதி சங்கரன் கோவில்தாலூக்காவைச்சேர்ந்த மாமூருக்குஅருகிலுள்ள தன்னூற்று ஹிந்துஸ்கூலில் ஒருபொதுக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு ஆண்களும், பெண்களுமாக ஏராளமாக விஜயம் செய்திருந்தனர். அதுபோது திருவாளர்கள் ஏ. நவமணி, சீ. ராமையா, டி. தங்கையா ஆகியவர்கள் சீர்திருத்த விஷயங்களைப் பற்றிப்பேசினார்கள். இருசிறுமிகள் இடை இடையே சுயமரியாதைக் கீதங்கள் பாடிகூட்டத்தினரை மகிழ்வித்தாரென ஒருநிருபர்எழுதுகிறார்.

---

## கதரை ஆதரித்தல் அறிவுடைய செய்கையா?

(மாயவரம் எம். கல்யாணசுந்தரம்)

கதர் என்பது கைராட்டையால் நூற்று கைத்தறியால் நெய்த சுத்தக் கதரையே குறிப்பதாகும். அக்கதரை ஒரு சாரார் சிலாக்கித்து வருவதும், மற்றொரு சாரார் அதையே பல காரணங்களால் எதிர்ப்பதுமாகயிருப்பதால் பொது மக்கள் இன்று கதரை ஆதரிப்பது எவ்வளவு தூரம் பொருத்த முடையது என்பதை நன்கு சிந்தித்து நிதானிக்கவேண்டிய ஒன்றாகும்.

இந்நிலையில் கதரபிவிருத்திக்கென்றே ஓர் சங்கம் திரு. காந்தியவர்களின் முயற்சியால் தோற்றுவிக்கப்பட்டு பலவாண்டுகளாகியும், பொது மக்களிடமிருந்து கதருக்கென ஏராளமாக நிதி சேகரித்து கொடுக்கப்பட்டிருந்தும் அதன் நிர்வாகம் ஒரு சிலர் கையிலும், முக்கியமாய் தென்னாட்டில் ஒரு சில சமூகத்தினர் கையிலும் சிக்கிக்கொண்டு, மற்றைச் சமூகத்தினரையும், அதில் அக்கரையுள்ள பலரையும் அணுகவிடாமல் பல துறையிலும் விலக்கி நிர்வகிக்கும் விவரமும், அந்நிர்வாகத்திலுள்ள ஊழல்களும் பக்ஷபாத முறைகளும் கணக்கிறந்தனவாக ஊகிக்க இடமிருக்கிறது. பொதுவாய், கதர் நாகரீக முற்போக்கான இயக்கங்களுக்கு முரண்பாடாய் அமைந்துள்ளதென்று சிலர் சொல்லுவது நிற்க, இந்த இயக்கத்திற்கென்றே நடந்துவரும்நிர்வாகத்தில்காணப்படும் பலகுறைகளை இதற்கென முன்வரும் எவரும் எடுத்துக் காட்ட இயலுமாயினும், ஓரளவு விசாலப்பட்டு நடக்கும் "அகில இந்திய நூற்போர் சங்கம்" என்பதன் பூரா நடைமுறைகளை (குற்றங்களை) ஒரு நபரே பூராவும் தெரிந்து வெளியிடல் இயலாதகாரியமாயிருப்பதால் அதிலுள்ள பல குறைகளையும் அங்கங்கு காண்போர் ஓரினத்திற்கு சேகரித்துக் கொடுத்தால் அவைகளை ஒன்று சேர்த்து கவனித்தால் மட்டில், மக்களுக்கு உண்மை நடைமுறை புலனாகும் என்பதை உணர்ந்து ஓரளவு யான் கண்டவற்றை விளம்ப முன்வருகின்றேன். ஏனை நண்பரும் எனது வெளியீடுகள் முடிந்தபின் தொடர்ச்சியாய் தெரிவிக்க ஏதுசெய்து கொண்டிருப்பார்களென்றும் எதிர்பார்க்க நேர்கிறது. விவரம் தெரிந்து கொள்ள சந்தர்ப்பம் பெறாத நாம், யானை கண்ட குருடர்களாய் சச்சரவில் முடிக்காமல் நிதானிப்போமானால் முழு உருவத்தையும் கலந்து தெரிந்து கொண்டவர்களாவோம். ஆகையால் நண்பர்கள் பலர் கதர் போர்டு ஊழல்களும் மற்ற நடைமுறை பிசகுகளும் நாம் கண்டதுதானே, அனுபவித்ததுதானே, ஏற்கனவே வெளியிட்டதுதானே? என்றெல்லாம் ஆலசியமாம் ஒதுக்காமல் இது முதல் தொடர்ச்சியாய் விஷயங்கள் வெளிவர ஏது செய்தால் அக்கதர் போர்டின் மயக்கத்தினின்று விலக முற்பட்டுள்ள பல நண்பர்களும், வியாபாரிகளும் ஒன்று சேர்ந்து சில நற்பலனை எய்தக்கூடுமென நம்பி அடுத்த வாரத்தில் "குடி அரசில்" விஷயதான தொடர்ச்சி செய்ய நிச்சயித்திருக்கின்றேன்.

---

## இராமநாதபுரம் ஜில்லா.

### இரண்டாவது சுயமரியாதை மகாநாடு.

இராமநாதபுரம் ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டின் வரவேற்புக் கமிட்டியின் அமைப்புக் கூட்டம் நாளது 5-6-32. ஞாயிற்றுக்கிழமை மாலை 6மணிக்கு காரைக்குடியில்தோழர் ராமசுப்பையா அவர்கள் தலைமையில் நடைபெறும்.

அதுசமயம் மகாநாட்டு வரவேற்புக்கமிட்டி நிறுவுதல் மகாநாட்டுத்தேதி, இடம், தலைவர், திறப்பாளர், பேச்சாளர், முதலியன உறுதி செய்தல்.

அதுபோது நமது இயக்கத் தோழர்கள் யாவரும் வருமாறு அழைக்கின்றோம். என்று பொதுககாரியதரிசி அறிவிக்கின்றார்.

---

### பொதுக்கூட்டம்.

24-5-32ல் வேலூருக்கடுத்த காட்டுப்புத்தூரில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. அக்கூட்டத்திற்கு, கோலார் தங்கவயல், கிருஸ்தவவாலிப ஐக்கியசங்கத்தின்உபதலைவரும், சுயமரியாதைத்தொண்டருமான, இ. எஸ். மணி அவர்கள் தலைமை வகித்து தாழ்த்தப்பட்வர்களும், தனித் தொகுதியும், வட்டமேஜைமகாநாடும் டாக்டர் அம்பேத்காரும், என்பதைப் பற்றியும் மூடபழக்கவழக்கங்களைபற்றியும், சுயமரியாதையைப்பற்றியும், "காந்தி, கதர்" என்பதைப் பற்றியும் 2 30மணிநேரம் ஒரு அரிய சொற்பொழிவாற்றினர். மேற்படி கூட்டத்திற்கு அநேக பெரியார்கள் விஜயம் செய்தனர்.

(ஒரு நிருபர்)

---

மதனகாமேஸ்வர லேகியம் (Regd)

பெயர்பெற்ற தாதுபுஷ்டி மருந்து இதுவே. ராத்தல் 1க்கு ரூ. 8. தபாற்செலவு 8 அணா. காலண்டரும் கியாட்லாக் இனாம். (ரிஜிஸ்டர்)

சித்தஔஷதசாலை

கம்பேனி K. A.

போஸ்டு முல்லச்சேரி,

தென்மலையானம்,

### கட்டுரையாளர்கட்கு.

நமது குடிஅரசுக்கு ஒவ்வொரு வாரமும் ஏராளமான கட்டுரைகள் வந்துசேருவதால் பல அன்பர்கள் விரும்புகிறபடி உடனே அவர்களின் கட்டுரைகளை வெளியிட முடிவதில்லை. சிறந்த கட்டுரைகள் எல்லாம் பத்திரமாக வைக்கப்பட்டு நாளடைவில் தவறாமல் வெளியிடப்படும். ஆதலால் கட்டுரை எழுதும் அன்பர்கள் கட்டுரைகளின் தாமதத்திற்கு மன்னிக்கவேண்டுகிறோம். ப-ர்.

---

# குடி அரசு.

ஈரோடு 1932 ஜூன்௴ 5-உ

## இளைஞர்களும் சுயமரியாதையும்.

—:0:—

### கத்தோலிக்கர் பயம்.

இளைஞர்களுக்கும், சுயமரியாதை இயக்கத்திற்கும் உள்ள தொடர்பைப் பற்றி இப்பொழுது நாம் கூறுவது புதியதன்று. இந்த நாட்டில் மட்டிலும் அல்ல, வேறு எந்த நாட்டிலும் மூடப்பழக்க வழக்கங்களையும், அவற்றிற்குத் தந்தைமார்களாக இருந்து வளர்த்து வரும் புரோகிதர்களின் ஆதிக்கங்களையும், இந்தப் புரோகிதர்களின் வயிற்றுப் பிழைப்பு வஞ்சகச் செயல்களுக்கெல்லாம், ஆதரவு கொடுத்து வரும் மதங்களையும் அழித்துத் தவிடுபொடி செய்வதற்குக்காரணமாக இருந்தவர்கள் அந்நாட்டின் வாலிபர்கள் என்பதை உலக ஞானம் உள்ள எவரும் அறிவார்கள். இளைஞர்களால் விரும்பப்படாததும், அவர்களுடைய கூட்டுறவையும் ஒத்துழைப்பையும் பெறாததுமான எந்த இயக்கமும் மாண்டு மடிந்து இருந்த இடம் தெரியாமலும், தேச மக்களின் நினைவில் கூட இல்லாமலும் போதல் திண்ணம். ஏனென்றால் முதியோர்களைப் போன்று அழுக்கேறிப் பாசம் பிடித்து, சுரணையற்றுப் போன மூளை இளைஞர்களிடமில்லை. "இது நமது முன்னோர் வழக்கமாயிற்றே இதை விட்டு விட்டால் நமக்கு ஏதாவது தீங்கு நேர்ந்து விடுமோ! அண்டை அயலார் நம் மேல் பழி கூறுவார்களே! இதனால் நமது வருவாய்க்கு இடையூறு நேர்ந்து விட்டால் என்ன செய்வது? வழக்கத்திற்குவிரோதமாக நடந்தால் "குல தெய்வம்" கெடுத்து விடுமோ "தெய்வம்" கோபித்துக்கொள்ளுமே" என்று தொட்டதற்கெல்லாம் சந்தேகமும், பயமும் கொள்ளுகின்ற கோழைத் தனமும் பேடித்தனமும் இளைஞர்களிடமில்லை. இளைஞர்களின், சிந்தையும், அறிவும், செயலும் பரிசுத்தமானவை; ஒரு கட்டுப்பாட்டுக்குள் அடங்காதவை; சுயநலவிவகாரங்களில் படிந்து மூளை மழுங்காமல் கூர்மையாகவே இருப்பவை. ஆகையால் அவர்கள் எந்தச் செயல்களையும் ஆலோசித்துப் பார்த்து அவை சரியானவை என்று தம் மனத்திற்குப் பட்டால் உடனே அந்தக்காரியத்தை யாருடைய புகழ்ச்சியையும், இகழ்ச்சியையும் எதிர்பாராமல், ஆதரிப்பையும் புறக்கணிப்பையும் பொருட்படுத்தாமல், எதிர்ப்பையும் கண்டிப்பையும் லட்சியம் பண்ணாமல் செயல்முறையில் காட்டக் கூடிய ஆண்மை படைத்தவர்கள். ஆகையால் தான் அவர்கள் தலையிட்டு, அவர்களுடைய ஆதரவைப் பெற்று, அவர்களுடைய ஊழியத்தைப் பெற்று, நடைபெறக் கூடிய எந்த இயக்கங்களும் மின்சார சக்தி போல் பரவி வெற்றி பெற்று வருகின்றன.

துருக்கி தேசத்தின் சுயமரியாதை வீரரான "முஸ்தபா கமால்பாஷா" அவர்களின் கொள்கைகளை முழு மனத்துடன் ஆதரித்து நாடெங்கும் பரவச் செய்து வெற்றியைக் கொடுத்தவர்கள் இளைஞர்கள்; இத்தாலி தேசத்தின் சுயமரியாதை வீரராகிய "முசலோனி" அவர்கள் அந்நாட்டு இளைஞர்களின் ஆதரவைப் பெற்றே தமது கொள்கைகளில் வெற்றி பெற்றார்; ருஷியா தேசத்துச் சுயமரியாதை வீரராகிய, "லெனின்" அவர்களும், இளைஞர்களின் துணையைக் கொண்டே தமது கொள்கைகளை நிலைநிறுத்தி வெற்றி பெற்றார்; ஸ்பெயின் தேசத்தில் புரோகிதர்களின் ஆதிக்கத்தை ஒழித்து மக்களின் சுயமரியாதையைக் காப்பாற்றக் காரணமாயிருந்தவர்களும், இருக்கின்றவர்களும் இளைஞர்கள்; கடந்த மகாயுத்த காலத்தில், அப்பொழுது பிரிட்டிஷ் முதல் மந்திரியாக இருந்த திரு. லாயிட் ஜார்ஜ் அவர்களின் விருப்பத்தின் படி நின்று இங்கிலாந்தின் சுயமரியாதையைக் காப்பாற்றியவர்கள் அந்நாட்டின் இளைஞர்கள் என்னும் விஷயங்கள் சரித்திர ஞானம் உள்ளவர்களுக்கெல்லாம் தெரியாதவை யல்ல.

பழயகால சரித்திரங்களைப்புரட்டிப்பார்த்தாலும் இந்த உண்மையை வெளிப்படையாக உணரலாம். கிரீசின் வைதீக முதலாளிக்கூட்டத்தாரால் அக்கிரமாகக் குற்றஞ்சாட்டி விஷங்கொடுத்துக் கொல்லப்பட்ட 'சாக்கரட்டீஸ்' என்னும் பெரியாரின் கொள்கைகளை ஆதரித்தவர்கள் இளைஞர்கள்; அக்காலத்தில் மூட நம்பிக்கை இருளில்மூழ்கிக்கிடந்த மக்களுக்குப்புரோகிதர்களின் வஞ்சகச்செய்கைகளை எடுத்துக்காட்டி அவர்களை விடுதலை செய்த ஏசு கிறிஸ்துவின் கொள்கைகளைப்பரவச்செய்தவர்கள் இளைஞர்கள்; விக்கிரக ஆராதனைகளிலும் பலிகளிலும் கொடுமையான வழக்கங்களிலும் அமிழ்ந்திக்கிடந்த அரேபிய தேசமக்களுக்குச் சுயமரியாதையை உண்டாக்கிய முகமதுநபி அவர்களின் கொள்கைகளுக்கு ஆதரவு அளித்தவர்கள் இளைஞர்கள்; ஜெர்மனி தேசத்தின் சுயமரியாதை வீரராகிய மார்ட்டின் லூதர் அவர்களின் கொள்கைகளை ஆரம்பத்தில் ஆதரித்து நாடெங்கும் பரப்பியவர்கள் இளைஞர்கள்; மேற்கூறிய பெரியார்கள் அனைவரும் புரோகிதர்களின் மோசங்களையும், அக்கிரமங்களையும், வேஷங்களையும், எடுத்துக்காட்டி தேச மக்களை விழிப்படையச் செய்ய முயன்றபோது முதியவர்களான வைதிகர்களும், புரோகித ஆதிக்கத்திற்கு அடங்கியவர்களும் எதிர்த்து அப்பெரியார்களுக்குப் பலவகையான துன்பங்களை உண்டாக்கிய காலங்களிலும் அஞ்சாமல் அவர்கள் கொள்கைகளை ஆதரித்துப் பரவச்செய்தவர்கள் பரிசுத்தமனமுடைய இளைஞர்களே என்பதைக்கற்றவர்கள் யாவரும் அறிவார்கள்.

இந்த இருபதாம் நூற்றாண்டிலும், ஏழு ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட நமது சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டு இதைப் பரவச்செய்து வருபவர்கள் அனைவரும் பெரும்பாலும் இளைஞர்களே என்பதை யாரும் அறிவார்கள். இன்று சுயமரியாதை இயக்கத்தைஒழிக்கவேண்டுமென்று பிரயத்தனம் பண்ணியபடு வைதிகர்களின் பிள்ளைகளையும் நமது இயக்கம் வெளியில் இழுத்துத்தன்னோடு சேர்த்துக்கொண்டு வளர்த்துவருவதுடன், அவ்வைதிகத்தந்தைமார்களின் உச்சிக்குடுமையையும் பிடித்துக்குலுக்குகிறது என்பது நாடெங்கும் தெரிந்த செய்தியாகும்.

'சைவப் பெரியார்'களெல்லாம் மகாநாடுகள் கூட்டிச்சுயமரியாதையியக்கத்தைக்கண்டித்தார்கள் சைவ இளைஞர் மகாநாடு கூட்டி அவர்களையெல்லாம் சுயமரியாதை இயக்கத்தில் சேரவிடாமல் தடுத்துப்பார்த்தார்கள். என்ன தான் முயன்றாலும் இளைஞர் மனத்தையும் சுயமரியாதை இயக்கத்தையும் வேறுபடுத்த முடியாமல் இப்பொழுது மூலையில் உட்கார்ந்துவிட்டார்கள்,

ஆனால் இப்பொழுது கத்தோலிக்கக்கிறிஸ்துவர்களில் சிலர் நம்மைக்கண்டிக்க முற்பட்டிருக்கின்றதைக்கண்டு நாம் ஆச்சரியமடையவில்லை. புரோகித ஆதிக்கம் எங்தெந்த இடங்களில் இருக்கின்றதோ அங்கெல்லாம் நமது இயக்கம் சென்று அவ்வாதிக்கத்தைத்தள்ளத்தாமற்போகாது.

இந்தியாவில் புரோகிதர்களின் சட்டத்திற்கும், நிபந்தனைகளுக்கும் அடங்கியுள்ள மதங்களில் கத்தோலிக்கக்கிறிஸ்துவர்கள் மதமும் ஒன்று என்று சொல்லப்படுகிறது. ஆகையால்தான் அம்மத இளைஞர்கள் பலர் இப்பொழுது சுயமரியாதை உணர்ச்சி பெற்று வருகிறார்கள். இதைக்கண்டு பயந்தே அம்மத வைதீகர்களின் ஆதிக்கத்தில் சென்ற 30—5—32ல் தூத்துக்குடியில் நடைபெற்ற கத்தோலிக்க வாலிபர்களின் மகாநாட்டில் நமது இயக்கத்தைக் கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். அத்தீர்மானம் வருமாறு;-

> சமத்துவம், சகோதரத்துவம் என்ற கொள்கைகளை மேலே போர்த்துக் கொண்டு நாஸ்திகத்தையும் மதத்தில் வெறுப்பையும் பரப்பி வரும் சுயமரியாதை இயக்கத்தைப் பற்றி இம்மகாநாடு கத்தோலிக்க இளைஞர்களுக்கு எச்சரிக்கை செய்வதுடன்.
>
> சமத்துவமின்மையை உண்டு பண்ணியவர்களும், அதை ஆதரித்து வருகின்றவர்களும், குருக்கள்மார்கள். என்று சொல்லிக் குருக்கள்களை எதிர்த்தும், அவர்கள் மேல் குறை கூறியும் வரும் மனப்பான்மையை வளர்த்து வருவதையே நோக்கமாகக்கொண்டுள்ள இவ்வியக்கத்தின் செயல்களில் ஒன்றை இம்மகாநாடு முக்கியமாகக் கண்டிக்கிறது.
>
> இத்தகைய பிரசாரத்தை அழிக்கத் தங்களால் முடிந்தவகையில் எல்லாம் முயற்சி செய்யுமாறு இம்மகாநாடு கத்தோலிக்க வாலிபர்களைக் கேட்டுக் கொள்ளுகிறது.

மேற்கண்ட தீர்மானத்தைக்

கத்தோலிக்க வாலிபர்கள் மகாநாட்டில் நிறைவேற்ற வேண்டிய அவசியம் நேர்ந்ததற்குக் காரணம் இன்னதென்பதை நாம் விளக்கிக் காட்ட வேண்டியதில்லை இத்தீர்மானத்தில் "சமத்துவமின்மையை உண்டு பண்ணியவர்களும், அதை ஆதரித்து வருகின்றவர்களும் குருக்கள்மார்கள் என்று சொல்லிக் குருக்களை எதிர்த்தும் அவர்கள் மேல் குறை கூறியும் வரும் மனப்பான்மையை வளர்த்து வருவதையே நோக்கமாகக் கொண்டுள்ள இவ்வியக்கத்தின் செயல்களில் ஒன்றை இம்மகாநாடு முக்கியமாகக் கண்டிக்கிறது" என்று விளக்கமாகக் கூறப்பட்டிருப்பது ஒன்றே போதுமானதாகும்.

இத்தீர்மானத்தைச் செய்தவர்களுக்கு நாம் சொல்லுகின்றோம். சமத்துவம் சகோதரத்துவம், சுதந்திரம் என்பனவைகளை உண்டாக்குவதே எங்கள் இயக்கத்தின் நோக்கம்; இவைகளுக்குத் தடையாக இருப்பவை புரோகிதர்களும், கடவுள், மோட்சம், நரகம், சொர்க்கம், பாவம், பாவமன்னிப்பு, பரலோகம் முதலிய பூச்சாண்டிகளேயாகும். இவைகளின் மேல் மக்கள் கொண்டிருக்கும், மயக்கத்தையும் நம்பிக்கையையும் ஒழித்தால் தான் சுயமரியாதையை உண்டாக்க முடியும் என்று தான் பிரசாரம் பண்ணிக் கொண்டு வருகின்றோம். இந்தப் பிரசாரத்தை அடிப்படையாகக் கொண்டு தான் எங்கள் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இப்பொழுதும் இப்பிரசாரமே எங்கள் இயக்கத்தின் முதன்மையாக இருந்து வருகிறது. இந்தப் பிரசாரமானது கத்தோலிக்க இளைஞர்கள் மனத்திலும், சைவ இளைஞர்கள் மனத்திலும், வைணவ இளைஞர்கள் மனத்திலும், முஸ்லீம் இளைஞர்கள் மனத்திலும், மற்ற எந்த இளைஞர்கள் மனத்திலும் புகுந்து தான் தீரும். இந்த உணர்ச்சி இளைஞர்கள் மனத்தில் வேரூன்ற, வேரூன்ற பாதிரிகளுக்கும், பண்டார சன்னதிகளுக்கும், ஜீயர்களுக்கும், முல்லாக்களுக்கும் மற்றுமுள்ள சமூதாயத்தை அரித்துக் கெடுக்கும் விஷப்பூச்சிகளாகிய புரோகிதக் கூட்டங்களுக்கும் செல்வாக்கும் வயிற்றுப் பிழைப்பும் இல்லாமல் போகும் என்பதில் ஐயமில்லை.

சுயமரியாதை இயக்கம், குருக்கள் மார்களின் வஞ்சகச் செயல்களைக் கண்டிக்கின்றதென்று ஆத்திரப்பட்டு, வாலிபர்களுக்கு எச்சரிக்கை செய்ய முன் வந்த கத்தோலிக்க கிறிஸ்துவ வாலிபர் மகாநாட்டார், அவர்களுடைய "கடவுள் குமாரன்" என்று சொல்லப்படுகின்ற ஏசுநாதர் புரோகிதர்களைக் கண்டித்திருப்பதற்கு என்ன செய்யப் போகிறார்கள்?

"நீங்கள் குருக்கள் என்று அழைக்கப் படாதிருங்கள்! கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார்."

'வஞ்சகர்களாகிய வேதபாரகர்களே பரிசேயர்களே! நீங்கள் வெளி வேஷத்திற்காக அதிக ஜெபம் பண்ணுவது போலக் காட்டி, விதவைகளின் வீடுகளை அபகரிக்கிறீர்கள்'

"சாப்பிடுகின்றதும் தண்ணீர் அருந்துவதுமான பாத்திரங்களின் வெளிப்புறத்தை மாத்திரம் சுத்தமாக்குகிறீர்கள்! உட்புறத்திலோ அவைகள் கொள்ளையினாலும் அநீதத்தினாலும் நிறைந்திருக்கின்றன"

"நீங்கள் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள்! அவைகள் வெளியே அலங்காரமாகக் காணப்படும் உட்புறத்திலோ இறந்தவர்களின் எலும்புகளும் எல்லா அசுத்தங்களும் நிறைந்திருக்கும்,"

"அப்படியே நீங்களும் வெளி வேஷத்தில் நீதிமான்கள் போல மக்களுக்குக் காணப்படுகிறீர்கள்! உள்ளத்திலோ, வஞ்சகத்தினாலும், அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்!" என்று மத்தேயு சுவிசேஷம் 23 வது அதிகாரத்தில் சொல்லப்படும் விஷயத்தை நாம் இக்காலத்தில் எல்லாமதத்தில் உள்ள குருமார்களுக்கும் பொருத்தமானதென்று தான் சொல்லுகிறோம். எங்கள் இயக்கம் குறிப்பிட்ட ஒருமதத்தைக்கண்டிக்கவோ, அல்லது ஒரு வேதத்தைக் கண்டிக்கவோ, அல்லது ஒருமத குருமார்களைக்கண்டிக்கவோ எழுந்தது அன்று என்றுபலதடவை விளக்கப்பட்டிருக்கிறது. மக்களின் பகுத்தறிவிற்கு முட்டுக்கட்டைகளாக இருக்கும் எல்லா மதங்களையும், எல்லா வேதங்களையும், எல்லா மதக்குருக்கள்மார்களின் வஞ்சகங்களையும் ஒழிக்கவே செய்யும் என்பதை இப்பொழுதும் கூறுகிறோம்.

உண்மையில் இந்த விஷயங்கள் இளைஞர்களுக்கெல்லாம் தெரியாதவைகளும் அல்ல. புரோகிதர்களின், மோசங்களும் வஞ்சகங்களும், அவர்களுக்கு ஆதரவாக இருக்கும் மதப்புரட்டுகளும் இளைஞர்கள் மனத்தில் இயற்கையாகவே வேரூன்றி வந்து கொண்டிருக்கின்றன. ஆகையால் இனி எவர் என்ன தீர்மானங்கள் செய்தாலும், பிரசாரம் பண்ணினாலும் இளைஞர்களின் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாது என்று எச்சரிக்கை செய்கின்றோம்.

---

## சௌந்தர பாண்டியன், ராமசாமி அறிக்கை.

சென்ற 22-5-32 "குடி அரசில்" எதிரிகளின் விஷமப் பிரசாரம் என்னும் உதவித் தலையங்கத்தில் நாம், திரு. சௌந்திர பாண்டியன், திரு. வி. வி. ராமசாமி முதலியவர்கள் நமது இயக்கத்தைவிட்டு விலகவில்லையென்றும், நமது தலைவர்கள் ஈ. வெ. ராமசாமி, ஆர். கே. ஷண்முகம் முதலியவர்கள் வரும்வரையில் நடவடிக்கையில் மாத்திரம் கலந்துகொள்வதில்லையென்று தான் முடிவு செய்திருக்கிறார்கள் என்றும், இது சம்பந்தமாக சண்டமாருதத்தில் வெளிவந்த அறிக்கையை வைத்துக்கொண்டு நமது எதிரிகள், நமது இயக்கத்தில் பிளவுண்டாக்க விஷமப்பிரசாரம் புரிகிறார்களென்றும், குறிப்பிட்டிருந்தது வாசகர்களுக்குத் தெரியும். நாம் இவ்வாறு குறிப்பிட்டிருந்ததற்கு அநுசரணையாகவே சென்ற 30—2—32ல் வெளிவந்த 'திராவிடன்' பத்திரிகையில் திரு. சௌந்தரபாண்டியன் அவர்களும், திரு. வி. வி. ராமசாமி அவர்களும் வெளியிட்டிருக்கும் அறிக்கையை வாசகர்கள் தெரிந்துகொள்ள வேண்டி கீழே வெளியிட்டிருக்கிறோம். அவ்வறிக்கை வருமாறு:—

நமது இயக்கத்தின் தலைவர்கள் ஈ. வெ. ஆர்., ஆர். கே. எஸ்., முதலியவர்கள் வந்து நமது இயக்கத்தின் கொள்கைகளையும், சங்கத்தின் நோக்கங்களையும், கிளைச் சங்கங்களின் வேலைகளையும், தொண்டர்களின் நிர்மாணத் திட்டங்களையும், அவர்கள் தம் பொறுப்பையும், வரையறுத்துத் தீர்மானம் செய்யும் வரை நாம் இயக்கத்தின் தீவிர நடவடிக்கைகளில் கலந்து கொள்ளுவதில்லையே தவிர நாம் இயக்கத்தினின்றும் விலகவோ, இயக்கக் கொள்கைகளினின்றும் மாறுபடவோ இயக்கத்தின் ஆக்க வேலைகளுக்கு ஆதரவளிக்கத் தயங்கவோ மாட்டோம் என்பதை சுயமரியாதை அன்பர்களுக்குத்தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## திவான்பகதூர் பி. சி. என். எதிராஜுலு நாயுடு அவர்கள்.

---

ஜஸ்டிஸ் கட்சியின் பிரபல அங்கத்தவர்களுள் ஒருவரான திவான்பகதூர் பி. சி. என். எதிராஜுலு நாயுடு அவர்கள் திடீரெனக்காலஞ்சென்ற செய்திகேட்டு வருந்துகின்றோம். குண்டூர் ஜில்லா போர்டு தலைவராகவும் ஜில்லாக்கல்விக்கழகத்தலைவராகவும், ஜில்லா உயர்தரக்கல்விக்கழகத்தலைவராகவும், சென்னைச்சர்வகலாசாலை அங்கத்தினராகவும், ஆந்திர சர்வகலாசாலை அங்கத்தினராகவும் இருந்து உழைத்து வந்தார். சமீபத்தில்தான் அரசாங்க சபை அங்கத்தினராகப் போட்டியின்றித்தேர்ந்தெடுக்கப்பட்டார், எத்தகைய வெற்றியும் தோல்வியும் ஏற்பட்ட காலத்திலும் ஜஸ்டிஸ் கட்சியிலிருந்து சிறிதும் வேறுபடாமல் அக்கட்சியின் உறுப்பினராகவே கடைசி வரையிலும் இருந்து வந்தது இவருக்கு அக்கட்சியின்பால் இருந்த அன்பையும் ஊக்கத்தையும் காட்டுவதாகும். ஆகவே இவரை இழந்து வருந்தும் அன்பர்களுக்கும் அவர் குடும்பத்தினர்க்கும் நமது அநுதாபத்தைத்தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

---

## திருமதி. தியாகராய செட்டியார் மரணம்.

காலஞ்சென்ற சர் பி. தியாகராய செட்டியாரது மனைவியாரான திமருதி தியாக ராய செட்டியார் 31-5-32ந் தேதி பிற்பகல் 2மணிக்கு தண்டையார் பேட்டையிலுள்ள தமது பங்களாவில் இறந்து போனார். இவருக்கு 72வயதாகிறது. இவர் சிலகாலமாக சீதபேதியினால்கஷ்டப்பட்டு வந்தார். மாலையில் சவம் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது-

---

## சுயமரியாதை இறுதிக்கடன்.

1-6-32ந்தேதி பட்டுக்கோட்டை சுயமரியாதைத் தோழரும் பிரபல காசுக்கடை வியாபாரியுமான திரு. கே. எல். சிவராமகிருஷ்ணன் அவர்களின் தமயனார் திரு. கே. எஸ். முருகேசன் அவர்கள் 21-6-32 புதன்கிழமை முற்பகல் 7மணிக்கு கோலக்கிள்ளானில் (F. M. S.) உயிர் துறந்தார்.

7-6-32 செவ்வாய்க்கிழமை பட்டுக்கோட்டையில் அவரது இறுதிக் கடன் நடைபெறும். (ஒரு நிருபர்)

## தற்கொலை தெய்வீகமா?

(தேசியத்துரோகி.)

மருலிப்பட்டிணத்தில், ஒரு போலீஸ் சேவகரின் மகளுக்குக் கல்யாணம் நடத்துவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாம். கல்யாணத்திற்கு முதல் நாள் அந்த மணப்பெண், கல்யாண உடைகளை அணிந்துகொண்டு வீட்டின் கொல்லைப்புறத்தில் அடுக்கியிருந்த விறகில் ஏறித் தானே நெருப்புவைத்துக்கொண்டு இறந்துவிட்டாளாம். இவ்வாறு இறந்ததற்குக் காரணம் அப்பெண் தன்னை "தெய்வத்தன்மை உள்ளவள்" என்றும், தான் "மனிதனைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள யோக்கியதை இல்லை" என்றும் கூறியதாகவும் கடிதம் எழுதிவைத்திருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

அப்பெண் இறந்ததற்குத் "தெய்வத்தன்மை" கற்பிக்கப்பட்டவுடன், ஏராளமான ஜனங்கள் கூடி, முனிசிபல் அதிகாரிகளின்உத்திரவு பெற்று அப்பிணத்தை ஊர்வலமாகத் தூக்கிச் சென்று அடக்கஞ் செய்தார்களாம். இதன் பின், அப் பிணத்தைப் புதைத்த இடத்தில் கோயில் கட்டுவதற்காக ஜில்லா முழுதும் பணம் வசூல் பண்ணுகிறார்களாம்.

நமது நாட்டு மக்களின் பயித்தியக்காரத்தனத்தைக் காட்டுவதற்குஇதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும்?

வாங்கின கடனைத் திருப்பிக்கொடுக்கமுடியாத காரணத்தால் மானமுள்ளவர்கள் பலர் தற்கொலை செய்துகொண்டு உயிர் துறந்திருக்குறார்கள். கௌரவமாக ஜீவனம் பண்ணியவர்கள், கஷ்டப்படவேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்தபோது கஷ்டம் பொறுக்கமுடியாமல் தற்கொலை செய்துகொண்டிருக்கிறாகள். குடும்பச்சச்சரவு காரணமாகத் தற்கொலை செய்து கொண்டு மடிந்துபோனவர்களில் ஆண்களும் உண்டு, பெண்களும் உணடு. மணமகன் பிடிக்காத காரணத்தால், மணமகள் தற்கொலை செய்து கொண்டு இறப்பதும், மணமகள் பிடிக்காத காரணத்தால் மணமகன் தற்கொலை செய்து கொண்டு சாவதும் உண்டு. இம்மாதிரி இதற்கு மூன் நடைபெற்றும் இருக்கின்றது. ஆகையால் தற்கொலை செய்துகொண்டு இறப்பதில் தெய்வத்தன்மை கற்பிப்பதும், அதை மக்கள் நம்பி ஏமாறுவதும் மூடத்தனமேயாகும்.

மருலிப்பட்டணத்தில் இறந்துபோன மணப்பெண் விஷயமும் வெறும் தற்கொலையே தவிர வேறு ஒன்றும் ஆச்சரியமுள்ளதல்ல வென்றே நாம் சொல்லுவோம்.

அந்தப்பெண், தனக்குக் குறிப்பிட்டிருந்த மாப்பிள்ளை பிடிக்காத காரணத்தால் இறந்திருக்கவேண்டும்; அல்லது புத்தி தடுமாற்றத்தால் இறந்திருக்கவேண்டும். இதைத்தவிர வேறு எந்தக்காரணமும் கூறமுடியாது.

இவ்வாறு உண்மையைச் சிந்தித்துப்பார்க்கும்அறிவில்லாமல்"தெய்வீகத்தன்மை"யை நம்பி ஒருவர்சென்ற வழியே மற்றவர்களும் ஆட்டு மந்தை போலச் செல்வதனால் உண்டாகும் பயித்தியக்காரத்தனத்தையும், பொருள் நஷ்டத்தையும் யாராவது கவனிக்கின்றார்களா?

இந்த மாதிரியே செத்துப்போனவர்கள் சம்பந்தமாக உண்டான மூட நம்பிக்கைகள் காரணமாகத்தான்இன்று நமது நாட்டில் எண்ணற்ற கோயில்கள் பெருகியிருக்கின்றன. கிராமங்களில் உள்ள பல வகைப்பட்ட கோயில்களெல்லாம் செத்துப்போன மனிதர்கள் பேரால் ஏற்பட்டவை என்பதை இன்றும் கிராமங்களில் உள்ளவர்கள் அந்தக்கோயில் "சாமி"களைப்பற்றிச்சொல்லும் கதைகளால் அறியலாம். இப்பொழுது மருலிப்பட்டணத்தில்நடந்தசம்பவமும்இதற்குத் தகுந்த உதாரணமாகும்.

பொது ஜனங்களிடம், இந்த மாதிரியான இயற்கை நிகழ்ச்சிகளையெல்லாம் "தெய்வத்தன்மை" என்று நம்புகின்ற குணம் இருக்கின்ற வரையிலுமவர்கள் முன்னேற்றமடையப்போவதில்லை. ஆகையால் பகுத்தறிவுடைய தோழர்கள் இதுபோன்ற விஷயங்கள் நேரும்போதெல்லாம் பொது ஜனங்களை எச்சரித்து ஏமாறுமலிருக்கும்படி செய்ய முன் வருமாறு வேண்டுகிறோம்.

---

## இந்தியாவில் நிர்வாண இயக்கம்.

### அரசாங்கத்தாரின் ஆதரவு.

(ஸ்குரூஉ லூஸ்.)

முன்பு நாம் வாந்தி யெடுத்ததில் கஷ்ட நிவர்த்திக்கு வழிசொல்லியிருந்தோம். அந்த வழியை மறந்திருக்கமாட்டீர்கள்?மறந்து விட்டால் இப்பொழுதும் சுருக்கிச் சொல்லி விடுகிறேன். நெஞ்சில் ஆணித்தரமாகப்பதிய வைத்துக்கொள்ளுங்கள். "உலகத்துன்பம், கவலை,ஒழியவேண்டுமானால், எல்லோரும்,ஆடை அணி, கல்வி, அறிவு, நாகரிகம் ஒன்றுமில்லாமல், மிருகங்களாக மாறவேண்டும்" என்பதே முன்பு நாம்கூறியது.

இந்த நிர்வாண இயக்கம் இந்தியாவில் இல்லை யென்று கவலைப்பட்டேன். அதை எப்படி உண்டாக்குவது என்று ஆலோசித்துக்கொண்டிருப்பதாகக் கூறினேன். ஆனல் இப்பொழுது நமது பங்கில் சீட்டு விழுந்து விட்டது. நாசிக்கில் இந்த இயக்கம் ஆரம்பமாகி விட்டது. அரசாங்கத்தாரும் இதற்கு ஆதரவளித்து விட்டார்கள். இனிக்கவலையில்லை. இது சம்பந்தமாக அசோசியேட்டட் பிரஸ் செய்தி ஒன்று பத்திரிகைகளில் வெளியாகி இருக்கிறது. அது வருமாறு:—

நாசிக், ஜூன் 1.

"இங்கு "சிம்மஹஸ்தி" என்னும் ஒரு திருவிழா 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும். இது ஒரு ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக, வெகு சிறப்புடன் நடக்கும். இத்திருவிழாக் காலத்தில் பல சந்நியாசிகள், நிர்வாணமாக ஊர்வலம் வருவது வழக்கம். ஆகையால் சென்ற 1861 ஆம் வருடத்திலிருந்து இத்திருவிழாவை நடத்த முடியாமல் அரசாங்கத்தார் தடுத்து விட்டார்கள். ஆனல் இப்பொழுது மீண்டும் அரசாங்கத்தார் இத்திருவிழாவை நடத்த அனுமதி கொடுத்திருப்பதாகத்தெரிகிறது. இம்மாதமுதல் திருவிழா ஆரம்பித்து நடக்கப்போகிறது. ஆகஸ்டு மாதம் முதல் தேதியில் மட்டிலும், நிர்வாண சந்நியாசிகள் ஊர்வலம் செல்லுவதற்கு அரசாங்கத்தார் சம்மதம் கொடுத்திருக்கிறார்கள். தாரிம்பகம் என்னும் மடத்தில் உள்ள சந்நியாசிகளில் சுமார் 175 பேர் ஊர்வலமாகப் புறப்படுவார்கள். அவர்கள், மடத்திலிருந்து புறப்பட்டு பக்கங்களில் உள்ள கிராம வீதிகளின் வழியாக ஏறக்குறைய இரண்டு மைல் தூரம் ஊர்வலம் போவார்கள். இறுதியில் கோதாவரி நதி உற்பத்தியாகும் இடத்தையடைந்து அப்புண்ணிய தீர்த்தத்தில் நீராடுவார்கள்"

தோழர்களே! மேற்காட்டிய செய்தி நமது கைச்சரக்கல்ல; அசோசியேட்டட் பிரஸ் செய்தி. ஆகையால் இது உண்மையானதென்பதில் ஐயமில்லை. இனி, நமது அபிப்பிராயத்தைக் குறை கூறுபவர்கள் கொஞ்சம் நிதானிக்கவேண்டும். இதுபோன்ற நிர்வாணத்திருவிழா அநேக காலமாக நாசிக்கில் நடந்துவந்ததாகத் தெரிகிறது.

ஆகையால் இந்த இயக்கமும்,இது பற்றிய நமது அபிப்பிராயமும் புதிதல்ல. இந்த இயக்கம் இப்பொழுது தான் அமெரிக்கா, ஜெர்மனி, பெல்ஜியம், பிரான்ஸ் முதலிய இடங்களில் ஆரம்பித்திருப்பது, நமது இந்திய சந்நியாசிகளைப்பார்த்துக் காப்பியடித்ததுதான் என்றுநான்சத்தம் போட்டு சொல்லுவேன்.

இனி என்னைப்"பயித்தியம்" என்று சொல்லாதீர்கள்! என்னைப்"பயித்தியம்" என்பீர்களானல் நாசிக்கில் 1861ஆம் வருடத்திற்கு முன் நிர்வாணமாக ஊர்வலம்போய்க்கொண்டிருந்த சந்நியாசிகளும் பயித்தியக்காரர்கள். அவர்கள் முன்னோர்களும் பயித்தியக்காரர்கள். இந்த திருவிழாவுக்ிப்பொழுது அனுமதி கொடுத்திருக்கும் அரசாங்கத்தார்களும் பயித்தியக்காரர்கள். ஆயைால் ஜாக்கிரதை! எனது அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்ளுங்கள்!

---

## கௌரவப்பட்டங்கள்.

ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியின் பிறந்த தினத்தை முன்னிட்டு விருதுநகர் முனிசிபல் அங்கத்தினர் திரு. எம். எஸ். பி. செந்திக்குமார், சேலம் தாலூக்கா போர்டு தலைவர் எஸ். பி. ராஜமாணிக்கம், சென்னை சட்ட கல்லூரி லெக்சரரும் தாழ்த்தப்பட்டார் பெடரேன் காரியதரிசியுமான திரு. என். சிவராஜ் எம். எல். சி. ஆகியவர்களுக்குராவ்சாகிப் பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது.

---

## தோழர் அ. பொன்னம்பலம்.

'புதுவை முரசு' ஆசிரியர் தோழர் அ. பொன்னம்பலம் அவர்கள் உடல் நலிவால் பீடிக்கப்பட்டுக் காரைக்குடியிலிருந்து வருகின்றார். பண்டிட் தோழர் வேங்கடசாமி அவர்கள் வைத்திய சாலையில் டாக்டர் தோழர் கோவிந்தராஜுலு அவர்களுடைய சிகிச்சையிலிருந்து வருகின்றார்.

தோழர்கள் ராமசுப்பையா, ராம சின்னையா, சுப சுப்பையா முதலியவர்கள் பக்கத்திலிருந்து உதவிபுரிகின்றார்கள். இராமநாதபுரம் ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மகாநாடு காரைக்குடியில் நடைபெறும்வரை காரைக்குடியில்தான் தங்கியிருப்பார். அவருக்கு எழுதும் கடிதங்கள் யாவும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதும்படி அறிவிக்கிறார்.

விலாசம்:—

அ. பொன்னம்பலம்
C/o ராம. சுப்பையா அவர்கள்,
முத்துப்பட்டணம்,
காரைக்குடி.

---

## வேலூர் கோவாப்ரேஷன் சென்ரல் பாங்கி.

ஷை பாங்கியின் பொதுக்கூட்டம் ஒன்று 1-5-32-ந்தேதி பள்ளிகொண்டையில் நடந்த கூட்டுறவுப் பெருங்கழகப்பந்தலில் 30-5-32ம் தேதி மாலை நடைபெற்றது. இக்கூட்டத்தில் இப்பாங்கியின் போர்ட் ஆப் மானேஜ்மெண்டுக்கு 32, 33ம் வருஷத்திற்காக தனிப் பங்குதாரர்களில் கீழ்க்கண்ட எழுவரை தெரிந்தெடுக்கப்பட்டது.

திருவாளர்கள் ராவ்பகதூர் பி. முருகேச முதலியார் அவர்கள், பி. சங்கரய்ய நாயுடு, டி. எஸ். முத்துகுமாரசாமி முதலியார், டாக்டர் வி. சி. கிருஷ்ணசாமி முதலியார், கே. பி. சந்தோஷம், பி. ரங்கநாத முதலியார், எ. ராமச்சந்திர செட்டியார், இதில் முக்கியமாக கவனிக்கவேண்டிய விஷயம் யாதெனில்:- பாங்கியின் தற்போதய தலைவர், உபதலைவர், காரியதரிசி ஆகிய யாவரும் தோல்வியடைந்தார்கள் என்பதே.

# உலகும் ஏழை மக்களும்

(கோ: ஷண்முகசுந்தரம்)

உலகின்,காலச்சக்கரமானது வெகுவேகமாகச் சுழன்று ஓடிக்கொண்டே இருக்கின்றது. எத்திசைநோக்கினும், ஏழைமக்களின், பசி, தாகம், என்ற குரலே நம்மிரு செவிகளிலும் இடையறுதுகேட்கின்றன. ஆழ்ந்து நோக்கும் இயல்புடைய எம்மனிதனுக்கும் இவைவிளங்காமற்போகா. ஆனல் அறிஞர்கள்,பொது அவதாரபுருடர்கள் மகான்கள், மகாத்மாக்கள், என்றும் ராவ்சாகிப், ராவ்பகதூர், திவான்பகதூர், சர், என்பனபோன்ற பட்டங்களைச்சூட்டிக்கொண்டு திரியும்நபர்களும், மற்றும் பொருளாதாரத்துறையில், தன்னேடு போட்டி போடுவோர் இவ்வுலகிலெவருமிரார் என்றுமனப்பால்குடித்து, பணத்திமிறினல் மதிமயங்கிக்கிடக்கும் அகம்பாவ வெறியர்களும், மற்றுமுள்ள ஏனையசெல்வச்சீமான்களும், இவ்வேழைமக்களின்பால் இரக்கம் செலுத்தி, அவர்களை உய்விக்கும் படியான மார்க்கம் ஏதாவது செய்திருக்கின்ருர்களா? அல்லது அவ்வாறு, செய்வதற்கான முயற்சிதான் ஏதாவது எடுத்திருக்கின்ருர்களா? வெனப்பார்க்கில், அவ்வாறின்றி மேலும், மேலும், அவர்களைத் துன்புறுத்தி அட்டையைப் போல் ஒட்டிக்கொண்டு இரத்தத்தை உறிஞ்சுவதிலேயே கண்ணும்கருத்துமாயிருந்துவருகிருர்கள் என்பதை நாம் நிதர்சனமாகக் காணலாம். அதிலும் குறிப்பாக புலவர்களால், புண்ணியபூமி யென்று புகழப்படும், நம்இந்தியாவில் கண்கூடு. மற்றநாடுகளைவிட நமதிந்தியா நாட்டிலோ வெனில், ஏழைமக்களின் தொகை ஜாஸ்தியாக நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போகின்றதென்பதை அரசாங்கக்கெஜெட்டின் மூலம் அறியலாம். இந்நாட்டில் தோன்றி மறைந்தவர்களும், தற்சமயம் தோன்றிஇருப்பவர்களுமான எந்தமகானுவது, எந்தஇருடியாவது, எந்த அவதாரபுருடனுவது, எந்தமகாத்மாவாவது, எந்தபுனிதத்தன்மையுள்ளவன் என்று சொல்லிக் கொள்பவனுவது அன்றி பிறரால் செல்லப்படுபவனுவது. ஏழைமக்களின் விடயத்தில் பரிந்துபேசாமலிருந்ததுண்டா? பேச்சளவில், எழுத்தளவில், பேனுமுனையளவில், காலம்கழிக்கிறதே, யொழிய, செய்கையில், நடைமுறையில் மக்களுக்கு நன்மையுண்டா என்பதைச்சிந்தித்துப்பாருங்கள். அவ்வாறு நடைமுறையில் அனுகூலம் ஏற்பட்டிருந்தால், இன்று இந்நாட்டில் தெருக்கள்தோறும், வீடுகள்தோறும், சத்திரங்கள் தோறும், சாவடிகள்தோறும், கரத்தில் மண்சட்டியேந்தி வாடியமுகத்துடனும், கூனியமுதுகுடனும், ஒட்டியவயிறுடனும், ஒருகவாள அன்னத்திற்கு சுணங்கனேடு போர்புரிந்து, காலைமுதல் மாலைவரையில் "அரகராசம்போ மகாதேவா" அம்மணிபிக்ஷாந்தேகி,, என்பனபோன்ற வார்த்தைகளைச் சொல்வதற்கேசெயலற்று தத்தி, தத்தி, உளறிக்கொண்டு சோம்பிக்கிடக்கும் இவ்வேழைமக்களின் பரிதாபகரக்காக்ஷியை காணவியலுமாவென்று தான் கேட்க்கின்றேன்? இப்பரிதாபகரக்காக்ஷி இந்நிலையிலிருக்க, ஒருபுறம் நமது பக்தகோடிகள் "அன்பர்பணிசெய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலைதானே வந்தெய்தும் பராபரமே" என்றும், "எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இறங்கவும்நின் தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே" என்ற பல்லவிகள்பாடுவதும், முஹாரி இழுப்பதும், பஜனைகள்புரிவதும், ஏழைகளுக்குக்கஞ்சி ஊற்றுங்கள், கதரைக்கட்டுங்கள் என்பனபோன்றவார்த்தைகள் தொனிப்பதிலும் ஏதாவது குறைவுண்டா என்பதையும் யோசித்துப்பாருங்கள். கர்னவள்ளல், குமணவள்ளல், தோன்றிய இந்நாட்டில் இன்றையதினம், இவ்விதமான பரிதாபகரக்காக்ஷிகளை தினே, தினே, காண்கிறேமென்ருல் இத்தர்மசீலர்கள் மனமுருகப்பாடும் பக்திரஸக்கீர்த்தனங்களிலும் தாடையில்போட்டுக்கொள்ளும் அறைகளிலும், போடும் தோப்புக்கரணங்களிலும், கட்டும் ஆலயங்களிலும், வாசிக்கும் புராண இதிகாசங்களிலும், தேனெழுகப்பாடும் தேவார திருவாசகங்களிலும், இவர்கள் கொண்டுள்ள கடவுள்பக்தியிலும், ஏதேனும் ஒருகடுகளவாவது ஒழுங்கோ, உண்மையோ, யோக்யதையோ, இருக்கிறதென்று கூறமுடியுமாவென்றுதான் கேட்கின்றேன். அதுவுமன்றிவேஷமும், ஏமாற்றுத்தன்மையும், சூழ்ச்சியும், கொண்ட செயலென்று சொல்வதைவிட வேறென்னசொல்லக்கூடு மென்றுதான் கேட்கின்றேன். மற்றநாடுகளில் இவ்வித சூழ்ச்சிகளெல்லாம் மக்களது பகுத்தறிவின் ஜோதிமுன்னே மாண்டு மடியத்தலைப்பட்டு விட்டன. பிரான்ஸ்நாட்டிலோ ஏழைமக்கள் கண்விழித்து அரசாங்கத்துடன் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்துவிட்டனர். மற்றும் ஜப்பான், சீனு, ஜெர்மன், இட்டாலி, துருக்கி போன்ற நாடுகளில் அரசாங்கம் சிரத்தையெடுத்து ஏழைமக்களுக்கான வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறது. இன்றைய ரஷ்யாவில், "பிச்சைக்காரன் ஒருவன்" தன்னகத்தே இருக்கிருன், என்று நினைப்பதற்கே, வெட்கப்படுகிறது. பல்லாண்டுகட்கு முன்னர் மூடக்கொள்கையில் முதன்மை பெற்றிருந்த ரஷ்யா, ஏழைமக்களின் கிளர்ச்சியின் பயனுப் இவ்விதஉன்னதநிலைமையையடைந்து, ஐந்து வருஷத்திட்டமும் போடப்பட்டாய் விட்டன. ஆனல் இவ்விந்தியாவிலோவென்ருல் மௌனவிரதமும், காந்தி ஜெயந்தியும், மாளவியாஜெயந்திபோன்ற பலவும் கொண்டாடப் பட்டுவருகின்றன.

இத்தகைய துன்பம் இந்தியாவில் மாத்திரந் தானு அல்லது வேறுநாடுகளிலும் ஏற்பட்டு இருக்கின்றதா? ஆம்! வேறுநாடுகளிலும் உண்டு. ஆனல் அங்கு அரசாங்கம் தலையிட்டு ஏழைமக்களுக்கு உதவிபுரிந்து வருகிறது. ஏழைமக்களின் நிலைமை, மக்களையும், நாட்டையும், அரசாங்கத்தையும்' பாதிக்கக்கூடியதா இருப்பதினுல்,, அரசாங்கமும், பிரதிநிதிகளும், தாமதமின்றி இவ்விடயத்தில் தக்ககவனம் செலுத்தி, பரிகாரம் தேடமுன்வர வேண்டியதவசியமேற்பட்டிருக்கிறது. இந்நாட்டில் ஏழைமக்களின் கிளர்ச்சி ஏற்படுகிறவரையில் அரசாங்கத்தை எதிர்பார்ப்பதில் பயனில்லை. ஏழைமக்களுக்குத் தக்க பரிகாரம் ஏற்பட்டுவிடுமேல் இந்தியாவின் வறுமைநோய்பறந்து போகும், எப்படியெனில்? பலவிதத்தொழில்கள் இந்நாட்டில் தோன்றிவிடுவதினுலும், இந்நாட்டுப்பணம் வெளியில் போகாமல் நின்றுவிடுவதினுலுமேயாம். சுயராஜ்யம், பூரணசுயேச்சை எனப்பல்லவிபாடிக்கூச்சலிடும் மகாநாடுகளைக்கூட்டி வாயளவில் பேசிவிட்டு வருவதைக்காட்டிலும், இத்தகைய விடயங்களில் ஈடுபட்டு சிறிது தொண்டாற்றினுலும் உண்மையான நன்மைகள் ஏற்படக்கூடும். இதை அனுபவத்தில் கண்டறிந்த பிறகுதான் திரு ஈ. வெ. இராமசாமியாரால் சுயமரியாதை இயக்கங்கண்டு மக்களுக்குப் போதிக்கப்பட்டு வருவதாகும். இந்நாட்டில் இவ்வியக்கந் தோன்றி ஏழாண்டுகள் தான்ஆனபோதிலும் இது மக்களுக்குச் செய்திருக்கும் பணியை இங்குவிவரித்து எழுதஇயலாது. இறுதியாக உணர்ச்சிமிக்குற்ற இளஞ்சிருர்களாலும், இச்சுயமரியாதை (சமதர்மஇயக்கம்) இயக்கத்தினரின் இடை விடாத உழைப்பின் பயனுலுமே இந்தியநாடு என் இவ்வுலகமே முன்னேற்றமடையக்கூடுமேயல்லாது வேறுஎவ்விதவழிகளாலும் முற்போக்கடைய மார்க்கமில்லை என்பதாக, அனுபவத்தில் அறிவீர்களென உறுதிகூறுகிறேன்.

## கிருஷ்ணகிரியூனியன் பஞ்சாயத்து தேர்தல்.

கிருஷ்ணகிரியூனியன் பஞ்சாயத்துபோர்டு தேர்தல் சென்ற 23-5-32ல் பதின்மூன்று வார்டுகளில் நடைபெற்றது. அதில்பார்ப்பனர்களும் பார்ப்பனரல்லாதாரும் போட்டிபோட்டதில் பார்ப்பனரல்லாதாரேஅதிக வோட்டுகளால் வெற்றிபெற்றனர். என்று ஒருநிருபர்எழுதுகிருர்.

## சென்னிமலை.

### பஞ்சாயத்து போர்டு தலைவருக்கு உபசாரம்.

1-6-32ல் இவ்வூர் பஞ்சாயத்து போர்டு சாதாரணமீட்டிங்கு தலைவர் திரு. மு. பழனியப்பமுதலியார் அவர்களின் தலைமையில் நடை பெற்றது. அதுபோது தலைவர் அவர்களால் தயாரிக்கப்பட்ட வருஷாந்திர அறிக்கை வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதுடன் மற்றும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பிறகு தலைவர் திரு. பழனியப்ப முதலியார் ஆவர்கள் தலைமை ஸ்தானம் 10-6-32வுடன் பூர்த்தியடைவதால் அவர் சென்ற 4½ஆண்டுகளாய் தலைவராயிருந்து ஆற்றிய அரிய சேவைகளைப்பாராட்டி அங்கத்தினர்களால் பேசப்பட்டு வந்தனம் கூறப்பட்டதையும், பின்பு தலைவர் அவர்கள் அதற்கு அளித்த பதிலையும் ரிக்கார்டு செய்யப்பட்டபின் கூட்டம முடிவடைந்தது.

பின் அன்று மாலை ஷை போர்டு அங்கத்தினர்களால் தலைவருக்குத்தேநீர் விருந்து நடத்தப்பட்டது. அது சமயம் தலைவருக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்துக்கொடுத்து போட்டோ எடுக்கப்பட்டபின் கூட்டம் கலைந்தது. (நிருபர்)

## சுயமரியாதைத் திருமணங்கள்

### வில்லிவாக்கம்.

29-5-32 ஞாயிற்றுக் கிழமை வில்லிவாக்கம் கொன்னூரில் திரு. பரமானந்தனுக்கும் அன்னபூரணிக்கும்; திரு.நடராஜனுக்கும் முனியம்மாளுக்கும்; சுயமரியாதைத் திருமணங்கள் நடைபெற்றன. தோழர். எஸ். குருசாமி தலைமையில், முதல் மணத்தை திருமதி. குஞ்சிதம் பி,ஏ.எல்,டி. அவர்களும், இரண்டாவது மணத்தை திருமதி. சுந்தரி அவர்களும் நடத்தி வைத்தார்கள்.

### மதுரை.

மதுரை, பொன்னகரம், திரு. கோவிந்த சாமிக்கும் திருமதி. லீலா புஷ்பத்திற்கும் 22-5-32ல்,பல அன்பர்கள் முன்னிலையில், சுயமரியாதை மணம் சிறப்பாக நடை பெற்றது.

இவ்வூரிலேயே 26-5-32ல் திரு. கிருஷ்ணசாமிக்கும் திருமதி. ஆண்டாளுக்கும் பல அன்பர்கள் முன்னிலையில் சுயமரியாதை மணம் விமரிசையாக நடைபெற்றது.

### மைலாப்பூர்.

சென்னை, மயிலாப்பூர், சோலையப்ப முதலித்தெரு 18 வது எண் இல்லத்தில் திரு. சின்னுசாமி நாட்டார் அவர்களின் குமாரர், திரு. பஞ்சாட்சரம் அவர்களுக்கும், திரு. குப்புசாமி நாட்டார் அவர்களின் குமாரி, திருமதி. ருக்மணி அம்மாளுக்கும் 25-5-32ல் பார்ப்பனீயம் அற்ற திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

# சிவபெருமானுக்கு

## எனது பகிரங்கக் கடிதம்.

சிவ!

உம்மை எங்கும் நிறைந்தவரென்று உமது பக்தர்கள் (சைவர்) சொல்லுகிறார்கள். அதற்குப்பல ஆதாரங்களும் காட்டுகின்றனர்.

சைவர்கட்குப்பிரபல பிரமாண நூல் பன்னிருதிருமுறைகளாம். அவற்றுட் பெரியபுராணம், பன்னிரண்டாம் திருமுறையாகும். இதில் உமது நிறைவுக்குக்கிரகணம் பிடிக்கிறது. சுந்தர மூர்த்தி நாயனார் புராணத்துப்பின்வருமாறு காணப்படுகின்றது. (ஆறுமுக நாவலர் பெரிய புராணம் வசனம் பார்க்க) "ஒரு நாள் சுந்தரமூர்த்தி நாயனார்............... மின்போல மறைந்த சங்கிலியாரைக் கண்டு அவர்மேல் ஆசைகொண்டு புறத்திலேபோய் புஷ்பமண்டபத்திலேஒருபக்கத்திலே திரைக்குள்ளே நின்று ஒருபெண் என்னுடைய மனசைக்கவர்ந்து கொண்டாள் அவள் யார் என்றார்...............சங்கிலியாரைத்தமக்குக்தருளும்படி வேண்டினார்............ அதற்குச்சங்கிலியார் சுவாமீ! அடியேன் தேவரீருடைய ஆஞ்ஞையைத்தலைமேற்கொண்டேன் தேவரீர் சொல்லியருளிய நாயனருக்கேமனைவியாதற்குரியேன். ஆயின் அவர் திருவாரூரினிடத்தே மிகுந்த சந்தோஷத்தோடு வசிக்கின்றவர் என்பதைத்தேவரீர் திருவுளங்கொண்டருளும் என்று விண்ணப்பஞ்செய்தார். அதுகேட்ட கடவுள் (நீ அதாவது சிவன்) பெண்ணே! அந்தச்சுந்தரன் உன்னைப்பிரிந்து போகேன் என்று ஒரு சபதஞ்செய்து தருவான் என்று சொல்லியருளி சுந்தரமூர்த்திநாயனாரிடத்திற் சென்று நாம் சங்கிலியிடத்திலேயே போய் உன்னெண்ணத்தைத் தெரிவித்தோம். நான் உன்னைப்பிரிந்து செல்லேன் என்று நீ அவளுக்குச் சபதஞ் செய்து கொடுத்தால் அவள் உடன்படுவாள். இனி உனக்கு நாம் என்ன செய்யவேண்டுமென்றருளிச் செய்ய, சுந்தரமூர்த்தி நாயனார் இக்கடவு (உம் அதாவது சிவனுடைய) ளுடைய பிறதலங்களையும் சென்று வணங்கவிரும்புகின்ற அடியேனுக்கு இது விலக்காகும் என்று நினைத்து அவரை (உம்மை) வணங்கிச்சுவாமீ! சங்கிலிக்கு நான் உன்னைப்பிரியேன் என்று சபதஞ்செய்து கொடுக்கும் பொருட்டு அடியேன் அவளோடு தேவரீருடைய ஆலயத்துக்கு வந்தால் அப்பொழுது தேவரீர் அவ்வாலயத்தை விட்டுத்திருமகிழின் கீழிருந்தருளல் வேண்டும் என்று பிரார்த்தித்தார். அதற்குக்கடவுள் (நீர், அதாவது சிவன்) இசைந்தருளி சங்கிலியாரிடத்திலே முன்போலப் போய் பெண்ணே சுந்தரன் உனக்குச் சபதஞ்செய்து தருதற்கு உடன்பட்டிருக்கிறான்; அவன் நம்முடைய ஆலயத்திலே சபதம் செய்து தருவதற்குவந்தால் நீ அதற்குஉடன்படாமல் மகிழின் கீழேசபதஞ்செய்துதரும்படி கேள்" என்பதே இது நான் சொல்வதன்று. உமது பக்தர் கூறியது. இச்சரிதப்படி நீர் எங்கும் நிறைந்தவராவதெப்படி? கோவிலினுள்ளிருந்தால் மகிழின் கீழில்லை மகிழின் கீழிருந்தாற் கோயிலினுள்ளில்லை என்றல்லவா பெறப்படுகின்றது. அல்லாவிடில் மகிழின்கீழ்ப்போயிருக்கும்படி கேட்டதும் நீர் சங்கிலிக்குமகிழின் கீழே சபதஞ் செய்துதரும்படி கேள் எனச்சொல்லியதும் என்னாகும். ஏ! சிவனே!! நீரும் உம்மை எங்கும் நிறைந்த ஆசாமி அல்லவென்று ஒத்துக்கொண்டவர் தானே. அந்தோ பாவம்! உமது பக்தர்கள் உம்மையே மாற்றிவிட்டார்களே நான் இப்படிச்சொல்லுவதால் உமது ஆட்கள் (சைவர்) என்னைக் கோபிப்பார்கள் அதற்கு நான் பொறுப்பாளியல்ல. ஏனெனில் கந்தபுராணம் காமதகனப்படலத்து "உலகுயிர் எல்லாம் பெருமை பொருந்திய சூத்திரப்பாவை என்றும் அவைகளை ஆட்டுபவர் நீரென்றும், மேருப்படலத்தில் 'நீர்போகமில்லாமல் இருந்தபோது உலகில் ஒருயிரும் போகஞ்செய்யவில்லை யென்றும்" கூறப்படுகின்றது. ஏ சிவனே! இதன்படி பார்த்தால் நீரே ஒவ்வோர் செயலையும் செய்விப்பவரும் ஆகின்றீர். எனவே நான் உம்மையிட்டுக்குற்றமாய்எழுதுவது நீர்எழுதுவிப்பதுதானேநான் குற்றவாளியாவதெங்ஙனம். பேஷ்! நல்லமாதிரி ஒருவன் களவெடுக்கிறான். ஏன் எடுக்கிறான். நீர் களவெடுக்கிறீர்—எடுப்பிக்கிறீர். நான் புலாலுண்ணுகிறேன். என்? நீர் புலால் உண்ணுகிறீர், உண்பிக்கிறீர். எனவே இவைகளால் எவருக்காவது பாவபுண்ணியமுண்டா? இல்லையல்லவா? ஏன் சாமி! நீர் தக்கன் வேள்வியில் ஆட்டிறைச்சிதின்றது உண்மைதானே! உமது பக்தர் மாணிக்கவாசகர் 'சாவமுன்னாட்தக்கன் வேள்வித்தகர்தின்று" என்று கூறியிருக்கிறாரே. தகர் என்றால் 'ஆடு' என்பது பொருளல்லவா? சீ! மானங்கெட்ட சைவக்கடவுளே! உமக்கும் ஒரு பக்தரா? நீர் சுயமரியாதைக்காரரோடாதல் சேர்ந்தால் நன்றாய் வாழலாம் உமது பக்தர்கள் உம்மைக்கேவலப்படுத்தினது போதாதா? வந்தனம். பிறபின்

இங்ஙனம், சூரன்.

---

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

அல்லது பின்னையதைப் பார்க்க வேண்டுமென்றாலும் சரியே!

உங்கள் கடவுள்களிடமும், அவர்களது திருவிளையாடல்களிடமும் உங்கட்கு இன்னும் நம்பிக்கை இருக்குமானால், இவற்றில் உங்களுக்கு உள்ளன்பிருக்குமானால், புராணாதி, இதிகாசங்கள் இன்னும் உங்களிடம் மதிப்புப் பெற்றிருக்குமானால், "ஆண்டான் அடிமை"களெனக் கூறிக்கொள்ள உங்களுக்கு நாவிருக்குமானால், உலகம் உங்களைக் கேவலம் "பேடிகள்" என எள்ளி நகையாடாதிருக்க வேண்டுமானால், உங்கள் மூல பல சைந்நியங்களாகிய பழம் புராணக் குப்பைகளையெல்லாம்வாரிக்கொண்டு உங்கள் கடவுள்களிடமும் அடிதொழுது, முடிவணங்கித்தெண்டனிட்டு 'வரம்' பெற்றுக் கொண்டு "வெளியில் வாருங்கள் வாதம்புரிவோம்' "மந்திரமாவது நீறு" என்று சாம்பலை மேலே பூசியவுடன் நோய் தீரும் நேர்மையையும், ஏடு எதிர்த்துச் செற திருவிளையாடலின் திறத்தினையும், நெருப்பிலிட்ட ஓலை கருகாத உயர்ந்த பக்தியையும், பார்த்து விடுவோம்! "கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே" எனப்பதிகம்பாடிக் கடலில் கருங்கல்லுடன் மிதக்கத் தக்க பண்டிதர்கள், பாவலர்கள், சிவ நேயர்கள், சித்தாந்த வேதாந்திகள் யாரேனுமிருந்தாலும் வெளியில் வந்து விடட்டும்! இன்னும், நரியைப் பரியாக்கியும், எலும்பைப் பெண்ணுருவாக்கியும், அடைத்த கதவினைப் பாட்டுப்பாடித் திறந்தும் காட்ட எம்பெருமான் திரு அவதாரம் செய்து வரினும் அதனையும் மேளதாளத்துடன் வரவேற்கிறோம்! விசுவாமித்திர ராஜன் விடுத்த பாணங்களையெல்லாம் தனது யோக தண்டில் சிதைந்து மடியச் செய்த "வசிஷ்ட" மகரிஷியின் சந்ததியாருக்கு அதில் நம்பிக்கை இருப்பின் அவர்களும் வரட்டும்! ஒரு கை பார்த்து விடுவோம்! இதிலிருந்தாவது வைதீகப் பெரியார்(?)களாகிய உங்களின் கையிருப்பும் ஆதியனாதியான உங்களின் பரம்பொருள்களின் சாமர்த்தியமும், சுயமரியாதையினரின் அறிவுத் தன்மையும் பொது மக்களுக்கு பட்டப்பகல் வெட்ட வெளிச்சமாக விளங்கி விடட்டும். உங்களுடன் வாதமிட எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் சுயமரியாதையினர் வெகு ஆவலாய் "வழி மேல் விழி வைத்து" உங்கள் வருகையை எதிர் நோக்கியிருக்கிறார்கள் இப்படிப்பட்ட இக்கட்டான சமயங்களில், உங்களது முன்னோர்களைப் போல் நீங்களும் வெளியில் வந்து வாதம் புரிந்து உங்கள் கொள்கைகளை நிலை நாட்டுவது தான் நேர்மையும், மனிதர்கள் செய்யத் தக்க செய்கையுமாகும்!

இது வரையில் சுயமரியாதையினர் ஒவ்வொரு பட்டினத்திலும், ஒவ்வொரு குக்கிராமத்திலும், வாதமிட உங்களை அறை கூவி அழைத்திருக்கிறார்கள். அச்சமயங்களிலெல்லாம் உங்களில் எந்தப் பிராணியும் அங்கு தலை காட்டவே காணோம்! நேருக்கு நேர் நின்று நேரிய முறையில் வாதம் புரிந்து கொள்கையை நிலை நாட்டுவதை விட்டு, "ஆளில்லாத இடத்தில் அசுவமேத யாகம் செய்வது போல" மூலை முடுக்குகளிலும் சந்து பொந்துகளிலும், நரிகள் போலும், நண்டு நத்தைகள் போலும் பதுங்கிக் கொண்டு பாமர மக்களிடம், சாமி, பூதம் என அரட்டையடித்து வயிறு வளர்ப்பது வெட்கங்கெட்ட செய்கையேயாகும்.

---

## திருப்பூர்

## டி. மு. கோர்ட்டு.

O. P. No. 15 of 32.

சீதம்மாள்—மனுதாரி.

லக்ஷ்மியம்மாள்—எதிர்மனுதாரி.

### நோட்டீஸ்.

ஷை நெம்பரில் திருப்பூர் டி.மு. கோர்ட்டில் ஷை மனுதாரி கஸ்பா அவனாசியிலிருந்து இப்போது இறந்துபோன மனுதாரியின் தகப்பன் ஸ்ரீனிவாசய்யர் தனக்கு எழுதிவைத்திருக்கும் உயில் சாசனத்தில் கண்ட கடனை வசூலிக்க தனக்கு சக்ஸஷன் சர்டிபிகேட்டு கொடுக்கவேணுமாய் மனுப்போட்டு அது 27-6-32ல் வாய்தாப் போடப்பட்டிருக்கிறது. அதுவிஷயமாய் ஆக்ஷேபிக்கக்கூடியவர்கள் ஷை 27-6-32ல் ஷை கோர்ட்டில் காலை 10 மணிக்கே ஆஜராகி தங்களுக்குள்ள ஆக்ஷேபணைகளை தெரிவித்துக் கொள்ளவேண்டியது. அந்தப்படி தெரிவித்துக்கொள்ளாத வகையில் ஷை விஷயமாய் ஒரு கக்ஷியாக தீர்மானிக்கப்படும்.

K. R. Varadaraja Ayangar
B. A. B. L.
Pleader for Petitioner,
திருப்பூர் 6-5-32.

---

# அர்த்தமற்ற சடங்குகளை அடியோடு ஒழியுங்கள்!

(செல்வி. சிவகாமி சிதம்பரனார்)

நமது நாட்டில் நடைபெறும் அர்த்தமற்ற சடங்குகளுக்கோர் எல்லையேகிடையாது ஏதேனுமொரு காரியத்தைச்செய்ய ஆரம்பிக்கும்போதும், அக்காரியங்களை முடிவு செய்யும்போதும் பைத்தியக்காரவிதமாக எதெதோ சடங்குகள் செய்து வருகிறார்கள். இச்சடங்குகள் எதற்காகச்செய்கிறோம் இதனால் என்னபலன் உண்டு என்பதே அவர்களுக்குத்தெரியவில்லை. கேட்டால் "ஏதோ முன்னோர் செய்தது; அதை ஏன் நாம் விடவேண்டும்?" என்று கூறுவார்கள். எத்தனை கஷ்டப்பட்டாலும் கடன்பட்டாவது பயித்தியக்காரவிதமான இச்சடங்குகளை நம்நாட்டு மக்கள் செய்யாமல் விடுவதில்லை.

நம்மக்களின் மூடத்தனமான சடங்குகளின் காரணத்தினால் நம் நாட்டில் அழியும் செல்வங்களுக்கோர் அளவேகிடையாது. கோடிக்கணக்கில் அழிகிறது. இக்கொடிய சடங்கு என்னும் பழக்கத்தினால் ஏழை மக்கள்படும் பாடோசொல்லத்தரமன்று. கையில் காசு இல்லை; சடங்குகள் வேண்டாம்; என்ற எண்ணமே உண்டாகிறதில்லை. ஏன்! பழக்க வழக்கமென்னும் இருளால் சூழப்பட்ட இந்தியாவன்றோ இப்புண்ணியநாடு.

முற்போக்கடைந்த மற்றநாட்டினர் கேட்டாலும், பார்த்தாலும் பரிகசித்துச்சிரிக்கக்கூடிய சடங்குகளைப்பற்றிக்கொஞ்சம் கவனிப்போம். மக்கள் பிறப்பதற்குமுன்பே, தாயின் கெர்ப்பத்திலிருக்கும்போதே பொல்லாத சடங்குகள் ஆரம்பமாகிவிடுகின்றன. 5மாத கெர்ப்பத்தில் சடங்கு 7-மாத கெர்ப்பத்தில் சடங்கு, குழந்தைபிறந்த அன்றுசடங்கு, பத்தாவது நாள் சடங்கு, 16-ம்நாள் சடங்கு அக்குழந்தை பால் குடிக்கச்சடங்கு, குழந்தையை வெளியில் கொண்டுபோகச்சடங்குடன் முதல்முதல் கோவிலுக்குத்தான் கொண்டுபோக வேண்டும் அப்போதே பிடித்தது சனியன், பிறகு பெயரிடும் சடங்கு குழந்தைக்குப் பல் முளைத்தால் சடங்கு, குழந்தைக்கு ஓர் வயதானால் முடி எடுக்கும் சடங்கும், காது குத்தும் சடங்கும் வெகு ஆடம்பரமாக ஆயிரக்கணக்கான பொருள் செலவில் நடைபெறும். தோளில்கயிறணியும் வகுப்பினராய் இருந்தால் ஆண்பிள்ளைகளுக்கு பூணூல் கல்யாணச் சடங்கு நடைபெறும். 5-வயதானால் பள்ளிக்கூடத்திற்கனுப்பும் சடங்கு, பெண் குழந்தையாய் இருந்தால் ருதுசாந்தி சடங்கு பிரமாதமாய் நடைபெறும். பிறகு கல்யாண நிச்சயச் சடங்கு.

கல்யாணச்சடங்கைப்பற்றி நான் ஒன்றும் கூறுவதற்கில்லை இவைகளுக்கெல்லாம் தலைவரான சடங்கு அதுவே புதுமாப்பிள்ளை க்ஷவரம் செய்துகொள்ளும் சடங்கு. வெட்கக்கேடான படுக்கை அறைச்சடங்கை எப்பாடுபட்டாவது வெகு ஆடம்பரமாக நடத்தத்தவறுவதே கிடையாது நமது இந்தியர்கள் 60 வயதானதும் தம்பதிகளுக்கு அப்போது ஒரு புதுக்கல்யாணம் நடைபெறும். இறந்த பின்னும் இச்சடங்கென்னும் பேய் சும்மாவிடுவதில்லை. இறந்த மூன்றாம் நாள் சடங்கு, எட்டாம் நாள் சடங்கு, 16-ம்நாள் சடங்கு மாதச் சடங்கு, வருஷ சடங்கு என்று பிறந்தது முதல், இறந்து மறைந்த பிறகும் அர்த்தமற்ற சடங்கென்னும் வலையில் சிக்கியழும் ஓ! எந்தாய் நாட்டுமக்களே! இவ்விதம் தொட்டதற்கெல்லாம் சடங்கு, சடங்கென்னும் மீளா இழிநிலையுடைய இந்திய மக்களே! நீங்கள் செய்யும் சடங்குகளால் உங்களுக்காவது அல்லது நாட்டிற்காவது ஒரு சிறு நன்மை உண்டா? சடங்குகள் செய்யாவிட்டால் ஏதாவது தீங்குதான் ஏற்படுமா? என்றாய் பகுத்தறிவை பிரயோசனப்படுத்தி யோசனை செய்துபாருங்கள். இச்சடங்குகள் ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு ஜாதிக்கும் ஒவ்வொருவிதமாய் நடைபெறுகிறது. அவைகளை விவரிக்கின் பெருகுமென்றஞ்சி சுருக்கி எழுதுகிறேன்.

இக்கணக்கற்ற சடங்குகளுக்குள் பெண்கள் பருவமடைந்தால் ருதுசாந்தி என்னும் சடங்கு நடத்துகிறார்களே. அச்சடங்குஎவ்வளவுவெட்கக்கேடானதும், முட்டாள் செய்கையானதும், அவமானமானதும், பரிகசிப்புக் கிடமானதும் பெண்களை இழிவுபடுத்தும் விதமானதுமான சடங்கு என்பதைச்சற்று ஆழ்ந்து யோசித்துப்பாருங்கள். வெட்கம்! வெட்கம்!! அன்று அவ்வீட்டில் மேளதாளத்துடன் நடைபெறும் பெண்களின் ஆர்ப்பாட்டத்தைப் பார்த்தால் வழியோடு போகிறவர்கள்கூட இவ்வீட்டில் பெண் ருதுவாகி இருக்கிறது என்பதை சொல்லாமலே அறிந்துகொள்ளலாம். ருதுவான நாள் முதல் 5-நாள் வரையில் பலவிதமாய் அப்பெண்ணுக்கு வேஷங்கள் போடுவார்கள். விளம்பர அழைப்புத்தாள் வழங்குவார்கள், வீடுவீடாய்ச்சென்று அழைப்பார்கள். ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் கூடுவார்கள். மத்தியில் மரம், செடி, படுதா, வர்ணக்காகிதம் இவைகளால் அலங்கரிக்கப்பட்ட மேடையின்மீது ஒவ்வொரு நாளும் மாலை 4-மணி முதல் 7-மணிவரையில் மகாலட்சுமி வேஷத்துடன் தாமரைப் பூவில் நின்று கொண்டிருக்கவேண்டும். சரஸ்வதி வேஷம்; ருதுவான பெண்களுக்கு கிருஷ்ணன் வேஷமும், வேறு இருபெண்களுக்கு சத்தியபாமா, ருக்குமணி வேஷமும் போடுதல்; ராமர் லக்ஷ்மணர் சீதை வேஷம்; போடுதல் மோகினி, வேடன், மணதம்பதிகள், வேஷம்; ரெங்கநாதர் பள்ளி கொண்டிருப்பதுபோல் வேஷம்; குறவன் குறத்தி வேஷம்; பாரசீகதாசி வேஷம், இவ்வாறெல்லாம் பல வேஷங்கள் போட்டு மேடையில் நிறுத்தி மேளக்கச்சேரியும், தாசி நடனமும் நடத்தி, வந்திருக்கும் ஜனங்களுக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வோர் விதமான பலகாரங்களும், பழங்களும், வழங்குகிறார்கள். பெரியோர்களே! நாடகங்களைப்பழிப்பீர்கள்! கெடுதல் என்று கூறுவீர்கள்! ஆனால் உங்கள் வீட்டு ருதுவான பெண்களை ஆயிரக்கணக்கான ஆண்களின் முன்னிலையில் பலவிதமான பயித்தியக்கார வேஷத்துடன் பதுமையைப்போல் வீற்றிருக்கச்செய்கிறீர்கள்.

இந்த ருதுச்சடங்கு செய்வது எதற்கு? எங்கள் வீட்டில் பெண் பக்குவமடைந்திருக்கிறது பாருங்கள்! வேண்டுவோர் கேட்கலாம்' என்று விளம்பரம் செய்வது போலல்லவா தோன்றுகிறது. அதற்கு இப்படிப்பட்ட கஷ்டங்களும், நஷ்டங்களும்எதற்கு? இச்சடங்கு உங்களுக்கு இழிவாய்த் தோன்றவில்லையா?

ஆண்கள் ஒருவாறு இருந்தாலும் இந்த சடங்கு விஷயத்தில் பெண்கள் கொஞ்சமும் தவறுவதில்லை. இந்திய மக்களின் அறியாமையை விளக்குவதற்கு இந்த ஒரு பயித்தியக்காரச்சடங்கே போதுமானது. சகோதரிகளே! பெண் சமூகத்திற்கு எவ்வளவு இழிவும்,வெட்கமும் நிறைந்தது ருது சடங்கு என்பதை நன்றாய்யோசனை செய்து பாருங்கள். பருவமடைந்த ஒரு மங்கைக்கு வேஷத்தைப்போட்டு ஆயிரக்கணக்கான ஆண்களின் முன் நிறுத்திவிட்டு அதிகவெட்கம் நிறைந்தவர்களாய் ஒரு அறைக்குள் கும்பலாய் புகுந்து கொண்டு வேடிக்கை பார்ப்பது எதற்கு? அதுவும் ஓர் பெண் அல்லவா?

பொருள்களை வியாபாரத்திற்காக விளம்பரம் செய்வதுபோல நம் நாட்டில் மங்கைப்பருவமடைந்த பெண்களை விளம்பரம் செய்வதுபோன்ற இச்சடங்கைப்பற்றி கொஞ்சமாவது அறிவீர்களானால் பெண்களைப்பொருளெனக்கருதி நடத்தும் இச்சடங்கை நடத்துவீர்களா? சகோதரிகளே! தாய்மார்களே! தன்கையே தனக்குதவி என்ற பழமொழியைப்போல் நம்நாட்டு பெண்கள் சமத்துவம், விடுதலை, பெறவேண்டுமானால் நமக்குள்ளிருக்கும்உதவியற்ற, பொருத்தமற்ற, நன்மையற்ற, அநேக மூடப் பழக்கவழக்கங்களை அறவே ஒழிக்க வேண்டும். அப்போது தான் நாம் தற்போதிருக்கும் இழிநிலையிலிருந்து விடுபடமுடியும். பகுத்தறிவுக்கும், மக்கள் சமூகத்திற்கும் பொருத்தமற்ற பயித்தியக்காரத்தனமான சடங்குகளை அறவே ஒழியுங்கள். அப்போதுதான் நம்நாடும் நன்னிலை பெறும், நாமும் நன்னிலை பெறுவோம்.

---

## சூரண்டை

### ஞானவிலாஸ் சுயமரியாதைச் சங்கம்.

மேற்கண்ட சங்கத்தின் ஆதரவில் விருதுநகர் வி. எஸ். சின்னமணிபாகவதர் அவர்கள் தலைமையில், ஒரு கூட்டம் நடைபெற்றது. திரு. பாகவதர் அவர்களுக்கு மேற்படி சங்கத்தாரால் வரவேற்பு பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. பின் தலைவர் திரு. பாகவதர் அவர்கள் "நமக்குச் சுயமரியாதை வேண்டும்" என்பதை பொருளாகக் கொண்டு சுமார் ஒரு மணி நேரம் சொற்பொழிவு ஆற்றிய பிறகு பலர் பேசியபின் கூட்டம் கலைந்தது. (ஒரு நிருபர்)

---

## கோவை

### தேவாங்கச்சிறுவர் சபை.

மேற்படி சபையின் ஆதரவில் 21-5-32 சனிக்கிழமை மாலை, சங்கத்தலைவர், ராவ்சாகிப். சி. எம். ராமச்சந்திரன் செட்டியார் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் கூடிற்று. அது சமயம் திருவாளர்களான, சி. நஞ்சப்பச் செட்டியார், எ. பொன்னுசாமி ஆகிய இருவரும் காலஞ்சென்ற, வி. அருணாசலஞ்செட்டியாரின் குணாதிசயங்களையும், அவர் செய்த ஊழியங்களையும் பற்றி பேசியபின் ஒரு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டு கூட்டம் கலைந்தது. (ஒரு நிருபர்)

---

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் ஒருவருக்கும் இது வரை ஏற்பட்டதுமில்லை; இனி ஏற்படப் போவதுமில்லை. ஆனால் பிச்சைக்காரர்கள் பெருகவும், தானம் செய்தவர்களும் பிச்சைக்காரர்களாகவுமே அன்னதானம் செய்து வந்திருக்கிறது, அன்னதானம் செய்வதால் புண்ணியம் உண்டாகும் என்ற மூட நம்பிக்கையை ஒழித்து விடுங்கள். பிச்சைக்காரப் புலவர்கள் தங்கள் வயிற்றுப் பிழைப்பு நடக்க வேண்டி ஏமாற்றியிருக்கிறார்கள். எவர் என்ன கூறியிருந்தாலும் இன்று நடைமுறையில் நாம் காண்பதையே சரியான அத்தாட்சியாகக் கொள்ள வேண்டும். அப்படி கவனிப்பின் அன்னதானஞ்செய்வதால் செய்தவருக்கோ, பெற்றவருக்கோ எவ்வித நலமும் ஏற்படாமலிருந்து வந்திருப்பதுடன் இரு சாராருக்கும் கெடுதியே பயந்து வந்திருப்பதைக் காணலாம்.

# தாசில் பிச்சுப்பிள்ளை.

[தோழர். ரா. சௌரிராஜன்]

பிச்சுப் பிள்ளை அபீசுக்குக் கிளம்பினார். "எங்கே? கச்சேரிக்கா?" என்றாள் மனைவி. அவ்வளவு தான்! அபசகுனமாகி விட்டது பிச்சுப்பிள்ளை அடுத்த அடி எடுத்து வைக்க வில்லை. அடங்காக் கோபம் வந்தது. ஆனால் அவரோ பெண்டாட்டிக்கு அடங்கியவர். ஆகையால் மௌனம் சாதித்துக் கோபத்தைத் தணித்துக் கொண்டார். என்ன தான் மனைவிக்குப் பயந்து நடந்தாலும் "போகும் பொழுது எங்கே என்று கேட்கக் கூடாது. என்று எத்தனை நாளைக்குச் சொல்வது" என்று தைரியமாய் கேட்டு விட்டார்.

மறந்து விட்டேன் என்று பார்வதி நகைத்தாள்.

பிச்சுப்பிள்ளை அவ்வூர் தாசில்தார், பி. ஏ. பட்டதாரி. கொஞ்சம் புத்தி கூர்மையுள்ளவர், சகுனம்-ஜாதகம்-திருச்செந்தூர் முருகக் கடவுள்-இவை மூன்றைத் தவிர பிள்ளைக்கு வேறொன்றிலும் நம்பிக்கை கிடையாது. தமிழ் வைத்தியம், இங்கிலீஷ் ஆஸ்பத்திரி இவைகளில் கூட அவருக்கு நம்பிக்கை யிருப்பதில்லை. முன்னொரு நாள் பிள்ளையின் மகள் பங்கஜம் சாகக்கிடந்தாள். வந்து பார்த்த பந்து ஜனங்களெல்லாம் பிழைக்க மாட்டாளென்று பயந்தார்கள். 'ஒரு பெண்ணாயிற்றே இப்படி இருக்கலாமா?" என்று ஊராரெல்லாம் பேசிக் கொண்டார்கள். பிச்சுப் பிள்ளை ஒன்றையும் காதில் வாங்கிக் கொள்ள வில்லை. விதியின் படி நடக்குமென்று முருகனை தியானம் செய்தார். பங்கஜத்திற்கு எழுத்து பலமிருந்தது. கடவுள் அருளும் ஒன்று கூடிற்று பிழைத்துக் கொண்டாள். அது முதல் தலைவலியிலிருந்து ஜன்னி ஜுரம் வரையில் சகல வியாதிகளுக்கும் திருச்செந்தூர் விபூதி தான் மருந்து. அதற்கு மேல் வேலும் மயிலும்.

இவ்விதம் பிச்சுப்பிள்ளையின் குடும்பம் வியாதிகளைத் தாண்டி வந்து கொண்டிருக்கிறது.

பிச்சுப்பிள்ளை கேள்விப்பட்டதை எல்லாம் குருட்டுத் தனமாய் நம்புவது கிடையாது. ஒரு சமயம் அவர் ஒரு தினசரிப் பத்திரிகையைப் பார்க்க நேர்ந்தது. "ருஷ்யாவில் 'கடவுள்' என்ற பேச்சே கூடாது. ஏழை பணக்காரர்களில்லாமல் எல்லோரும் சுகமாக வாழ்கிறார்கள்" என்று பத்திரிகையில் எழுதியிருந்தது. அது முதல் அவர் பத்திரிகையைத் தொடுவது கிடையாது. இவ்வித ஆதாரமற்ற பொய் செய்திகளைஅவர் எப்படி நம்ப முடியும்?

ஒரு நாள் பார்வதி பங்கஜத்திற்கு முடியிறக்க வேண்டாமோ? என்று கேட்டாள்.

பிச்சுப்பிள்ளை அதைப் பற்றி யோசிக்காதவரல்ல. பங்கஜத்திற்கு பதினாறுவயதாகி விட்டது. கலியாணம் செய்ய வேண்டிய காலம் இப்பொழுது அவள் தலையை மொட்டை யடிக்கலாமா? கலியாணம் ஆகவேண்டுமே என்று அவர் கொஞ்சம் யோசித்தார். பார்வதியோ படுநீலி. தாசில் வேலை பார்த்து தர்பார் நடத்தினாலும் பிச்சுப்பிள்ளை அவள் சொல்லைத் தட்டிப் பேச முடியாது. வேறு அவர் என்ன செய்யக் கூடும்?

முருகனின் திருவருளைப் பெற இரண்டு மாத லீவும், இருநூறு ரூபாயும் தேவையாயின.

நல்ல வேளையில் புறப்பட்டு திருச்செந்தூர் போய்ச் சேர்ந்தார்கள். பங்கஜத்தின் தலையை மொட்டையடித்து அபிஷேக ஆராதனைகளை முடித்துக் கொண்டு ஊர் வந்து சேர்ந்தார்கள்.

ஃ ஃ

ஞாயிற்றுக்கிழமை கச்சேரி கிடையாது. ஆகையால் தான் பிச்சுப்பிள்ளை உச்சிக்குடுமியை ஆத்திக்கொண்டு ஒய்யாரமாகசாய்வு நாற்காலியில் படுத்திருக்கிறார்.

பிச்சுப்பிள்ளைக்கு தற்சமயம் நல்ல காலம் ஜாதகப்படி பிரமோஷன் கிடைக்க வேண்டிய சமயம் ஜோஸ்யனோ டிப்டி கலெக்டர் உத்தியோகம் சிக்கிரம் கிடைக்குமென்று சத்தியம்செய்திருக்கிறான்

ஜில்லா கலெக்டர் வெள்ளைக்காரன்-பொல்லாதவன் வேலையில் மிக கண்டிப்பு உள்ளவன் எனினும் இவரிடத்தில் கிளார்க் உத்தியோகம் பார்த்த சுப்பையருக்கு பக்கத்து தாலூகா தாசில்தார் உத்தியோகம் கிடைத்தது. தாசில்தார் ராகவாச்சாரி அடுத்த ஜில்லாவில் டிவிஷனல் ஆபீசராகப் போய்விட்டார்.

ஆகவே பிச்சுப்பிள்ளை எப்பொழுதும் தாசில்தாராக இருந்துகொண்டிருக்க முடியாது.

பிச்சுப்பிள்ளை கச்சேரிவேலையில் அபாரநிபுணர். அவர் அரசாங்கத்திற்குச் செய்திருக்கும்சாதகங்களைப்பார்த்தால் அவருக்கு ஒரு 'ராவ் பகதூர்' பட்டம் கொடுக்கலாம் இப்பேர்ப்பட்ட கெட்டிக்காரர்களுக்கு பிரமோஷன்கூடயில்லை யென்றால் ஆங்கில அரசாட்சியை 'சாத்தான் அரசாங்கம்' என்று கனம் காந்தி சொல்வதில் குற்றமென்ன?

மனிதப்பிரயத்தினத்தில் நடக்கக்கூடியது ஒன்றுமில்லை யென்றும், தெய்வம் கண்திறந்தால் தான் தனக்கு கதி மோட்சமென்பதையும் பிச்சுப்பிள்ளை நன்குணர்ந்து கொண்டார்.

மறுநாளே நமது தாசில்தார் ஜோஸ்யனை வரவழைத்து தன்னுடைய ஜாதகத்தைக்கொடுத்துபார்க்கும்படி சொன்னார்.

கொஞ்ச நேரம் கூட்டி, கழித்து பெருக்கிக்கணக்குப்போட்டு முடித்துக்கொண்டு ஜோஸ்யப்புரோகிதர் மேலும் கீழும் விழித்தார்.

ஜோஸ்யரின் முகமாற்றத்தைக் கவனித்தபிள்ளை 'உள்ளதைச்சொல்லும்' என்றார்.

அய்யர் 'ஜாதகம் அவ்வளவு நன்றாயில்லை' என்று கூறினார். பிள்ளை 'அதற்கென்ன செய்யக் கூடும், என்று கேட்டார் அய்யர் 'பிராயச்சித்தம் செய்யவேண்டும்' என்று அபிப்பிராயப்பட்டார்.

பிராயச்சித்தம் எப்படிசெய்வது என்று பிள்ளை கேட்கப்புகும் முன்னமே அய்யர் தங்களுக்கு ஆண் சந்ததி உண்டானால்தான் கருமம் தொலையும். ஆகையால் மறுதாரம் கலியாணம் செய்து கொள்ளவேண்டும் என்று சொல்லிமுடித்தார்.

இதைக்கேட்ட பங்கஜம் திடுக்கிட்டாள்.

ஆனால் பிள்ளைக்கும் பார்வதிக்கும் சிரிப்புத்தான் வந்தது.

ஃ ஃ

பிச்சுப்பிள்ளை பதினெட்டு வயதுள்ள ஒருபெண்ணைக்கலியாணம் செய்துகொண்டார். அத்துடன் ரோத்துச்செலவுடன் செலவாய் பங்கஜத்திற்கும் கலியாணம் பண்ணிவிட முயற்சித்தார்கள். தலை மொட்டையாயிருக்கும் பொழுது கலியாணம் செய்யக்கூடாது என்று உறவினர்கள் கூறிவிட்டார்கள்.

எனவே பங்கஜத்தின் கலியாணம் அவளுடைய தலைமயிர் நன்றாக வளரும் வரையில் ஒத்திவைக்கப்பட்டது.

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

நன்மையைத் தேர்ந்து தெளிவதா? இத்தகைய கொடுமைகள் நிகழாதிருப்பின் அவர்மக்களைக்காப்பதில்லை என்று நாம் சந்தேகப்படுவோமா? பஞ்சமும், நோயும் புயற்காற்றும் பூகம்பங்களும் இல்லையாயின் கடவுளின் அன்பைப்பற்றிய சங்கை எழுமா? மதாச்சாரியர்கள், கடவுள் மக்களை எல்லாம் ஒன்று போல் படைக்க வில்லை என்பர். அவர் டல வகுப்புகளையும் உருவத்தாலும், நிறத்தாலும், அறிவாலும் வேறு வேறு வகைப்படப் படைத்தார். இதில் அவரது அன்பையும் ஞானத்தையும் காணமுடியுமா? இவர் தம்முன் உயரிய வர்க்கத்தினர் தம் நிலை கண்டகமகிந்து கடவுளை வாழ்த்துவதா? அப்படியாயின் ஏனையோர் தம் நிலைகண்டிறங்கிக் கடவுளைப் பழிப்பதா? அன்றி விலங்கினும் தாம் சிறந்ததுகண்டு தேறுவதா? கடவுள் இத்தகைய உயர்ச்சி தாழ்ச்சிகளை விளைவிக்குங்கால் அவருக்குவலியவர் மற்றவர்களை வருந்தச்செய்து அடிமைகளாக்கி இறுதியில் அழியச்செய்வர் என்பதை அறிவார். அப்படி அவர் செய்திருந்தால்: சிந்தப்போகும் இரத்த வெள்ளத்தையும், பிணக்குவியல் நிறையப்போகும் நிலப்பரப்புக்களையும், தம் பெயரால் மக்கள் எய்தவிருக்கும் இன்னல்கள் ஆயிரக் கணக்கானவற்றையும், இன்னும் எல்லையில்லாத தொல்லைகள் அநந்த கோடி நிகழப்போவதையும், அறிந்திருந்தால் அவரினும் கொடியதொரு பேயுமுளதோ? என்றாலும் ஏன் நாம் கடவுளை நல்லவரென்கிறோம்.

'மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து' மடிந்ததும், நூலோர்கள் செக்கடியில் நொந்ததும், எண்ணற்ற நல்லோர் இதையும்புழுங்கக்கழுவேற்றப் பட்டதும், ஓயாத சவுக்கடியினால் தீராததுன்பறு முதுகுடைய நம்பிக்கையிழந்த அடிமைகளின் கதறுதல்களும், தியாகிகளைப்பெருகுதீயின் புகையிலும், வெப்பிலும்இட்டு மாய்த்ததும், சான்றோர்களைக்குட்டையிலிட்டு துன்புறுத்தியதும், எண்ணற்றவீரர் சுதந்திரம் நாடி கூற்றினுக்குயிர் கோடி கொடுத்தும் அதனைப் பெறாததும்; அடிபட்டுக் குடும்பச் சுமை தாங்கும் அடிமை மனைவியர் அல்லுறுவதும், தாய் முகங்காணாது தவித்திடுமிளங்குழந்தைகள் துக்கப்படுவதும், காற்றிலும் மழையிலும் கடலிலும், ஆற்றிலும் வெள்ளத்திலும் விடத்திலும், ஊற்றிலும் பள்ளத்திலும் திடலிலும், கூற்றுவன் கொள்ளையிடுதலாலும், மாற்றவர், கள்வர், இடிஇவற்றானும், மக்கள் மடிந்ததும்; ஆகிய இன்னோரன்ன பழமையிற்கண்ட பழிகளென்ன! இன்னும் வருகிற இன்னல்கள் எத்தனை!! கொடிய காட்சிகளென்ன!!! இத்தனையும் மனிதவர்க்கத்தை காத்து அருளுகின்ற குணமும் திறனும் படைத்த கடவுள் இல்லை யென்பதையே காட்டுகின்றனவல்லவா? (தொடரும்)

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

தறிவுள்ள மக்கள் பார்த்துக்கொண்டு இருக்க முடியும். உலகத்தில் பொதுவாக இருக்கும் உரிமைகளை தாழ்த்தப்பட்ட வகுப்பாரிடமிருந்து பறித்துக்கொள்வது எவ்வளவு கொடுமையிலும் கொடுமை.

கடவுள்முன் எல்லாரும் ஒன்றுதானென்று வாய் வேதாந்தம் பேசிக்கொண்டு தாழ்த்தப்பட்ட வகுப்பாரைக் கடவுள் இருக்கும் இடமாக கொண்டுள்ள கோயிலில் ஏன் விடக்கூடாது. வேலை இல்லாமல் அடிக்கடி அவதாரம் எடுத்துக்கொண்டு வருகிற இவர்கள் கடவுள் வேண்டாமென்று சொன்னாரா என்றுதான் கேட்கிறோம்.

எல்லாவித மருக்கொடுமைகளுக்கும், கடவுளர்கள் செய்த அக்கிரம செயல்களுக்கும் உள் அருத்தம், வெளி அருத்தம் சொல்லும் பண்டிதர்கள் இதற்கு என்ன அர்த்தம் சொல்லப்போகிறார்கள் என்று கேட்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்கள் சுத்தமாக இல்லையென்று கூப்பாடு போடுவதில் பயனென்ன? ஊன் தின்பவர்களென்று ஓலமிடுவதில் பயனென்ன, உயர்ந்த சாதியர்களும் ஊன் தின்கிறார்கள், அசுத்தமாக இருக்கிறார்கள். இவ்வித குணங்களை உடையவர்களை கோயிலுக்குள் விடும்போது ஏன் தாழ்த்தப்பட்டவர்களை விடக்கூடாது.

ஜாதி என்ற பேயல்லவா கோயிலில் தலைவிரித்துத் தாண்டவமாடுகிறது. ஜாதி கட்டுப்பாட்டால் சில கொடிய பழக்க வழக்கங்கள் நம் நாட்டில் வேரூன்றிப் போய் இருக்கிறது. அக்கிரமச் செயல்களுக்கு ஜாதி ஆதாரமளிக்கின்றது.

கைத்தொழிலில் சிறப்புற்றிருந்த நம் நாடு இப்பொழுது எல்லா வற்றையும் இழந்து உரிமை நீங்கி வயிற்றுப்பிழைப்புக்கு வழியில்லாமல் அரைவயிற்று கஞ்சிக்கு ஆவல்பட்டுக்கொண்டு இருக்கிறது. இதுவெல்லாம் ஜாதிக்கொடுமையன்றோ? அழகிய ஆடைகளை நெய்வோனை இழித்துக்கூறின் அத்தொழில் விருத்தியடைவதெங்கனம், பொன் நகைகளை பொலிவுடன் செய்வோனை இழித்துக்கூறின் அவன் தொழில் எப்படி முன்னேற்றமடையும்.

இனி மேல் சாதியாரென்போராவது தமக்குள் அன்பும் ஒற்றுமையும் பூண்டு ஒழுகுகின்றார்களாவென்றால் அப்படியும் இல்லை. அவர்களுள்ளும் பற்பல சாதி வேற்றுமைகள். ஒரு சிறு வகுப்பினர் மற்றொரு சிறு வகுப்பினரைத் தம்மிற்றாழ்ந்தவர் எனக் கருதி அவரோடு உண்ணல் கலத்தல்களைச் செய்யாமல் இறுமாக்கின்றனர். எந்நேரமுஞ் சாதியுயர்வு தாழ்வுகளைப்பற்றியே பேசுகின்றனரல்லது வேறு விஷயங்களைப்பற்றிப் பேசுகின்றிலர்.

நம்மிந்திய நாட்டவர் அல்லாத வெள்ளைக்காரருள்ளும் அவரோடொத்தார் பிறருள்ளும் இத்தகைய பொல்லாப் போலிச் சாதிக்கட்டுப்பாடுகள் இருக்கின்றனவா? இல்லையே. அவை இல்லாமையின், அவர்கள் தம்மில் ஆண் மக்களும் பெண் மக்களும் தத்தம் இயற்கைக்கு இசைந்தாருடன் இனிது கூடிவாழ இடந்தந்து அவ்வாற்றால் அறிவிலும், ஆண்மையிலுஞ் சிறந்த மக்களைப்பெற்று உலகமெங்குந் தாமாகவே பரவி, எல்லா நலங்களும் எய்தி, அந்நலங்கள் இல்லாத நம் நாட்டவர்களை ஆண்டு வருகிறார்கள்.

இனி இச்சாதி வேற்றுமைக் கட்டுப்பாடுகளுக்கு நம் தமிழ் மாதர்கள் ஆளாகி வருந்துன்பங்கள் கணக்கற்றவை. நமக்குப் படிப்பும் வேண்டாம், பணமும் வேண்டாம், அழகும் வேண்டாம், நல்ல சாதியானாய் மட்டும் இருந்தாற் போதும். அவன் ஏழையாயிருந்தாலும், கல்வியில்லாதவனாயிருந்தாலும், கிழவனாயிருந்தாலும் குற்றமில்லை என்று சொல்லி அழகிய அறிவுள்ள நல்ல இளம் பெண்களை ஒரு மடையனுக்காவது அல்லது ஒரு கிழவனுக்காவது கட்டிவிடுகின்றனர். ஆண் மக்களைப்போலவே பெண் மக்களுக்கும், அறிவுண்டு, இன்பதுன்பங்கள் உணடு, விருப்பு வெறுப்புகள் உண்டு என்று சிறிதும் உணர்கிறார்களில்லை. கல்யாணஞ்செய்து கொள்வதில், தாய் தந்தையரைவிட, மணமகளுக்கும் மணமகனுக்கும், அதிக உரிமை உண்டு என்பதை மறந்து விடுகிறார்கள்.

இசையாதவனுக்குக் கட்டுப்படுத்தப்பட்ட ஓர் ஏழைச்சிறுமி அவனாற் படுந்துன்பங்களைப் பொறுக்கமாட்டாமல் அவனை விட்டு நீங்குவளாயின், அவள்மேல் சிறிதும் இரக்கமில்லாமல் பழி கூறுவாரே எங்கும் உளர். ஒரு கிழவனுக்கு வாழ்க்கைப்படுத்தப்பட்டவள் சில நாட்களில் அவன் இறந்துபோகஅழுதகண்ணுஞ் சிந்திய மூக்குமாய் உயிரற்ற பிணம் போல் காலங்கழிக்கும்படி தன் வாழ்நாள் முழுதுங்கட்டாயப்படுத்தப்படுகின்றனள். அவள் அக்கடுங்கட்டுப்பாட்டிற் சிறிது பிசகுவளாயினும் அவட்குவரும் பழிச்சொல்லுந்துன்பமும் அளவிடப்படா.

இவ்வாறு நம் பெண்மக்களைத்துன்புறுத்தும் ஆடவர்கள் தாமாவது பிசகுபடாது நடக்கின்றார்களா? எனில் அதுவுமில்லை. ஒரு கெட்டவன் எத்தனை முறைவேண்டுமானாலும் தான் சாகுமட்டும் மகளிர் பலரை மணந்து கொள்ளலாம், தனக்குள்ள பொருளையெல்லாங் குடிக்குங், கூத்துக்கும் சூதுக்கும், வம்பு வழக்குக்கும் செலவழித்து விட்டுத் தம் மனைவி மக்களைச் சோற்றுக்கும் துணிக்கும் அலைந்து திரிய விடலாம். தான் எழுபது ஆண்டு ஆனாலும் பதினைந்தாண்டுள்ள ஒரு சிறுமியை மணந்து கொள்ளலாம். இவைகளைக் கேட்பாரில்லை. ஆனால் இவனுக்குப்பிணைக்கப்பட்ட ஏழைச்சிறுமியோ இக்கொடிய சாதிக்கிழவனை விட்டுவிலகுவாளாயின் அவள் உடனே கற்பொழுக்கத்தில் வழுவியவள் ஆய்விடுவளாம். மறுமணம் செய்து கொள்வது சாதிக்குறைவாம்.

பெண்மக்களை ஈ, எறும்பு, கொசு போல் நசுக்கும் இத்தனை சாதிக் கொடுமைகள் நம்நாட்டிலன்றி வேறெந்த நாட்டிலும் காணப்படுவதில்லை. மற்றை நாடுகளில் உள்ள பெண்பாலார் ஆண்பாலாரோடொப்ப எல்லா உரிமைகளும் பெற்று இனிது வாழ்ந்து வருவதால் அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளும்அறிவிலும், அழகிலும், ஆண்மையிலும், பிறநலங்களிலுஞ் சிறந்து உலகிற் பயன்பட்டு வாழ்கின்றனர்.

துன்பத்தில் உழலும் நம் இந்து மாதர்களின் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகளோ, அறிவில்லாமடையராய், அவற்றிற் கேற்ற தீயதன்மையுந் தீய செயலுமுடையராய்த் துன்பவாழ்விற்பட்டு விரைவில் உயிர்மாளுகின்றனர். இவ்வளவுஞ் சாதி வேற்றுமையால் விளைந்த தீவினையாகும்.

ஆகையால் சாதி வேற்றுமையை விலக்க வேண்டுமானால், ஒரு பெண்ணுக்கு ஏற்றவனொருவன் எந்த மரபிற் பிறந்தவனாயிருந்தாலும், அவன் அவளை விரும்புவளாயின் அவனுக்கே அவளை வாழ்க்கைப்படுத்துதல் வேண்டும்.

ஒரு சிறு சாதிக்குள்ளேயே நல்ல மணவாளன் கிடைத்தலரிது. இதனால் அநேக பெண்கள் மணமின்றி இருக்கிறார்கள். ஆகையால் கலப்பு மணத்தை ஆதரித்தல் முதன்மையாகும்.

நாயுடு, முதலியார், செட்டியார், ஐயர், ஐயங்கார் என்ற பட்டங்கள் சாதியைக் குறிக்கிறபடியால் அவைகளை நீக்கி விடுதல் வேண்டும்.

உயர்ந்த சாதியர்களை வீடுகளில் வேலை செய்வதற்கு வைப்பதற்குப் பதிலாக தாழ்த்தப்பட்டவர்களையே வேலைக்கு வைத்துக்கொள்ளவேண்டும்.

சாதியைக்குறிக்கின்ற பூணூல்முதலிய அடையாளங்களை எடுத்து விடுதல் வேண்டும்.

பார்ப்பனர்கள் மற்ற வகுப்பினரை தாசிமகனென்ற பொருளையுடைய பதமாகிய சூத்திரன், சூத்திரச்சி என்று அழைப்பதால் அப்பேர்பட்ட இழிந்த குணமுடையவர்கள் வீட்டில் வேலைக்கும்போதல்கூடாது; நாம் அவர்களை உயர்ந்தவராக கருதவுங்கூடாது.

பார்ப்பனர்கள் நமது வீட்டில் வந்து விசேஷங்களை நடத்தி வைக்க வேண்டுமென்ற எண்ணம் நம்மைவிட்டு அடியோடு தொலைதல் வேண்டும்.

உயர்ந்த சாதி என்று போலி வேஷம் போட்டுக்கொண்டு நம் வீட்டில் உண்ணமாட்டேனென்பவருடன் நாமும் சேர்தல் கூடாது, அவர்களை நாமும் ஒதுக்கிவைக்கவேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களை நாகரிகமடையச்செய்து அவர்களை நம்மோடு சமஉரிமை பெறச்செய்தல் வேண்டும். எந்த இடத்தில் உயர்வு தாழ்வு காட்டப்படுகிறதோ அவ்விடத்திற்கு அடி எடுத்தும் வைக்கக் கூடாது. இவ்வாறு செய்தால் ஒருவாறு சாதிக்கொடுமையை நீக்கிக் கொள்ளலாம்.

## தாலி கட்டியதில் சச்சரவு

(எம். என். கோவிந்தசாமி.)

தோழர். நாகை. காளியப்பன் அவர்கள் வசித்துக் கொண்டிருக்கிற ஊராகிய மதுக்கூர் படப்பக்காடு என்னும் கிராமத்தில், 25-5-32ல் ஒரு வைதீகத் திருமணம் நடந்தது. திருமணம் பழயவழக்கப் படியே, பலசடங்குகளுடன் நடந்து, கடைசியில் தாலி கட்டப்போகும் சமயத்தில், தாலி கட்டுவது யார்? மாப்பிள்ளையா? அல்லது புரோகிதம் செய்ய வந்த பார்ப்பானா என்னு விஷயமாகத் திருமணப் பந்தலில் ஒரு சிறு குழப்பம் ஏற்பட்டது. அதாவது, திரு. காளியப்பன்அவர்கள் முன்னாடியே மாப்பிள்ளைக்குத் தோழனாயிருந்த திரு. சுப்பையன் என்னும் வாலிபரிடம், தாலி கட்டுகிற சமயத்தில் தாலியை வாங்கி, மணமகன் கையில் கொடுத்து, பெண்ணுக்குத்தாலிகட்ட ஏற்பாடு செய்திருந்தார். ஏனென்றால், இந்தப் பக்கங்களிலெல்லாம் புரோகிதம் செய்ய வருகிற பார்ப்பனர்கள்தான் முதலில் தாலியை எடுத்து, பெண்ணின் கழுத்தில் வைத்து, பின் மாப்பிள்ளையை விட்டு, கழுத்தில் வைத்த தாலியை முடிச்சு போடச்சொல்வது வழக்கம். அதே மாதிரிதான் இத்திருமணத்திலும் புரோகிதம் செய்ய வந்த பார்ப்பனர் செய்ய ஆரம்பித்தார் அதுபோது முன்பே சொல்லி வைத்திருந்த மாப்பிள்ளைத் தோழனை வாலியர் புரோகிதர் கையிலிருந்த தாலியை வாங்கி, மணமகன் கையில் கொடுத்து விட்டார். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒருவர் அவ்வாலிபரைப் பிடித்துத் தள்ளினார். இதைப் பார்த்த திரு. காளியப்பனவர்கள் எழுந்து திருமணம் நடக்குமிடத்திற்கு ஓடினார். இதற்குள் மணமகனே தாலியைப் பெண் கழுத்தில் கட்டிவிட்டார். அப்பொழுது அங்கு நின்று கொண்டிருந்த இரண்டொருவர் ஐயரைத்தான் திரு.காளியப்பன் அடிக்க வருகிறார் என்று நினைத்துக் கொண்டு அவர் உட்கார்ந்திருந்த இடத்திற்கே திரும்பிப் போகச் சொல்லிவிட்டார்கள். இது சம்பந்தமாய் மணப்பந்தலில் கடைசி வரையிலும் குழப்பம் இருந்தது. இந்நிகழ்ச்சியை கண்ணுற்ற வாலிபர்களுக்குப்பெரும் உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

## சாவக்சேரிமுஸ்லீம் வாலிபர்சங்கம்.

ஷை சங்கத்தின் பொது கூட்டம் 22-5-32 ல் சங்கஹாலில் திருவாளர் ஜோரி ஹென்ஸ் தலைமையில் நடைபெற்றது. அதுபோது பலஅன்பர்கள் பல அரியவிஷயங்களைப்பற்றி பேசினரென ஒருநிருபர் எழுதுகிறார்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

விஷ்ணுவும், அவர் பெண்ஜாதியும் படுத்திருக்கையில் சிலபிராமணர்கள் அந்தவீட்டிற்குள் போனதாகவும், வேலைக்காரர்கள் தடுத்ததாகவும், வேலைக்காரர்களை பிராமணர்கள்சபித்ததாகவும், அந்த வேலைக்காரர்கள் பூலோகத்தில் ராக்ஷதர்களாகப்பிறந்ததாகவும், அவர்கள் சாபத்தைத்தீர்க்கவிஷ்ணு பூலோகத்தில் அவதாரம் செய்ததாகவும், சொல்லப்படும் தெய்வம் தெய்வமாக விருக்கமுடியுமா? பெண்ஜாதியுடன் தெய்வம் படுத்திருந்தது என்பதே அசம்பாவிதம். அப்படியிருந்தால் அங்கு வருகிறவர்களைக்காவற்காரர்கள் தடுப்பதுமுறையல்லவா? தடுத்த வேலைக்காரர்களை சாபம் கொடுக்கும் ரிஷியும் அந்த சாபத்தை நிறை வேற்றிவைக்கும் தெய்வமுமிருக்குமா? அப்படி இருப்பதாகச் சொல்லப்படும் ரிஷியும், தெய்வமும் நியாயத்திற்கும் முறைக்கும் ஒத்ததாகவில்லையே. பெரியசந்தவனத்தோட்டங்களில் புதிதாகக் காதலிக்கும் ஆண்பெண்கள் உட்கார்ந்துபேசுமிடம் அமைத்து வைப்பது ஆங்கிலோயர் வழக்கம். காதலர்கள் அந்தஇடத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தால் அந்தவழியே மற்றவர்கள் செல்லமாட்டார்கள். இதுசாதாரணம் இந்த ஞானம்கூடவராத ரிஷியையும், தெய்வத்தையும் கட்டி அழுது நாம் ஒழுக்கமும், சன்மார்க்கமும் கற்றுக்கொள்ளுவது எப்படி? அவர்கள் கதைகள்தானே நமக்குச்சமயமாகவிருக்கிறது. தேனொழுகிப், பாலொழுகித்தித்திக்கிறதென்றும் பண்டிதர்களால்சொல்லப்படும் அந்தக்கவியின்பம் ஊனுருக்கி உடல்சுருக்கி உழைக்கிறவர்களின் பணத்தையெல்லாம் பாடறியாமல் பல்லக்கேறிவந்து பார்ப்பாரபக்தகூட்டம் பட்டினியில்லாமலிருக்கப்பக்குவமாய்ச் சொன்ன பாட்டென்பதைப் பண்டிதர்கள் உணரப்பயந்தார்கள்.

என்னருமை அண்ணா! தாங்கள் எப்பொழுதும் முன்னோர் வழி, முன்னோர் அமைப்பு,முன்னோர் போட்ட வேலி என்பதே பேசுகிறீர்கள். ஒரு தகப்பன் குடிசையில் வாழ்ந்துகூலி வேலைசெய்து கூழ்க்குடித்து மகனுக்குக்குவித்துவைத்துப்போன திரவியத்தைக்கொண்டு மகன் மச்சுவீடும் சுதந்திரவேலையும் சுகபோஜனமும், அழகிய பெண்ணும் விரும்புவதுசகஜம்தானே. ஆனால் அளவிற்கு மிஞ்சாமல், முதலைப்பாழ் படுத்தாமல் வருவாயைக்கொண்டு அவரவர்கள் நிலைமையைக்கருதி நடந்து கொள்ள வேண்டுமென்பதில் யாருக்குமாக்ஷேபணையில்லை. உலகமுண்டான நாள் முதற்கொண்டு எந்தப்பெரியவர்கள் அமைப்பும்மாறிக்கொண்டு தான்வருகின்றன. முன்னோர் உங்களுக்கு போட்டவேலியை நீங்கள் உதைத்துத்தள்ளிவிட்டுத் தாழ்ந்தவர்களுக்குப் போட்டவேலியை மட்டும் காப்பாற்ற நினைப்பதுநியாயமல்லவே.

நதிகளெல்லாம் முன்னோர் ஓடின வழியே ஓடிசமுத்திரத்தில் சங்கமமாகாமல் இப்பொழுது புதுவழியான வாய்க்கால் வழியேஓடி வயலில்சங்கமமாகின்றன. வனங்களாகவும், சோலைகளாகவும், மிருகங்கள் வாசம்செய்யுமிடமாகவுமிருந்த மலைகளெல்லாம் இப்பொழுது பூந்தோட்டங்களால் அலங்கரிக்கப்பட்ட மாடமாளிகைகளாகி, டீ. காப்பித்தோட்டங்களாகி மனிதர் வசிக்க ஏற்றவிடங்களாகிவிட்டன. பால், தயிர், நெய், தேன், பஞ்சாமிர்தம் என்று கடலைச் சொல்லி அதுகண்ணிற் கெட்டாது, கைக்குக்கிட்டாது கடவுள் ஒருவர் தான் அங்குசயனித்துக் கொண்டிருப்பார் என்று சொன்ன சமுத்திரம், கண்ணிற்கெட்டி கைக்குக் கிட்டி கணக்கற்றவர்கள் பஞ்சணைமெத்தையில் படுத்துறங்கும் பாட்டைவழியாய்விட்டன. இப்பொழுது உலகத்தின் உருவமே மாறிவிட்டது. சனங்களுடைய நிறம், பாஷை, ஊண் உடைகளெல்லாம் மாறிவிட்டன. இப்படிமாறுந்தன்மையான உலகத்தில் சென்றுவிட்ட காலத்துமுன்னோர்கள் வழிகளையும் சம்பிரதாயங்களையும் நிலைநாட்டப்பார்க்கும் அண்ணா! உங்களுடைய விவகாரங்களில் முன்னோர்வழி எப்படி சென்றுகொண்டிருக்கின்றன என்பதை நீங்கள் கவனிப்பதேயில்லை. கவனித்தீர்களானால் மற்றவர்களைத்துன் புறுத்தவும் தங்கள்லாபத்தைக் கருதியும்சொல்லப்படும் வார்த்தை என்பதையுணர்வீர்கள்.

இந்தவருடமோ ஆகாசம், கிரகங்கள், சோதிடசாஸ்திரங்கள் முதலியவைகள்கூடமாறி விட்டன. சுக்கிரனும்வியாழனும் சூரியனுக்குச்சமீபமாகயிருக்கையில் அக்கினி நட்சத்திரம்உண்டாகுமாம். அந்தசமயம் சமுத்திரமும் சூரிய உஷ்ணத்தால் வற்றிவிடுமென்று சொல்லுகிறார்கள். இந்த வருடமோ அக்கினி நட்சத்திரத்தில் மழைபெய்து சூரியவெப்பத்தை தணித்துபூமியைக்குளிரச்செய்து, ஆறெல்லாம் பெருகிவந்தும் சமுத்திரத்தை வற்றாமல் செய்துவிட்டது உங்களால் சாக்ஷாத்எம்பெருமானென்று சொல்லப்படும் ராமரின் தந்தையான சூரியனும் அசுரகுருவான சுக்கிரனும், தேவகுருவான வியாழனும் முன்னோர்வழியில் நடக்க முடியவில்லை என்றால் மனிதனால் எப்படிமுடியும்? மனிதனை மற்றப்பிராணிகளினின்று பிரித்துக் காட்டுவது எது? சந்தர்ப்பத்தை ஒட்டியநிலைக்கு அறிவை உபயோகப்படுத்திக் கொள்ளுவது தானே! சந்தர்ப்பங்களுக்குத் தக்கபடிமிக நேர்த்தியாக முன்னோர்கள் ஏற்பாடுகளை அமைத்தார்கள் என்றேவைத்துக்கொள்வோம். அமைத்த பிறகும் சந்தர்ப்பங்கள் மாறிக்கொண்டேபோவதால் சமூகமும் மறுபடி புதிய அமைப்பைப்பெற்று வசிக்க வேண்டாமா? அப்படி அல்லாவிட்டால் துன்பமும் தொல்லையும் துலையாதே. முன்னே செல்லவேண்டிய மனிதன் எப்போதும் பின்னால்பார்த்தபடியே சென்றால் துக்கத்திற்கே ஆளாவான். நீங்கள் மட்டும் மேனாடு போங்கள். படியுங்கள். உத்தியோகம் பாருங்கள். ஈனாதகிடாரியின் இடது துடையை உருசியாய் உண்ணுங்கள் நீலகிரிக்குப்போங்கள், மாடன்ஹிந்து ஓட்டலுக்கும் கவர்மெண்டுமாளிகைக்கும் உத்தியோகத்திற்கு அலையுங்கள், குளிருக்குப்பகல் சிகரெட்டும்ராத்திரி பிராண்டியும் குடியுங்கள்இதெல்லாம் உங்கள் முன்னோர்கள் வேலிக்குள்ளிருந்து தானோவந்தது? மற்றவர்களைப் பள்ளியில் சேர்க்கப்படாது. நல்ல தண்ணிகொடுக்கபடாது, வீதியில் போகவிடப்படாது சோற்றுக்கடையில்தடுக்கவேண்டும். சேவகவேலை கூடக்கொடுக்கப்படாது இதுமட்டும் உங்கள் முன்னோர் வேலிக்குள்ளிருந்து நடக்க வேண்டும். இதுதான் உங்கள் நியாயம். பாக்கிநாளைச் சொல்லுகிறேன்.


ANANGARANGA BATIKA.

Safe and sure remedy against SEXUAL DISABILITY & IMPOTENCY. Increase RETAINTIVE POWER and insure PLEASURE FOR ONE HOUR. Even an OLD ONE CAN FULLY ENJOY THE HEAVENLY BLISS derived from sexual inter course. COMPLETE SATISFACTION guaranteed. Money will be refunded in case of failure Price for 40 Pills Rs. 5 only. Sample Phial of 20 Pills Rs 3 only. Please write in English To:

SAILASRAM (K)
Chandanpur (Khulna)
E. B. R.

உங்கள்
கண்ணையும்
காதையும்
கவனித்துக் கொள்ளுங்கள்

பூவிழல் !!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

செவிடு !!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கறையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விடரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works
Beadon St. Calcutta.

"செவிடு"

மற்றெல்லாவித காது நோய்களையும் குணப்படுத்துவது "காமத்எண்ணெயே" ஒரு பாட்டில் வாங்கி உபயோகித்துப் பாருங்கள். பலனுக்கு உத்திரவாதம்.

1 பாட்டல் எண்ணெய் விலை ரூபாய் 1—4—0.

1 பாட்டில் டிராப்பர் உள்பட விலை ரூபாய் 1—8—0.

3 பாட்டல் வாங்குபவர்களுக்கு தபால் செலவு இனாம். இங்கிலீஷில் விண்ணப்பிக்கவும்.

Ballabha & Sons
Pilibhit R. K. Ry., U. P.

ஆனந்தரின்

இந்திய பற்பசை (டூத்பேஸ்ட்)

பற்களைப்பளிங்கு போலாக்கும். எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி,
சென்னை.





ஈரோடு முனிசிபாலிடி.

முனிசிபல் வண்டிப்பேட்டையை (மறு ஏல தேதி முதல்) 31-3-1935 முடிய அனுபவித்துக்கொள்ளும் பாத்தியதையை 11-6-1932 தேதி காலை 9-30 மணிக்கு முனிசிபல் சங்கத்தாரால் பகிரங்கமாக மறு ஏலம் போடப்படும். நிபந்தனைகளை ஆபீசில் நோட்டீஸ் போர்டில் பார்த்துக்கொள்ளலாம்.

(ஒப்பம்) கே. ஏ. ஷேக்தாவுத்,
சேர்மன்.

## Read the "SUPERSTITION OF KHADI"

A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.
Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

*Apply to:—*
Manager "Kudi Arasu" Erode.



## சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1330ம் ஞு வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)
M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.
விலை ரூபா 2—0—0.    வி பி செலவு ரூ. 0—5—0.

மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.



## "சன்மார்க்கன்"

தமிழ்மாதப்பத்திரிகை.

பல அரிய கட்டுரைகளுடன் கைவல்யம்கட்டுரையும் தொடர்ச்சியாக வருகின்றது.

ஆண்டுசந்தா.
உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—8—0.

ஆசிரியர்: —
சுவாமி சிவநேசம்,
"சன்மார்க்கன்" பழனி.



## சுயராஜியம் யாருக்கு?

தோழர் ம. சிங்காரவேலு பி.ஏ., பி. எல்., அவர்களால் எழுதியது. இதில் ஜாதிமதக்கொடுமை, சமூக இன்னல்கள், அரசியல், பொருளாதாரக்கொடுமைகள், காங்கிரசின் போலி வேஷம், தீண்டாமைஒழிப்பதின் அவசியம் முதலியனபற்றி இனிய, எளிய நடையில் வெகு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

பிரதி 1க்கு விலை 0—1—0.

கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.



## காந்தியின் உண்மைத் தோற்றம்.

திரு. காந்தி பரோடா சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தபோது, பொதுமக்கள் அளித்த வரவேற்புக்கு பதிலளிக்குமுகத்தான் தனது சுயராஜிய திட்டத்தைப்பற்றியும், கட்குடி, கதர், மறியல் முதலியன பற்றிதான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப்பற்றியும் செய்த உபந்யாசத்தின் ஆராய்ச்சியாகும்.

21—6—31ந் தேதி வெளியான குடி அரசு தலையங்கத்தை புத்தகமாக்கி வெளியிட்டிருக்கிறோம். இதைப்படிக்கும் அன்பர்கள் காங்கிரசின்யோக்கியதையையும், காந்தியார் கோரும் ராமராஜிய வண்டவாளமும், தொண்டர்கள் செய்யும் போலி மறியல் வேஷத்தின் வெளிப்பகட்டும் கண்டு தெளியலாம்.

100 புஸ்தகங்கள் விலை ரூ. 1—0—0
தபால் சிலவு 0—6—0

கிடைக்குமிடம்:—
மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.



## "குடி அரசு"

ஒவ்வொரு வருஷத்திய குடி அரசும் தனித்தனி வால்யூம்களாக பைண்ட் செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. முதல் வருடம் முதல் ஆறும் வருஷம் வரையில் உள்ள ஆறுவால்யங்கள் இப்பொழுது கிடைக்கும் ஏழாம் வால்யம் பயிண்டாகிக்கொண்டிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

## "ரிவோல்ட்."

ரிவோல்ட் (ஆங்கிலப்பத்திரிகை) முதல்வால்யம் நேர்த்தியாகப் பயிண்டு செய்து விற்பனைக்குத்தயாராயிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

மானேஜர்
"குடி அரசு"
ஈரோடு.



## "சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்வழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.
இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.



## ஆஸ்திக நாஸ்திக

சம்வாதம்

கடவுளைப்பற்றி தெள்ளத் தெளிய ஆராய்ந்து முடிவு கட்டும் ஓர் அரிய நூல். டிம்மி 170 பக்கம் கொண்டது. யாவரும் வாங்கி வாசிப்பதற்காக அடக்க விலைக்கு விற்க ஏற்பாடு செய்திருக்கிறது.

பிரதி 1-க்கு விலை அணா 0 6 0.
6 பிரதிகள் 2 0 0: 12 பிரதிகள் 3 12 0.

தபால் செலவு வேறு.

ஒரு பிரதிவேண்டுவோர் 0-7-6 ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். வி. பி. யில் அனுப்பமுடியாது. ஒரு புஸ்தகத்திற்குமேல் வேண்டுவோர் பாதி முன்பணமாக அனுப்ப வேண்டும். மிச்சத்தை வி. பி. செய்யப்படும்.

நாஸ்திகன்
C. K. குப்புசாமி, சேலம், பட்டுஜவுளி, பெரியகாஞ்சீபுரம்.

# குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணா. 0—8—0

## இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்விகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

## ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

## மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூள்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.

இதன் விலை அணா. 0—2—0

## சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப் பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும்.

இதன் விலை அணா. 0—2—0

## சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமென்பதையும் இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

## ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உரைலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.

இதன் விலை அணா. 0—2—0.

## சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன.

இதன் விலை அணா 0—2—0.

## தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

## பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

## மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்— நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

## அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

## கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0 2—0

## கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ், ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமையாவும், என் எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.

இதன் விலை அணா 0—2—0

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.